www.tamilarangam.net

சரிநிகர்
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி


**தணிக்கை - சுதந்திரம்**

எரிகின்ற நெருப்பணைக்க எண்ணெய் விடு என்னும்
அறிவார்ந்த நீதி அளித்தவளே - பெரியவளே
அம்மாவுன். புதுநீதி அழகுதனைப் பாடின்
சும்மாவே சொட்டாதோ சுவை!

- ஈழமோகம்

இதழ் 82 ஒக்.05~ஒக்.18, 1995 விலை 7.00

# எங்களை எழுத விடு!




இந்த இதழில் வெளியாகியுள்ள அனைத்து விடயங்களும் தணிக்கை அதிகாரிகளின் கத்திரிக்கோலுள் அகப்பட்டே வெளிவந்துள்ளன. மட்டக்களப்பின் நிலைமை தொடர்பான எமது நிருபரின் நேரடி ரிப்போட், மட்டக்களப்பு சுகாதார சேவைகளின் சீர்குலைவு, திருமலையில் இராணுவ நிலை தொடர்பான ஒரு செய்தி, எஸ்.டி.எப் படுகொலைகள் தொடர்பான சில பின்னணித் தகவல்கள், பாதுகாப்பு துணைப்படை தொடர்பான சில விபரங்கள் இஸ்ரேலில் இருந்து வாங்கப்பட்ட ஜெட் விமானங்கள் பற்றிய தகவல்கள், யாழ் தாக்குதல் தொடர்பாக படையினரது அபிப்பிராயங்கள் தொடர்பான அனைத்து விடயங்களும் தணிக்கை அதிகாரிகளின் கத்தரிக்கோல்களுக் குள் முற்றாக அகப்பட்டு விட்டன. நமது வாசகர்களுக்கு நாம் எதைச் சொல்ல வேண்டும் என்பதை இப்போது அவர்களே தீர்மானித்து விடுகிறார்கள். அரசாங்கம் யுத்தம், இராணுவ இரகசியங்கள், படையினரின் மனோ உறுதியைப் பாதிக்கும் செய் திகளை மட்டுமே தணிக்கைக்குட்படுத்தி வருவதாக அறிவித்துள்ள போதும் தணிக் கைகள் என்னவோ மனம் போன போக்கிற்கு செய்யப்பட்டு வருகின்றன. வாசகர்கள் எமது நிலைமையை விளங்கிக் கொள்வார்களென நாம் நம்புகின்றோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"இலங்கையில் ஆயுதப்படையினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை வெளியிடுவதை தடை செய்யும் பொருட்டு ஶ்ரீ லங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நிறைவேற்றியுள்ள தீர்மானம் ஶ்ரீ லங்காவின் சிவில் சமூகத்தை ஜனநாயகப்படுத்துவதற்காக அவரது அரசால் வழங்கப்பட்ட வாக்குறுதியை மோசமாக மீறும் செயலாகக் கொள்ளலாம். இனப்பிரச்சினை தீர்ப்பதாக கூறி அவர் பெற்ற வெற்றியை ஒரு பேனையினால் அவரால் அழித்துவிடப்பட்டது என்று கூட சொல்லலாம்

[redacted]

இதுவரை காலமும் ஒவ்வொரு அரசாங்கமும் வடகிழக்கு பற்றிய அரசாங்கத்தின் யுத்த செய்திகளாக தெரிவித்து வந்த செய்திகள் பற்றிய நம்பகத் தன்மையை உலகமே அறியும். இந்நிலையில் அரசு சார்பற்ற தொடர்பு சாதனங்கள் அனைத்துமே அரசின் செய்திகளை விட மேலதிக செய்திகளையும் அறிந்து வெளியிட்டு வந்துள்ளன.

தணிக்கை

# ப[redacted] சு[redacted] எங்கே ?

மேற்படி செய்தி தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்தநாள் தொடக்கம் அரசாங்கத்துக்கு ஆதரவாக ஒத்துழைத்து வந்த 'ஹிந்து' பத்திரிகையின் செப்டம்பர் 23ம் திகதி இதழிலேயே வெளியிடப்பட்டிருந்தது.

தணிக்கை

[redacted] ஆனால் யுத்தச் செய்தி தணிக்கை கொண்டுவரப்பட்டு மூன்றாவது நாள் சர்வதேச செய்தி ஸ்தாபனங்களுக்கு மட்டும் தணிக்கையை நீக்கியது..

[redacted]

இது இவ்வாறிருக்க இந்த யுத்த செய்தி தணிக்கையை கொண்டு வருவதற்காக அரசாங்கத்துக்குள் நடந்த ரகசிய நடவடிக்கைகளும் அரசாங்கத்தைச் சேர்ந்த அமைச்சரவை உறுப்பினர்களது பங்களிப்பும் வேடிக்கையானது வேதனை தரத்தக்கதுமானவை என்பது குறிப்பிடத்தக்கது.

அரசாங்கக் கட்சியின் கூட்டம் கடந்த செப்டம்பர் 18ம் திகதி நடத்தப்பட்ட போது அதில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மிகக் கடுமையாக கதைத்திருந்தார். 'பத்திரிகைகளுக்கு தகவல் கொடுக்கின்ற அரசாங்க உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்' என்றும் தெரிவித்திருந்தார்.

''அமைச்சரவை கூட்ட செய்திகள் கூட பத்திரிகைகளில் வெளியிடப்படும் போது அரசாங்க கட்சியின் கூட்டம் பற்றிய செய்திகள் வெளியிடப்படுவதை மட்டும் ஏன் எதிர்க்கிறீர்கள்'' என சில உறுப்பினர்கள் கேட்ட போது அதற்கு ''we Know that to do to them, if we catch them (அவர்கள் கிடைத்தால் அவர்களை என்ன செய்ய வேண்டும் என்பது எனக்குத் தெரியும்'' என உயர்கல்வி அமைச்சர் ரீச்சர்ட் பத்திரின கூறியுள்ளார்.

தணிக்கை

இப்படியாக நடந்து முடிந்தது அரசாங்க கட்சிக்கூட்டம். ஆனால் 20ம் திகதி நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அதுபற்றிய முடிவும் உடனேயே எடுக்கப்பட்டது. 21ம் திகதி நள்ளிரவில் 'யுத்தச் செய்தி தணிக்கை' அமுலுக்கு கொண்டுவரப்பட்டது. இதிலுள்ள முக்கிய விடயம் என்னவென்றால் 21ம் திகதி நடத்தப்பட்ட அமைச்சரவையின் பத்திரிகையாளர்கள் மாநாட்டில் கூட இதுபற்றி மூச்சு கூட விடவில்லை அமைச்சரவை பேச்சாளர்கள் இறுதி வரைக்கும் அவ்வளவு தூரம் ரகசியமாகவே வைத்திருந்தார்கள்.

இதுபற்றி ஹிரு பத்திரிகை தெரிவிக்கையில் ''அரசாங்கம் பதவியேற்றதிலிருந்து இந்த ஒரு வருடத்திற்குள் உத்தியோகபூர்வமாக வெளியிடுவதற்கு முன் வெளித் தெரியாது போன முதற் தீர்மானம் இந்த 'யுத்தச் செய்தித் தணிக்கை' என கூறுகிறது.

தணிக்கை

Approved as Amended

Competent Authority

3/10

# முஸ்லீம் அகதிகளின் கதை

**கடந்த இதழில் ஒக. 28ம் திகதி இக்பால் நகருக்குள் நுழைந்த புலிகள் அங்கு வாழ்ந்து வந்த முஸ்லீம்களைத் தாக்கி அவர்களுடைய பொருட்களையும் பறித்துக் கொண்டதோடு அங்கிருந்து உடனடியாக வெளியேறுமாறும் மிரட்டியிருந்ததும் தொடர்பான செய்திகளைப் பிரசுரித்திருந்தோம்.**

**எமது பத்திரிகையாளர் தற்போது அம்முஸ்லீம்கள் தங்கியுள்ள இடத்திற்குச் சென்று சேகரித்த தகவல்களைக் கீழே தருகிறோம்.**

கடந்த மாத இறுதியில் நிலாவெளி ஆறாவது மைல் கல்லிலுள்ள பொலிஸ் காவலரண் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து அருகில் ஏழாவது மைல் கல்லில் குடியிருந்த முஸ்லீம்கள் [redacted] அப்பிரதேசத்தைவிட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளானார்கள்.

தணிக்கை

பங்களைச் சேர்ந்த 1386 பேர் அகதிகளாகியுள்ளனர். இராணுவத்தினர் நினைக்கின்றனர்; நாங்கள் புலிகளை ஆதரிக்கிறோம் என்று. புலிகள் நினைக்கின்றனர்: நாங்கள் தங்களுக்கு எதிரிகள் என்று. இந்தநிலையில் நாங்கள் எங்கே போய் ஒதுங்குவது? என்றார் முகாமிலுள்ள ஒருவர்.

இவர்களது இழிநிலையை அறிந்த திருக்கோணமலை பாராளுமன்ற உறுப்பினர்களான அ.தங்கத்துரை, ஜனாப் அப்துல், மஜீத் நஜீப் ஆகியோர் வந்து பார்வையிட்டதைத் தொடர்ந்தும் முஸ்லீம் காங்கிரஸ் தலைமை தலையிட்டதைத் தொடர்ந்தும்

உடனடியாக சமைத்த உணவு நிவாரணம் வளர்ந்தோருக்கு 25/=ம் சிறுவர்களுக்கு 15/=ம் என்ற வீதத்தில் வழங்கப்பட்டது. சமைத்த உணவு நிவாரணம் மூன்று நாட்களுக்கு மட்டுமே என்பதால் உலர் உணவு நிவாரணத்துக்கு இவர்களது பெயர்கள் பதியப்பட்டுள்ளன. இன்றும் கிடைக்கவில்லை.

நகரில் எங்குமே நல்ல பெயர் எடுக்காத இலங்கை மின்சாரசபை இவர்களிடம் நல்ல பெயர் வாங்கிவிட்டது. உடனடியாக மின்சார வசதிகளைச் செய்து கொடுத்த மின்சார சபையினர் இவர்கள் மனதில் உயர்ந்து நிற்கி

தணிக்கை

இந்த முகாமுக்கு ஒரு தடவை செப். 3இல் அரசாங்க அதிபரும் பிரதேசச் செயலாளரும் இன்னொரு அதிகாரியும் வந்தனர். பிரதேசச் செயலாளர் வேலும் மயிலும் மட்டுமே வாகனத்தை விட்டு இறங்கினாராம். அதிகாரிகளைக் கண்டதும் சமூக சேவையாளரான ஜனாப் சாகுல் ஹமீட் மாஸ்டர் ஓடோடிச் சென்று மக்களின் குறைகளைச் சொல்ல முயன்றிருக்கிறார். இறங்கிய பிரதேசச் செயலாளரையும் வாகனத்தில் ஏறும்படி பணித்த அரசாங்க அதிபர் முகம் கொடுத்துக் கதைக்காமல் விர்ரென்று சென்று விட்டாராம். அந்தளவு துவேஷம் அவருக்கு.

இந்த மக்கள் அகதிகளானது இது முதல் தடவையல்ல. 90 ஜுன் தொடக்கம் 91 செப்டெம்பர் வரை வீடுவாசல்களுக்குச் செல்ல முடியாமல் தெருவில் நின்றவர்களே!

எண்பத்து மூவாயிரம் செலவில் இவர்களுக்கு ஆறு கழிப்பறைகள் கட்டப்பட்டு வருகின்றன. மற்றுமோர் ஆறு கழிப்பறைகள் கட்

தணிக்கை

றார்கள். இரண்டு சிறிய குழாய்கள் நீர் வழங்குகின்றன. இவர்கள் தேவையின் முன் இவை கடுகு போலவே இருக்கின்றன. நீர்த் தட்டுப்பாடு பலமாக நிலவுகின்றது.

காடாகக் கிடந்த அரச காணியொன்றைத் துப்புரவு செய்து தகரத்தாலும்.. ஸீட்டுக்களாலும் ஓலைகளாலும் அடைத்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்தப் பொருட்கள் இவர்களது வீடுகளில் இருந்து கழற்றி வரப்பட்டவையே.

தொழில் பாதிப்பும் உலர் நிவாரணத் தாமதமும் இவர்களைப் பட்டினிக்குத் தள்ளிக் கொண்டிருக்கின்றன. இவர்களது பிரதான தொழில் மீன்பிடித்தலும், தோட்டம் செய்ததுமே. இவை இரண்டுமே நின்று போய்விட்டன.

டுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இவர்களது பகுதியில் இருந்த சித்தூர் முஸ்லீம் கலவன் பாடசாலை தற்போது முகாமில் இயங்குகிறது. ஒரு களஞ்சிய மண்டபத்தில் எட்டாம் ஆண்டு வரையிலான இப்பாடசாலையை கிடைத்த வசதிகளை வைத்துக் கொண்டு உடனடியாகவே ஆரம்பித்து நடத்துகின்ற அதிபர் ஏ.ஆர்.எப்.தாஹா பாராட்டுக்குரியவரே.

இந்தப் பகுதியில் கல்லராவை முகாம் தாக்குதலை அடுத்து இடம் பெயர்ந்த புடைவைக் கட்டுப் பகுதியைச் சேர்ந்த எட்டு முஸ்லீம் குடும்பங்களும், நிலாவெளியைச் சேர்ந்த ஆறு குடும்பங்களும் ஏற்கெனவே முகாம் அமைத்துள்ளன.

நீங்கள் இவற்றைப் படிக்கக் கூடாதாம்!
தணிக்கை அதிகாரிகள் சொல்கிறார்கள்!

[redacted] துயரங்களும் மன உளைச்சல்களும் ஏறத்தாழ ஒரே மாதிரியானவையே!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நீங்கள் இவற்றைப் படிக்கக் கூடாதாம்!
தணிக்கை அதிகாரிகள் சொல்கிறார்கள்!

[redacted]

உண்மையில் இந்தச் செய்தித் தணிக்கை மூலம் அரசாங்கம் செய்ய விரும்புவதெல்லாம் என்ன?

தணிக்கை

காப்பு அமைச்சு இந்தத் தணிக்கை முறையை நடைமுறைப்படுத்தி வருவதாகவும், தகவல் துறை அமைச்சின் வெளிப்பாட்டு சுதந்திரமும் கூட பாதுகாப்பு அமைச்சின் மிரட்டலிற்குப் பலியாகியுள்ளதாகவும் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தணிக்கை

நீங்கள் இவற்றைப் படிக்கக் கூடாதாம்!
தணிக்கை அதிகாரிகள் சொல்கிறார்கள்!

இந்தச் செய்தித் தணிக்கை சட்டபூர்வமாக நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்பிருந்தே அரசாங்கம் செய்தித்துறையினர் மீதான தாக்குதலை' தொடங்கிவிட்டிருந்ததை / பல தடவைகளில் இப்பத்தியில் சுட்டிக் காட்டியிருந்தோம். செய்தியாளர்கள் அரசியல் விமர்சகர்களது மூக்குகளுக்குள்ளால் நாணயக் கயிறைக் கோர்த்து தமது நோக்கத்துக்கேற்ப ஆடுபவர்களாக அவர்களை வைத்திருப்பதில், மற்றெந்த அரசாங்கங்களையும் போலவே இந்த அரசாங்கமும் அக்கறை காட்டி வந்தது. பத்திரிகையாளர்கட்கான ஒழுங்கக் கோவை ஒன்றைக் கொண்டுவருவோம் என்றும், பொறுப்பற்ற விதத்தில் அவர்கள் நடந்து வருகிறார்கள் என்றும் 'காட்டுக் கழுதை' சுதந்திரத்தை அவர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்றும் தாக்கி வந்த அரசாங்கம் தமது ஜனநாயக, மனித உரிமைகள் குறித்த நபும்சகத்தன்மையை மூடிமறைக்க வெளிப்படையாகவே இப்போது தணிக்கையில் இறங்கியுள்ளது.





தணிக்கை

தேர்தல் வாக்குறுதிகளை ஒவ்வொன்றாக கைவிடுவதும் கூட மக்களின் நலனில் உள்ள தமது அக்கறையால் செய்யப்படும் ஒன்றாக 'வேறு கயிறு திரித்து வருகிறது [redacted]

ஒழுங்கு

தணிக்கை

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் தகவல்துறை அமைச்சரின் கையை மீறி பாது

தணிக்கை

தணிக்கை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கைப் பாராளுமன்றப் அரசியலில் பெண்கள்-11

என்.சரவணன்

*சென்ற இதழ் தொடர்ச்சி*

## விமலா கன்னங்கர

1960 யூலை தேர்தலில் போட்டியிட்ட விமலா கன்னங்கர ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளருடன் போட்டியிட்டு தோல்வியடைந்தார். எனினும் 1965 தேர்தலில் மீண்டும் கலிகமுவ தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 1965இல் பதவிக்கு வந்த டட்லி சேனநாயக்க அரசாங்கத்தில் சுகாதார பிரதி அமைச்சராக பதவியேற்றார்.

ஓதரபத்து கிராம நிர்வாக சபையின் தலைவியாக பதவிவகித்து வந்த விமலா கன்னங்கர அதற்கூடாக அரசியலுக்குள் பிரவேசித்தார். கொழும்பு மகளிர் வித்தியாலயமொன்றில் கல்வி கற்ற விமலா கிராம தலைவர்கள் சம்மேளனத்தினது தலைவியாகவும் மற்றும் ஆரம்ப பாடசாலைகள் பற்றிய அதிக அக்கறையும் கொண்டவர் விமலா 'கொழும்பு திட்டத்'தின் கீழ் புலமைப்பரிசு பெற்று விசேட கல்விக்காக அவுஸ்ரேலியா சென்று கல்வி கற்றார்.

1970ஆம் ஆண்டு பொதுத்தேர்தலின் போது தோல்விக்குள்ளான விமலா 1977ஆம் ஆண்டு தேர்தலில் 'கலிகமுவா' தொகுதியில் மீண்டும் வெற்றி பெற்று ஜே.ஆர்.ஜயவர்த்தனாவின் அமைச்சரவையில் உல்லாச மற்றும் கப்பல், விமானப் போக்குவரத்து அமைச்சராகப் பதவி வகித்தார். 1978ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மாற்றத்தின் போது 'கிராமிய அபிவிருத்தி' அமைச்சராக பதவியேற்றார். 1989 பொதுத்தேர்தலில் விமலா கன்னங்கர போட்டியிடாததுடன் அதன்பின் அரசியலிலிருந்து ஓய்வுபெற்றார்.

## சோமா விக்கிரமநாயக்க



சோமா விக்கிரமநாயக்க

சோமா விக்கிரமநாயக்க தொடர்ந்து இரண்டு தேர்தல்களில் (1960 மார்ச், 1960 யூலை) வெற்றிபெற்றார். இவர் 1939இல் லங்கா சமசமாஜக்கட்சியின் உறுப்பினராக சேர்ந்ததோடு சில வருடகாலம் அகில இலங்கை சமசமாஜ பெண்கள் சம்மேளனத்தின் பொதுச் செயலாளராகவும் கடமையாற்றினார். தன்னை முழு நேர அரசியலுக்கு உள்ளாக்குவதற்கு முன் கேகாலை வித்தியாலயம், கனேமுள்ள வித்தியாலயம், கொலன்னாவ வித்தியாலயம் என்பனவற்றில் விரிவுரையாள்ராகவும், ஆசிரியராகவும்கடமையாற்றியிருந்தார்.

மார்க்ஸீயம், சோஷலிசம் தொடர்பாக சாதாரண மக்களுக்கும் விளங்கக்கூடிய வகையில் விளக்கமளிப்பதில் இளம் காலம் தொடக்கம் நல்ல தேர்ச்சிபெற்ற சோமா 1960 தொடக்கம் 1965 வரை பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த காலத்துள் பாராளுமன்றத்தில் பல விவாதங்களில் காரசாரமான கருத்துக்களை முன் வைத்தவர் என சக உறுப்பினர்கள் தெரிவிக்கிறார்கள். சோவியத் யூனியன், ஜெர்மனி, பிரித்தானியா போன்ற நாடுகளில் நடத்தப்பட்ட சர்வதேச பெண்கள் சம்மேளன மாநாடுகளில் இலங்கைப் பிரதிநிதியாகவும் கலந்து கொண்டிருக்கிறார்.

1965ஆம் ஆண்டு பொதுத்தேர்தலின் போது ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளராக அவிஸ்ஸாவெல்ல தொகுதியில் போட்டியிட்ட சோமா விக்கிரமநாயக்க அத்தேர்தலில் தோல்வியைத் தழுவினார். தனது 74வது; வயதில் 1989ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் திகதி அவர் மரணமானார்.

## சிறிமா பண்டாரநாயக்க

***"உலக வரலாற்றில் மகாராஜாக்களைப் போல் மகாராணிகளாகவும் பெண்கள் அரசியல் தலைமைத்துவத்தில் இருந்திருக்கிறார்கள் என்றெல்லாம் நாம் கூறிக் கொண்டபோதிலும், அதிகாரம் மிக்க பிரதம மந்திரியாக பெண்ணொருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு உலக வரலாற்றில் சாதனையாக்கப்பட்டது இதுவே முதற் தடவை"***




இது 1960ஆம் ஆண்டு யூலை 21ஆம் திகதி அமெரிக்காவிலிருந்து வெளியாகிய (Newyork Times) நியுயோர்க் டைம்ஸ் பத்திரிகையில் வெளிவந்த செய்திக் குறிப்பு. சிறிமா பண்டாரநாயக்கா உலகிலேயே முதற் பிரதம மந்திரியாக பதவியேற்றதா குறிப்பிட்டே மேற்படி பத்திரிகையில் செய்தி வெளியாகியிருந்தது.

பெண்ணொருவர் பிரதமராகப் பதவிவகிப்பதென்பது கனவாக கருதப்பட்ட அந்நாட்களில் இந்நிகழ்வு முக்கிய திருப்பமாகக் கருதப்பட்டது.

1960 யூலை பொதுத்தேர்தலின் போது எதிர்க்கட்சிகளினால் சிறிமா பண்டாரநாயக்காவுக்கு எதிரான பிரச்சாரம் பாரிய அளவு மேற்கொள்ளப்பட்டது. அதில் பெரும் இனவாதமும் கக்கப்பட்டது. என்ன வேடிக்கை என்றால் பணம் படைத்த பெரும் முதலாளிகளினால் ***'சிறிமா பண்டாரநாயக்க பதவிக்கு வந்தால் வடக்கு கிழக்கை பிரித்து தமிழர்களுக்கு கொடுத்து விடுவார்'*** என்றும் இலங்கை வரைபடத்தில் வடகிழக்கை சிகப்பு நிறத்தால் பிரித்து காட்டி பிரச்சாரம் செய்தனர். (இச்செயலை அப்படியே 1994 பொதுத்தேர்தல் மற்றும் அதே ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தல் என்பனவற்றோடு பொருத்திப்பார்க்கலாம். இத்தேர்தலில் சிறிமா பண்டாரநாயக்காவின் மகளான சந்திரிகா குமாரணதுங்க போட்டியிட்ட போது சிங்களயே மகாசம்மத்த பூமி புத்திர பக்ஷ்ய, மக்கள் ஐக்கிய முன்னணி போன்ற கட்சிகள் கூட 'சந்திரிகா பதவிக்கு வந்தால் 'தமிழ் ஈழத்தை' தமிழர்களுக்கு கொடுத்து விடுவார் என்றெல்லாம் பிரச்சாரம் செய்திருந்தன.)

1916ஆம் ஆண்டு ஏப்ரல் 17ஆம் திகதி பலாங்கொடை பிரதேசத்தில் மஹவல தென்ன வலவ்வயில் பிறந்தார் சிறிமாவோ ரத்வத்தை. கொழும்பு புனித பிரிஜ்ட் பெண்கள் கல்லூரி (St.briget Ladies College) யில் கல்வி கற்று பின் மீண்டும் தனது ஊருக்கு திரும்பி சமூக வேலைகளில் ஈடுபட்டார்.

தனது தந்தையிடம் இருந்து ஒரு சிறு நிலப் பகுதியை பெற்றுக்கொண்டு அதில் ஒரு கட்டிடத்தையும் கட்டி 'பலாங்கொடை சமூக சேவை சங்கம்' எனும் அமைப்பை ஆரம்பித்து அதில் சூழ உள்ளவர்களின் குறைகளை தீர்ப்பதில் முன்னின்று இயங்கினார். குறிப்பாக அந்த கட்டத்தில் ஒரு சிறு வைத்தியசாலை அவ்வமைப்பின் மூலம் இயங்கப்பெற்றது. 1930களில் மிக வேகமாகப் பரவிய மலேரியா நோயை ஒழிப்பதில் இவ்வமைப்பு மிகத்தீவிரமாக பங்காற்றியது.

1940ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10ஆம் திகதி சிறிமாவுக்கு திருமணமானது. அதுவரையில் அரசாங்க சபையின் பிரதிநிதியாகவும் உள்நாட்டலுவல்கள் அமைச்சராகவும் சிங்கள மகா சபையின் தலைவராகவும் பதவி வகித்து வந்த பிரபல அரசியற் தலைவரான சலமன் வெஸ்ட் றிஜ்வே டயஸ் பண்டாரநாயக்காவே சிறிமாவை மணந்தார். திருமணமான சிறிமா லங்கா மகிலா சமித்தி அமைப்பில் சேர்ந்து இயங்கினார்.

1951இல் பண்டாரநாயக்கவினால் ஸ்ரீ லங்கா சதந்திரக்கட்சி தோற்றுவிக்கப்பட்டதன் பின் சிறிமா அதன் அரசியல் வேலைகளில் தன்னையும் இணைத்துக் கொண்டார். 1952 மற்றும் 1956 பொதுத் தேர்தல்களின் போது தனது கணவருக்கு ஆதரவாக பிரச்சார வேலைகளில் இயங்க சிறிமா விரும்பவில்லை. இருந்தபோதிலும் 1959க்குப் பின் அதாவது எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் மரணத்தைத் தொடர்ந்து அரசியலில் பிரவேசிக்க வேண்டிய சூழல் உருவானது.

### உலகிலேயே முதற் பெண் பிரதமர் சிறிமா பண்டாரநாயக்க

1956இல் பிரதம மந்திரியாக பதவியேற்ற எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா 1959ஆம் ஆண்டு செப்டம்பர் 25ம் திகதி சுட்டுக்கொல்லப்பட்டார். அந்நேரம் சிறிமாவுக்கு மூன்று பிள்ளைகள். **'ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை அழிப்பதற்காக வென்றே கணவர் அழிக்கப்பட்டார். எனவே அவரது பாதையை தொடர்ந்து நீங்கள் செல்ல வேண்டும். ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சிக்கு நீங்கள் தலைமை கொடுக்க வேண்டும்'** சிறு பராயத்தை **தாண்டிவிட்ட பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக மட்டும் வாழ்க்கையை செலவிடாமல் கணவர் விட்டுச்சென்ற இடத்திலிருந்து நீங்கள் தொடர வேண்டும்"** என்று கட்சியின் தலைவர்களால் வற்புறுத்தப்பட்டார். இதன் காரணமாக வெற்றிடமாகப்போன அத்தன அல்ல தொகுதியில் நடக்கப்போகும் 1957இடைத்தேர்தலில் போட்டியிட முன்வந்தார். ஆனால் இடைத்தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்னரேயே அன்றைய இடைக்கால பிரதமராக இருந்த தஹநாயக்கா, பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தல் நடத்துவதற்கான பிரகடனத்தையும் வெளியிட்டார்.

1960 மார்ச்சில் 4வது பாராளுமன்ற தேர்தல் நடத்தப்பட்டது. அத்தேர்தலோடு தோற்றுவிக்கப்பட்ட பாராளுமன்றம் 33 நாட்களில் கலைந்தது. பாராளுமன்ற சிம்மாசன பிரசங்கத்தின் போது ஆளும்கட்சி தோல்வியடைந்ததைத் தொடர்ந்து 5வது தேர்தலுக்கான அத்திவாரமிடப்பட்டது.

யூலை 20இல் நடந்த ஐந்தாவது பாராளுமன்ற தேர்தலின் போது ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் தேர்தல் வேலைகளை திருமதி சிறிமா பண்டாரநாயக்க பொறுப்பேற்று நடாத்தினார். **இலங்கையின் தேர்தல் வரலாற்றில் கட்சியொன்று ஒரு பெண் தலைமையில் தேர்தலில் பங்கு பற்றிய முதற் சந்தர்ப்பம் இதுவாகும்.**

இந்த தேர்தலில் ஸ்ரீ.ல.சு.க.வுக்கு கிடைக்கக் கூடிய வெற்றி வாய்ப்புகளை முன்னமே கணிப்பிட்ட ஏனைய அரசியற் கட்சிகள் ஸ்ரீ.ல.சு.கவின் அரசோடு மோதாமல் ஸ்ரீ.ல.சு.கவுக்கு தலைமை கொடுத்த ஸ்ரீமாவோடு தனிப்பட்டரீதியில் மோதின. இதிலுள்ள முக்கிய விடயம் என்னவென்றால் ஸ்ரீமாவோவின் அரசியலோடு மோதாமல் அவர் பெண் என்பதனாலேயே அவருக்கெதிரான தாக்குதல் நடத்தப்பட்டது. இதைச் செய்வதில் அன்றைய பத்திரிகைகளது பங்கு முக்கியமானது எனலாம். அன்று வெளியான தேசிய பத்திரிகைகளில் ஒன்றான "வஸ்கவி", "சிலுமின", "லங்காதீப", என்பனவை அவற்றில் முக்கியமானவை.

1960ம் ஆண்டு மே மாதம் 4ம் திகதி வெளியான சிலுமின பத்திரிகையில் பின்வருமாறு ஆசிரியர் தலையங்கம் தீட்டப்பட்டிருந்தது.

"பிரதம மந்திரி எனும் பொறுப்பு வாய்ந்த பதவியை ஆணொருவனே வகிக்க வேண்டும். எமது நாடு; உள்ளேயும் வெளியேயும் பாரிய சிக்கலுக்களுக்குள்ளாகியிருக்கிற இவ்வேளையில் இந்த பொறுப்பை பெண்ணொருவரின் மீது சுமத்துவது பெரும் அழிவை நோக்கிச் செல்வதற்கு அத்திவாரமிடும்."

1960 ஆம் ஆண்டு யூலை 21ம் திகதி வெளியான "லங்காதீப" பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

"இந்த தேர்தலில் நாங்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒத்துழைத்திருந்தோம். ஆரம்பத்திலிருந்தே நாங்கள் திருமதி பண்டாநாயக்காவுக்கும் அவரது கட்சியின் நடவடிக்கைகளுக்கு எதிராகவும் எங்களது விரோதத்தை தெரிவித்து வந்துள்ளோம். ஆனால் மக்கள் அவர்களது தீர்ப்பை வழங்கினார்கள். அவர்களது தீர்ப்பு பூரணத்துவமானதாயின் அதை ஏற்றுக்கொள்ளவே வேண்டும். 'லங்காதீப' பத்திரிகையின் 'தராசு' அன்று கட்சி சார்பற்ற ரீதியில் நிறுத்தது அதற்காகவே".

எவ்வாறிருந்தபோதும் 1960ம் ஆண்டு யூலை தேர்தலில் ஸ்ரீ.ல.சு.க.வெற்றி பெற்று ஆட்சியமைத்தது ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை மேற்சபைக்கு நியமன உறுப்பினராக் கொண்டு வந்து அதற்கூடாக சட்டசபை பிரதிநிதியாக்கி அவரை பிரதமராக தேர்வு செய்தது ஸ்ரீ.ல.சுதந்திரக் கட்சி. ஸ்ரீ மாவோவை பிரதமராக்குவதற்காகவே இத்தனை இடைநிலை தொழிற்பாடுகள் நடத்தப்பட்டன. இதற்கு எதிர்க்கட்சிகள் (குறிப்பாக ஐ.தே.கவினர்) பலத்த எதிர்ப்பு தெரிவித்தனர். ***தேர்தலில் கூட போட்டியிடாத ஒருவரை பிரதமராக தெரிவு செய்வது ஜனநாயக விரோத செயல் என சத்தமெழுப்பினர்.*** ஆனால் சோல்பரி அரசியலமைப்பின்படி இதுவொன்றும் பிழையானது அல்ல என ஆதாரம் காட்டினர் ஸ்ரீ.ல.சு.க.வினர்.

உண்மையில் மேற்சபையிலிருந்து பிரதமரை தெரிவு செய்யும்முறை பிரித்தானிய மரபிலேயே காணப்படுகிறது. அதே முறை இலங்கையிலும் பின்பற்றப்பட்டது. ஆனால் அந்த மரபு இலங்கையில் செல்லுபடியாகாது என எதிர்தரப்பினரால் குற்றம் சாட்டப்பட்டது.

ஆனால் ஸ்ரீமாவோவின் நியமனம் தொடர்பாக கருத்து வெளியிட்ட அரசியல் அவதானிகள்; மக்களால் தெரிவு செய்யப்படாத ஒருவரை நாட்டின் தலைவராக நியமிப்பது ஜனநாயக மரபை மீறும் செயலென்றும் இந்நிகழ்வு மக்களாட்சி கோட்பாட்டையே வினாவுக்குள்ளாக்குகிறது என்றும் தெரிவித்தனர்.

எவ்வாறெனினும் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா 1960 யூலை 21ம் திகதி முற்பகல் 11.30க்கு தேசாதிபதி ஒலிவர் குணதிலக்க முன்னிலையில் நாட்டின் பிரதமராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இலங்கையின் முதற் பெண் பிரதமராக மட்டுமல்லாது உலகிலேயே முதற் பெண் பிரதமராகவும் சாதனை படைத்த ஸ்ரீமாவோ பண்டாநாயக்கா மேற்சபைக்கு நியமிக்கப்பட்ட முதற் பெண் என்ற பெருமையையும், உலகிலேயே நியமன உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு பிரதமரான முதல் நபர் என்ற பெருமையையும் அடைந்தார்.

1964ம் ஆண்டு பாராளுமன்ற விவாதமொன்றின் போது ஆளும் கட்சி தோல்வியடைந்ததைத் தொடர்ந்து சிறிமாவோவின் ஆட்சி கலைக்கப்பட்டது.

1965ஆம் ஆண்டு தேர்தலில் ஸ்ரீமாவோவின் தலைமையிலான ஸ்ரீ.ல.சு.க. தோல்வியடைந்தது. டட்லி சேனநாயக்க தலைமையிலான ஐ.தே.க.ஆட்சியமைத்தது. சிறிமாவோ பண்டாரநாயக்க அத்தன கல்ல தொகுதியில் போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்டார்.

1970ஆம் ஆண்டு தேர்தலில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அத்தன கல்ல தொகுதியில் போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்டார். அத்துடன் தேர்தலில் ஸ்ரீ.ல.சு.க. வெற்றி பெற்று ஆட்சியமைத்தது. இரண்டாவது தடவையாகவும் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பிரதமராக தெரிவு செய்யப்பட்டார்.

1977ம் ஆண்டு நடந்த 8வது பாராளுமன்ற பொதுத் தேர்தலில் ஐ.தே.க. 5/6 பெரும்பான்மை பலத்தைப் பெற்று ஆட்சியமைத்தது. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மீண்டும் அத்தன கல்லையில் வெற்றி பெற்றார்.

1980ஆம் ஆண்டு ஒக்டோபர் 16ம் திகதி ஜே.ஆர்.அரசாங்கத்தினால் திருமதி.ஸ்ரீமாவோவின் குடியியல் உரிமை பறிக்கப்பட்டது. தனது எம்.பி.பதவியை இழந்ததுடன் 1982இல் நடத்தப்பட்ட முதலாவது ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாதநிலையில் கொப்பேகடுவையை வேட்பாளராக நியமிக்க வேண்டி ஏற்பட்டது. இறுதியில் ஜே.ஆர்.ஜனாதிபதியானார்.

1989இல் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் பிரேமதாசவுடன் போட்டியிட்ட ஸ்ரீமாவோ தோல்வியடைந்தார் என்ற போதும் 1989ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் மூலம் பாராளுமன்றத்தில் மீண்டும் அங்கம் வகித்த ஸ்ரீமாவோ 1994ஒகஸ்டில் நடந்த பொதுத் தேர்தலோடு அவரது மகள் சந்திரிகாவின் தலைமையில் ஆட்சியமைக்கப்பட்ட 10வது பாராளுமன்றத்தில் நியமன உறுப்பினராக நியமிக்கப்பட்டதுடன் இலாகா இல்லா அமைச்சின் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார். பின்னர் 1995 நவம்பரில் நடத்தப்பட்ட ஜனாதிபதி தேர்தலில் வென்ற சந்திரிகா அப்பதவியை ஏற்றதன் பின் தான் வகித்து வந்த பிரதமர் பதவிக்கு தனது தாயாரை நியமித்தார். அதன்மூலம் 3வது முறையாகவும் பிரதமராக பதவி வகித்த உலகின் ஒரே யொரு பெண் எனும் சாதனையை ஸ்ரீமாவோ படைத்தார்.

**வரும்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தாயகம் திரும்புவது எப்போது?

**வடக்கு கிழக்கிலிருந்து புலிகளால் முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டு 5 ஆண்டுகள் ஆகின்றன. சகலதையும் இழந்து விட்டு வந்த அவர்களின் அவல வாழ்வை அறிவதற்காக முஸ்லிம் அகதி முகாம்களின் ஒன்றான மட்டக்குளி-காக்காத்தீவு முகாமுக்கு சரிநிகர் சென்று அறிந்த விபரங்கள் கீழே. அவர்களது அவலங்களை அவர்களே சொல்கிறார்கள்.**

### கே. எம். கமால்டீன்

1990 யூலை 16ம் திகதியளவில் யாழ்ப்பாண கோட்டை முகாம் தாக்கப்பட்டது. அரசுக்கும் புலிகளுக்குமிடையில் பலத்த சண்டை ஏற்பட்டது. கோட்டைக்கருகிலுள்ள பஜார் லேனில் தான் எங்களது வீடு அமைந்திருந்தது. பயத்தின் காரணமாக அங்கிருந்து மண் பெயர்ந்து ஐந்து கட்டைக்கப்பாலுள்ள மண்கும்பான் பள்ளிவாசலில் போய் இருந்தோம். அங்கிருந்த ஒரு மாத காலம் சாப்பாட்டுக்கு கூட மிகவும் கஷ்டப்பட்டோம். அங்கிருந்தபோதே, இருந்த நகைகள், சைக்கிள், ரேடியோ என்பனவற்றையெல்லாம் விற்று, பிறகு பூநகரி இறங்கு துறைக்கு வந்து அங்கிருந்து நாச்சிக்குடா வந்து ஒரு கிழமைக்கு பின் தெற்கு நோக்கி வருவதற்காக பெரிய மடு வந்து அங்கும் சிரமப்பட்டு சூடுகண்ட பிளவு, பாவற்குளம் ஆகிய இடங்களிலும் கொஞ்சம் கொஞ்மாக அங்குமிங்குமாக இருந்தோம். ஒருமாதத்துக்குப்பின் நாங்கள் காட்டுவழியாக மிகவும் சிரமப்பட்டு நடந்து சென்றோம். தண்ணிக்குக்கூட மிகுந்த சிரமப்பட்டோம். கீறிசுட்டானில் தான் தண்ணீர் குடிக்கலாம் என சிலர் கூற, அங்கு போய் ஆற்றுத்தண்ணீரைக் குடித்துவிட்டு பயணத்தைத்தொடர்தோம். அங்கிருந்து காக்கைக்குளம் வந்து பின்னர் வவுனியா வந்து அங்கிருந்து ஈரப்பெரியகுளம் வரைக்கும் நடந்து வந்தோம். அங்கிருந்து மதவாச்சி வந்து அங்கிருந்து அனுராதபுரத்தில் ஒரு முஸ்லிம் பள்ளிவாசலில் தங்கியிருந்தோம். இங்கு எனது மகளுக்கு பிரசவ வேதனையோடு ஒரு பிள்ளையையும் பெற்றார்.

இறுதியாக மீண்டும் முல்லைத்தீவில் சிறிது காலம் இருந்து விட்டு அங்கிருந்து கொழும்பு வந்தவர்களோடு சேர்ந்து செப்டம்பர் மாதமளவில் இந்த அகதி முகாமில் தஞ்சமடைந்தோம்.

இங்கு வந்து சேர்ந்ததன் பின்னர்தான் நாங்கள் கேள்விப்பட்டோம்; வடக்கிலிருந்து முஸ்லிம்கள் எல்லோரையும் புலிகள் விரட்டி விட்டனர் என்பதை எங்களுக்குத் திரும்பிப் போகக்கூடிய வாய்ப்பு இல்லாமல் போனது. ஒருசில மாதங்களில் யுத்தம் முடிவடைந்து விடும் அதன் பின்னர் எங்களது வாழ்விடங்களுக்குச் சென்று வாழலாம்' என்று நினைத்திருந்தோம் அந்த எண்ணமே வெறும் கனவாகிவிட்டது.

நாங்கள் எங்களது வாழ்விடங்களுக்குத் திரும்பிச் சென்று வாழவே விரும்புகிறோம்.

ஆனால் அதற்கு முதல் அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான யுத்த நிலைமைகள் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு சமாதான முறையில் தீர்வு ஏற்பட்டு ஜனநாயகம் நிலைநாட்டப்படவேண்டும். அதை விட்டு விட்டு புலிகளை இராணுவரீதியில் 'எங்களைப்போய் அங்கு வாழச் சொன்னால் எங்களால் அதைச் செய்ய முடியாது.

### ஆசியம்மா (பெரிய காடு-யாழ்ப்பாணம்)

1990 செப்டம்பர் மாதமளவில் ஒருநாள் புலிகள் திடீரென்று முஸ்லிம்களெல்லோரையும் ஜும்மா மஸ்ஜித்துக்கு வந்து சேரும்படிச் சொன்னார்கள். அங்கு வைத்து இரண்டு மணித்தியாலயத்தில் எங்களை வெளியேற வேண்டும் எனச் சொன்னார்கள். அது எப்படி முடியும்? எனது மகளுக்கு பிள்ளை கிடைத்து இரண்டு நாட்கள்தான் ஆகியிருந்தது அவளை எப்படி கொண்டு செல்வது? எனது பிள்ளைகள், கணவர் எல்லோரும் வெவ்வேறு இடங்களுக்குச் சென்றிருந்தார்கள் இவர்கள் அனைவரையும் எங்கு போய் தேடி பிடித்துக் கொண்டு இரண்டு மணித்தியாலத்துக்குள் வெளியேறுவது? நாங்கள் கேட்டோம். அதற்கு அவர்கள் எல்லோரும் எப்படியோ போய்ச்சேருங்கள், கொழும்பில் சந்தித்துக்கொள்வீர்கள் என்றார்கள். ஆங்காங்கு இருந்தவர்கள் அவ்வவ்விடங்களிலிருந்து புறப்பட்டார்கள். ஆஸ்பத்திரியில் நோயாளிளாக இருந்த முஸ்லீம்கள் கூட நோயுடனேயே விரட்டப்பட்டார்கள்.


எனது மூத்தமகனை புலிகள் பிடித்து வைத்திருந்தார்கள். நாங்கள் கேம்புக்குப் போய் தேடியலைந்தோம். முதலில் அப்படியொருவரும் இல்லை என்றவர்கள் அதற்குப் பின் நாங்கள் சுட்டுப்போட்டோம். அவருக்கு செய்யவேண்டி இறுதிக்காரியங்களையெல்லாம் செய்யுங்கள் என்றார்கள். நாங்கள் வேதனையுடன் மகனின் சமய சடங்குகளை முடித்தோம்.

15நாட்களில் புலிகள் மீண்டும் வந்து சொன்னார்கள் ''அவரைச் சுடவில்லை அவர் உயிருடன் தான் இருக்கிறார்'' என்றார்கள். பிறகு மகனைப் பற்றிய எந்தத் தகவலும் இல்லை. அந்த நிலையிலே தான் எல்லாவற்றையும் இழந்து வந்து சேர்ந்தோம். எனது கணவரும் அந்த ஏக்கத்திலேயே 10மாதங்களுக்கு முன் இறந்து போனார்.

விரட்டியவுடன் நாங்கள் சங்குபிட்டி பாதை வழியாக நடந்தும் லொறியிலும்,பின் மீண்டும் நடந்தும், லொறிகளிலும் கொஞ்சம் கொஞ்சமாக பயணம் செய்து வவுனியா வந்து சேர்ந்தோம். அங்கிருந்து கொழும்பு வந்து மாளிகாவத்தை YMMA யில் தங்கினோம். வடக்கிலிருந்து நாங்கள் உடுத்திய உடுப்புடன் வெளியேற்றப்பட்டோம். கணவர் கட்டியிருந்த கைக்கடிகாரம் தொடக்கம் துணைக்கு வைத்திருந்த டோச்லைட் வரைக்கும் பறித்தெடுத்து விட்டுதான் எங்களை அனுப்பினார்கள். அந்த வேதனை உணர்வோடு மாளிகாவத்தையில் மூன்று மாதங்கள் கழித்துக் கொண்டிருந்தபோது YMMA யினர் பொலிசாரைக் கூட்டிக் கொண்டு வந்து எங்களை வெளியே விரட்டிவிட்டார்கள். அங்கிருந்து கொள்ளுப்பிட்டியில் ஒரு 'பாய்' ஒருவரின் கட்டடத்தில் 3மாதங்கள் இருந்து விட்டு பின்னர் இந்த அகதிமுகாம் வந்து சேர்ந்தோம்.

அழைத்தால் மீண்டும் போவோம் மற்றும்படி இடையில் போய் எங்களை கலைத்து விட்டால்...? எங்களை விரட்டியபோது ''வெளியேறாவிட்டால் சுட்டுக் கொன்று விடுவொம். மட்டக்களப்பில் நடந்தது தெரியும் தானே'' என்றெல்லாம் மிரட்டியவர்களை எப்படி நம்பிப்போவது? அரசாங்கம் அனுப்பி நாங்கள் போக முடியாது. புலிகள் கூப்பிட்டால் போகலாம். வாழப்போவது நாங்கள் தானே?.

இந்த அகதிமுகாம் வாழ்க்கையை எத்தனை காலம் வாழ்வது. ஐந்து வருடங்களை இதற்குள் கழித்து விட்டோம். எங்களை தூர இடங்களிலிருந்து சந்திக்கவரும் உறவினர்களைக் கூட இங்கு தங்க வைக்க முடியவில்லை. எங்களது சகோதரர்கள் தாய் எவர் வந்தாலும் அவர்களை அனுப்பி விடும்படி கூறுகின்றனர். நிவாரணப் பொருட்கள் என்ற பெயரில் கிடைப்பது மிகவும் மோசமான பொருட்களே. அவை கூட எங்களுக்கு போதுமானதில்லை. இந்த வேதனை கலந்த வாழ்க்கையையே நாங்கள் இத்தனை காலம் வாழ்ந்து கழித்து வருகிறோம்.



### நாகூர் உம்மா (தலைமன்னார்)

'முஸ்லிம்கள் ஒருவர்கூட இருக்கக்கூடாது இந்த இடத்தை விட்டு வெளியேறுங்கள்'' என புலிகள் திடீர் உத்தரவு பிறப்பித்தனர். எங்களுக்கோ போகுமிடம் புரியவில்லை. நாங்கள் காடுகள் வழியாகப் போய் பின்னர் படகொன்றின் மூலம் கற்பிட்டி வந்து சேர்ந்தோம். கற்பிட்டியில்சிறிது காலம் இருந்து விட்டு அங்கிருந்து இந்த அகதிமுகாம் வந்து சேர்ந்தோம் .

எதுவும் எங்களால் கொண்டு வர முடியவில்லை. நாங்கள் இங்கு வந்து வருஷக்கணக்காக இருக்கவேண்டி வரும் என்று எதிர்ப்பாதிருக்கவில்லை. எங்களது இடங்களுக்கு மீண்டும் அண்மையில் போய் பார்த்து விட்டு வந்தோம். அங்கு எங்களது எந்தவித பொருட்களும் இல்லை. எங்களது வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டுக் கிடந்தன.

நாங்கள் வரும் போது எங்களை எந்த சாமானையும் கொண்டு வர விடவில்லை. எங்களோடு வந்த ஒரு பெண் தனது நகையை அவரது குழந்தையின் ஆடைக்குள் மறைத்து கொண்டு வர முயற்சி செய்தபோது அது கண்டுபிடிக்கப்பட்டதும், அவரது குழந்தையை புலிகள் தாக்க முயற்சி செய்தபோது அதிலேயே ஏங்கி ஒரு பெண இறநது போனார்.

### சல்கா பேபி (மட்டக்களப்பு - கள்ளியங்காடு)

முஸ்லிம்கள் விரட்டப்பட்ட சம்பவம் இடம் பெற்ற போது நான் குவைத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். இச் சம்பவத்தைக் கேள்விப்பட்டவுடன் குவைத்தில் நான் வேலை பார்த்த வீட்டாரிடம் நான் உடனேயே இலங்கை போக வேண்டும் என

**என். எஸ்.**

# பழையன கழிதலும் புதியன புகுதலும்

## சிங்கள நாடக அரங்கம் ஓர் அவதானிப்பு

மேடை நாடகங்கள் தொடர்பாகக் கடந்த காலங்களில் இருந்து வந்த தடங்கல்கள் மறைந்து ஆரோக்கியமான ஓரிரு அடையாளங்கள் தென்படுகின்றன. சில காலமாக நிசப்தமாக இருந்து வந்த "பழைய" பிரபலமான நாடக வல்லுநர்கள் தமது திறமைகளை மீண்டும் வெளிக்காட்ட வந்துள்ளமையே மேற்கூறியதற்கு காரணமாகும். 'பராக்கிரம நீரியல்ல', 'H. A. பெரெரா' ஆகியோரின் தயாரிப்பில் உருவான 'வரெந்து' (பிடிவிறாந்து). K.B. ஹேரத்தின் 'நோனா கதரீனா'. சுசில் குணரத்னவின் 'சிர கந்தவுர' (சிறைக்கூடம்) போன்ற நாடகங்கள் இரசிகர்களுக்கு புதுமையான அனுபவங்களையும் நாடகங்கள் தொடர்பான எதிர்பார்ப்புக்களையும் தருவித்துள்ளன.

94 ஆண்டுக்கு முற்பட்ட அரசியல் நிலைமைகள் காரணமாக அக்காலப் பகுதியில் வெளிவந்த நாடகங்கள் பல்வேறு பிரச்சனைகளுக்கு உட்பட்டு வெளிவந்தன. அவ்வாறு வெளிவந்த நாடகங்களுக்கு தனிப்பாணி ஒன்றும் காணப்பட்டது. விஷேசமாக அக்கால அரசியல் நிலைமையை பிரதிபலிக்கும் நாடகங்களும் அவற்றுள் அடங்கும். 'யக்ஷா கமணய' (பிசாசின் பயணம்). ஒத்துக்காரயா (வேவுக்காரன்) போன்ற நாடகங்கள் அரசியல் நிலைமையை பிரதிபலிப்பனவாகும். 'யக்ஷா கமணய' மொழி பெயர்ப்பு நாடகமாகும். இது சர்வதிகாரி ஒருவனின் நடவடிக்கைகள் பற்றியது. இந்நாடகத்திற்கு சில பிரதேசங்களில், கொலை மிரட்டல்களும் வந்திருந்தன. ஏனெனில் இந் நாடகம் அன்றைய கால சர்வதிகார அரசியல் (U.N.P. ஆட்சிக்காலம்) நிலைமையை நிர்வாணப்படுத்தியதால் ஆகும்.

94ன் இடைப்பகுதியில் இந்நாடகம் தேர்தல் காரணமாகவும் நாடகத்தணிக்கை சபையின் கட்டுப்பாடுகளை மீறுகிறது என்பதனாலும் தடைக்கு முகம் கொடுத்தது. இவ்வாறு தடைகளை எதிர்கொண்டபோதும் நாடகம் என்னும் தோட்டத்தில் பூக்கள் பூக்காமல் இருக்கவில்லை. மேற்குறித்த அரசியல் தடைகளுடன் பொருளாதார பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க. இளைஞர்கள் தம்மைத் தயார்படுத்திக்கொண்டனர். பழைய பிரபலயமானவர்களின் நாடகங்கள் மட்டுப்படுத்தியனவாக அரங்கேறுகையில் புதியவர்கள் மனந்தளரவில்லை.

ஒரே தன்மையான அரசியல் நாடகங்களை கண்டு களித்த ரசிகர்கள் தமது வாழ்க்கை தொடர்பான புதுமையான அனுபவங்களைப் பெறத்தொடங்கினர். அபூர்வமான நடிப்பு உத்திகள் குறியீடுகளைப்பாவித்தல் போன்ற பண்புகள் புதியவர்களின் நாடகங்களில் வெளிப்படத்தொடங்கின. மேற்குறித்த பண்புகளைக் கொண்ட "செவனலி சஹா மினிசு" என்ற நாடகத்தை பிரசன்ன மிகுந்த எதிர் பார்ப்போடு வெளியிட்டார். இளைஞர் நாடக விழாவில் முதல் பரிசு பெற்றவரான பிரசன்ன (PRASANA) பழையவர்கள் பலருக்கு சவாலாக அன்றைய அரச நாடகவிழாவில் முன்னின்றார்; அவரது திறமை பளிச்சிட்டது. அவர் 'வரவு'' ஒரே தன்மையான அரசியல் நாடகங்களின் போக்கில் மாற்றத்தை உண்டு பண்ணியது.

அரசியலைத் தவிர மனிதவாழ்வின் எத்தனையோ பக்கங்களை வெளிப்படுத்தும் வாய்ப்பு உள்ளது என்பதையும் அவர் நிறுவினார். தனஞ்சய கருணாரத்னவின் "ஜுரிய" ரொஜர் செனவிரத்னாவின் "பஸ் வென்னா" (ஐந்தாம் படை) போன்ற நாடகங்களும் மேற் சொன்ன பண்புகள் அடங்கியவையே. இன்னும் புதிய நெறியாளர்கள் உருவாகி வருகின்றனர். இவர்கள் முன்னர் போன்று தடைகளை எதிர் கொள்ளவில்லை. புதிய நெறியாளர்களின் எண்ணிக்கை இனிவரும் ஆண்டுகளில் பெரிதாகும்.

ரஜத்தாக்கள். ரவீந்திராக்கள். அத்துல பீரிஸ்கள். "சக்வாதவல" "ஜன்டாவேஷ". "பஸ்மாஹாபெலும்" போன்ற நாடகங்கள் மூலம் கரைசேர்வார்கள்.



இன்றைய நாட்களில் நாடகத்தை தாயாரிப்பது இலாபத்தை பெறும் நோக்காக மட்டுமே இருப்பின் அது வருந்தத்தக்கது. இலாபத்தை பெற வேண்டும் எனில் எவ்வளவோ செயல்கள் புரியலாம். தமது அன்றாட வாழ்க்கைச் செலவை சாமாளிக்கமுடியாத இரசிகர்கள் கூட நாடக செயற்பாடுகளுக்கு வருவது நாடகத்தின் மீதான பற்றுதலினாலேயாகும்.

இருந்தும் நாடக அமைப்பாளர்கள் தமது பொருளாதார இலாபத்தைக் கருத்தில் கொண்டு பழைய நாடகங்களையும் பிரபலமானவர்கள் நடித்த நாடகங்களையும் வெளிக்கொணரவே ஒழுங்குகளை மேற்கொள்ளுகின்றனர். இரசிகர்களும் கூட நாடக அரங்குக்குச் செல்லும் முன்னர் பிரபலமான நெறியாளர்களையும் நடிகர்களையுமே விசாரித்து அறிகின்றனர். "பிரபலமானவர்கள் நடிக்கின்றார்கள்" எனில் அரங்க ஆசனங்கள் நிரம்பி வழிகின்றன. இதன் காரணமாகவே நாடக அமைப்பாளர்கள் பொருளாதார வெற்றியை பெறும் நோக்குடன் மேற் கூறிய முயற்சியில் இறங்குகின்றனர். இது நவீன புதிய இயக்குனர்கள் பக்கம் அசாதாரணமான சூழ்நிலைகளை தோற்றுவித்துள்ளது. டிக்கள் தொடர்பு சாதனங்கள் கூட இளைஞர்கள், புதியவர்கள் சிறப்பான தாயாரிப்புக்களைச் செய்தாலும் அவற்றை ஏற்றுக்கொள்ளாத நிலையே காணப்படுகிறது. "ஜுரிய". பஸ்வென்னா. செவனலி சஹா மினிஸ்சு போன்ற நாடகங்களுக்கு ஏற்பட்டது இந் நிலையேயாகும். எதிர்காலத்தில் வரும் நாடகங்களும் இவ்வாறான நிலைக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

இதுவரையிலும் நாடகத்துறையில் ஏற்பட்டிருக்கும் எழுச்சி இரசிகர்களுக்கு சந்தோஷத்தை தருமொன்றாகும். இது புதியவர்களின் வருகையினாலேயாகும். இவ்விளைவர்களின் பங்களிப்பு இன்னும் இன்னும் அதிகமாகும்.

**"யசனாத் தம்மிக்க பண்டார"**

**சிங்களத்திலிருந்து தமிழுக்கு 'ரத்னா'**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# காணாமல் போனோரும் கண்ணீர்த்துளிகளும்



மிகவும் பயங்கரமானதும் கொலைகளும் இரத்தமும் நிரம்பியதுமான சினிமா அல்லது நாடகம் ஒன்றை இருண்ட அரங்கில் இருந்து நீங்கள் பார்த்திருக்கின்றீர்கள். கொல்லப்படுபவர்களுக்காக மனம் குலுங்க உள்ளே இருந்து அழுதிருக்கிறீர்கள். யாவும் முடிந்து வெளியே வரும் பொழுது, படம் அல்லது நாடகம் தானே என ஆசுவாசப்பட்டிருப்பீர்கள். ஆனால் உங்களது நிசவாழ்வில் அதே பயங்கரம் நிகழும் போது என்ன செய்வீர்கள்.

இவ்வாறு எமது நாட்டு மக்களின் வாழ்விலும் நிகழ்ந்தது; நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. இனியும் நிகழாதென்பதற்கு உத்தரவாதங்கள் இல்லை.

தெற்கு, மேற்கு, சப்பிரகமுவ மாகாணங்களில் 1988 ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து ஓர் கொடூர நாடகம் நடக்கத்தொடங்கியது. பெற்றோரின் பிள்ளைகள் காணாமல் போகத் தொடங்கினர்; பிள்ளைகளின் பெற்றோர் காணாமல் போகத் தொடங்கினர். ஒளியேற்ற ஆளில்லாமல் ''பஹன் வலட்ட'' ( சிங்கள பௌத்த வீடுகளில், வீட்டின் முற்றத்தில் கடவுளுக்காக ஏற்றப்படும் தீபம்) இருளடைந்தது. மக்கள் இருண்ட வீடுகளில் சுவரில் சரிந்திருந்து அழவும் பயந்து கேவினர்.

யார் இவற்றைச் செய்தது? பிணந்தின்னிக் கழுகுகளா? பிசாசுகளா? பேய்களா? யார்? எல்லோருக்கும் தெரிந்தே இருந்தது. அந்த நாடகத்தின் நடிகர்கள் யார் என்று. அதன் நெறியாளர் யார் என்று.

டபிள்யூ.பீ.பொடிநோனா ( வயது 65, பள்ளேகல,) அழுதழுது சொல்கிறாள். ''என்ரை பேரனுக்கு ஏடு தொடக்கவெண்டு இருந்த அண்டைக்குத்தான் ( ஒக்டோபர் 11ம் திகதி 89ம் ஆண்டு) என்ற மேனை, லால் ரஞ்சித்தை கொண்டு போனாங்கள்''. கண்டி ரெக்ரைல்ஸ் இல் வேலை செய்யும் லால் ரஞ்சித் என்பவர் கடத்தப்பட்ட மறுநாள் அங்கு வேலை செய்த ஊழியர்களைப் பார்த்து குண்டசாலை ஓ.ஐ.சி. சாம் பெரேரோ இப்படிக் கூறினார். ''அளவுக்கு மீறித்தைரியம் காட்டுபவர்களுக்கு ரஞ்சித்துக்கு நடந்தது தான் நடக்கும்.

1990 மேயில் பொடிநோனாவின் கிராமத்தில் நடந்த வெசாக் பண்டிகை விழாவில் சாம் பெரேரோ பின்வருமாறு பேசியிருந்தார். '' இந்த ஊரில பல நாய்கள் இருக்கின்றன. நான் நாலுகால் நாய்களைச் சொல்லவில்லை. இரண்டு கால் நாய்களைத்தான் சொல்கிறேன். விளையாட்டு மைதானம் ஒன்றை உருவாக்கவென ஓர் நிலத்தை துப்பரவு செய்யும் பொழுது நச்சு மரங்களையும் முள்ளு மரங்களையும் தெரிவு செய்து அகற்றுவார்கள். ஆனால் நானெனில் எல்லா மரங்களையுமே அகற்றி மைதானத்தை துப்பரவு செய்வேன்.''

பொடி நோனா மேலும் சொல்கிறாள். '' அண்டைக்கு, அவன் எங்கடை கிராமத்திலை உள்ள எல்லாப் பொடியளையும் அழிப்பன் எண்டதைத்தான் அப்பிடிச் சொன்னவன்.''

09.10.89 இரவு 10.30 மணியளவில் தனது கணவனை இராணுவச் சீருடையில் வந்தவர்களிடம் பறிகொடுத்த ஆரியவதி, அதன் பின்பு தன் கணவனை ( ஆர்.ஏ.பிரேமச்சந்திர - வயது 45) காணவே இல்லை. கடத்தியவர்களோ அவளை பூஜாப்பிட்டி இராணுவ முகாமுக்கு வரச்சொல்லிச் சென்றனர்.

ஆரியவதி தனது கணவன் சுதந்திரக்கட்சி ஆதரவாளர் என்பதால் தான் பாதிக்கப்பட நேர்ந்தது என்கிறார்.

நம்புக்வெலவைச் சேர்ந்த பி.ஜீ.நிமால் கருணதிலக்க 19.09.89 அன்று கைதுசெய்யப்பட்டு கஹத்தகொலே இராணுவமுகாமில் 9 நாட்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த அனுபவத்தை பின்வருமாறு சொல்கிறார்:

''அங்கு எங்களைத் தடிகளால் அடி அடி என்று அடிப்பார்கள். தடிகள் சிம்பு சிம்பாப் போகும் வரை அடிப்பார்கள். எங்களை அடிக்கவென்றே ஒரு லொறி லோட் தடிகளை பறித்து வைத்திருந்தாங்கள்.''


அங்குனாவெலயைச் சேர்ந்த பி.ஏ.பொடிகாமினியின் மகன் கீர்த்திசிறியை 7.7.89 அன்று கைது செய்யும் போது இராணுவப் பொலிஸ் தொன் லக்ஷ்மன் எதிரிசிங்க '' நீ போ! இல்லாட்டி உன்னையும் சுடுவன்!! என தன்னைப் பார்த்துக் கூறியதாக பொடிகாமினே கூறுகிறாள். அதே தொன் லக்ஷ்மனின் அம்மா 93ம் ஆண்டு டிசம்பரில் ''ஒருத்தனை மட்டும் கொன்றால் காணாது, குடும்பத்தையே துலைக்கவேணும் எனப் பொடிகாமினேயைப் பார்த்துக் கூறியிருக்கிறாள். இராணுவத்தில் மகனொருவன் வேலை செய்வதால் அவனது அம்மாவுக்கும் அதிகாரங்கள் வந்துவிடுவது இலங்கையில் மாத்திரமே ஆகும் (?). இது தொடர்பாக பெரதெனியாப் பொலிஸில் பொடிகாமினே முறைப்பாடு செய்ததைக் கேள்விப்பட்டு 13.04.94 அன்று அவர்களிடம் வந்து தொன் எதிரிசிங்க மீண்டும் இப்படிக் கூறினான்: '' நாங்கள் எதுவும் செய்ய முடியும். ஏனென்றால் நாங்கள் இராணுவத்தில் இருக்கிறோம். தேவை என்றால் குண்டும் எறிவோம் உங்களுக்கு.'' இவை பற்றி பொலிஸ் எந்த நடவடிக்கையும் எடுக்கவேயில்லை. தனது மகன் தமது கிராம சனசமூக நிலையத்தின் தலைவராகத் திறம்படச் செயற்பட்டதையிட்டு இராணுவப் பொலிஸான லக்ஷ்மன் ஆத்திரமடைந்திருந்தார் எனவும் கூறினார்.

எஸ்.எல்.எவ்.பி. ஆதரவாளரான றண் கொத்கெதர நந்த சேன, (வயது 65) தனது மகனின் கைதுக்கு டீ.ஐ.ஜீ.உடுகம்பொலவே காரணம் எனவும், தனது மகன் எந்தவிதமான அரச எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் சம்பந்தப்படாதவர் எனவும் கூறினார்.

இரத்மீவல மெனிக்திவலவைச் சேர்ந்த அளுத்கே அபேயரட்ண தனது இரு மகன்களான சந்திரசிறி அபேயசேகர, திசாநாயக்கே அபேயசிறி ஆகியோர் காணாமல் போனதையிட்டு பின்வருமாறு கூறுகிறார்: ''என்னால் உண்மைகளை மறைக்க முடியாது. எனது மூத்த மகன் (சந்திரசிறி அபேயசேகர ) ஜே.வி.பி.யினருக்கு ஆதரவளித்திருந்தார். ஆயினும் அவரை ஜே.வி.பி. குழுவினரே கழுத்தில் வெட்டிக் காயப்படுத்தனர். காயம்பட்ட அவனை மருத்துவமனையில் சேர்த்த பொழுது அங்கு வைத்துப் பொலிஸார் கைது செய்தனர். எனது மகன் 1980ம் ஆண்டு யூலை மாதம் நடந்த பொதுவேலை நிறுத்தத்தில் தனது அரசாங்க வேலையை இழந்ததில் இருந்து விரக்தி அடைந்திருந்தார். அவரை மருத்துவமனையில் இருந்து காவல் நிலையம் கொண்டு சென்று பின் நீதிமன்றத்தில் பாரப்படுத்தினர். நீதிமன்றம் அவரை மாதத்தின் முதல் ஞாயிறும் கடைசி ஞாயிறும் காவல் நிலையம் சென்று கையொப்பம் இடும்படி கட்டளையிட்டது. இதன்படி அவர் கையொப்பமிடக் காவல்நிலையம் சென்றார். சென்றவர் அதன் பின் திரும்பி வரவே இல்லை. அவரைப் பார்வையிடச் சென்ற எனது மற்ற மகன் திஸாநாயக்கே அபேயசிறியும் திரும்பிவரவில்லை.

விசாரணை மன்றத்தில் இன்னும் கண்ணீர் பெருகிறது.

பதுளை வெலேகெதர வீதியைச் சேர்ந்த ஜீ.என்.வீரரட்ண தனது மகன் கபில சுதர்சனா (வயது29) காணாமல் போனது தொடர்பாக பின்வருமாறு கூறுகிறார்: '' எனது மகன் பதுளை தலைமைப் பொலிஸ் நிலையத்தில் உள்ள சில பொலிஸார் மீது, தன்னை அவதூறு செய்ததற்காக வழக்குத்தாக்கல் செய்திருந்தார். அந்த வழக்கு ஆரம்பமாவதற்கு இருகிழமைகள் முன்பதாக அவர் காணாமல் போனார். இது தொடர்பாக நான் இவ்வாறு காணாமல் போனவர்களை தடுத்து வைத்திருந்த இடமான ''வெதக்காகாரயா'' (மருந்து கொடுக்கும் இடம் எனப்பொருள்படும்)வுக்குப் போனேன். அங்கிருந்த பொலிஸாரிடம் எனது மகன் பற்றி விசாரித்தேன். அப்பொழுது எனக்குக் கிடைத்த பதில் ''நீ பொலிசுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தனீதானே! நல்லது இப்ப நீ போய் உன் மகனுக்காக தானம்செய்'' ( ஒருவரின் இறப்பின் பின் செய்யும் தானம்)



ஓவியம் - வீரசந்தானம் -

வெதக்காகாரயா என்னும் இடம் பற்றி அவர் கூறுகையில், ''அந்த இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட எவரும் இன்று உயிருடன் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அந்த இடத்தில் பொது இடத்தில் சொல்லவே முடியாத பல விசயங்கள் நடந்தன''. கபிலசுதர்சனா அரச எதிர்ப்பு வேலைகளில் ஈடுபட்டவரோ ஜே.வி.பி.யில் ஆர்வம் கொண்டவரோ அல்ல எனவும் வீரரட்ண குறிப்பிட்டார்.

தெற்கு , மேற்கு, சம்பிரகமுவ மாகாணங்களில் 1988ல் இருந்து காணாமல் போனோர் தொடர்பாக விசாரிப்பதற்கென நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுக்களில் ஒன்று பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இலக்கம் 2 - 103 அறையில் செயற்பட்டு வருகிறது. மனோகரி முத்தெட்டுவேகம தலைமையில் பேராசிரியர் அமல் ஜெயவர்தனே, ஜெயந்த டீ அங்மெடா குணரட்னே ஆகியோர் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். மற்றைய குழு ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி சுந்தரலிங்கம் தலைமையில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற மாவட்டங்களுக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

இவ்விரு விசாரணை அரங்குகளிலும் பெருகிய கண்ணீரின் துளிகளே மேற்கூறியவை.

பல கட்சி ஆட்சிமுறையுள்ள நாடு; தர்மிஸ்ட ஆட்சியுள்ள நாடு; எனப்பறைசாற்றப்பட்ட நாட்டில் தங்களது பிள்ளைகளும் உறவினர்களும் காணாமல் போனதையிட்டு பொலிஸில் முறைப்பாடுகளைச் செய்ய முடிந்திருக்கவில்லை. இராணுவமும் பொலிஸும் தாம் நினைத்தபடி எல்லாம் செயற்பட்டிருந்தன. தனிப்பட்ட குரோதங்கள் மாற்று அரசியல் கட்சியொன்றின் ஆதரவாளராக இருந்தமை, பொறாமை என்பனவே அதிகளவு கொலைகளின் பின்னணியாக இருந்துள்ளது. கடத்தப்பட்டவர்கள் அல்லது கொலை செய்யப்பட்டவர்கள் பற்றிய முறைப்பாடுகளின் மீது நீதியான விசாரணைகள் நடத்தப்படவே இல்லை. **இவை அரச பயங்கரவாதத்தின் பண்புகள் என முடிவு செய்வதில் என்ன தவறு.**

**சட்டத்திற்கும் நீதிக்கும் ஒழுங்கமைந்த வாழ்க்கை என்பது சட்டத்தை அமுலாக்கும் அலுவலர்களாலும் ஜனநாயகச் சிந்தனையுடன் வாழ்ந்து காட்டப்பட வேண்டியதொன்றாகும்.**

**நடந்து முடிந்த பயங்கரங்களில் சம்பந்தப்படடிருந்த பொலிஸ் இராணுவ அதிகாரிகளின் செயல்கள் அரசின் இராணுவ பொலிஸ் நீதிமன்ற அமைப்புக்கள் யாவும் உண்மையிலும் மக்களது வாழ்வு ஒழுங்கமைக்கப்படுவதற்காக உருவாக்கப்பட்டவையோ என்ற கேள்வியை எழுப்புகின்றன.** மறுபுறத்தில் அப்பாவிகளை அல்ல, நாட்டில் வன்முறைகளில் ஈடுபட்டவர்களையே நாங்கள் கைது செய்தோம் (கழுத்தில் ரயர் போட்டோம்) எனச் சொல்வார்கள் எனின் **அவ்வாறு வன்செயல்களில் ஈடுபட்டவர்களும் கூட, ஏன் ஈடுபட்டார்கள் அவர்களை விரக்தி அடையச் செய்த காரணிகள் எவை? அக்காரணிகளின் அடிப்படைகள் என்ன? என்பன போன்ற கேள்விகளை எழுப்பித்தீர்வு காண்பது தானே ஜனநாயக சமூக நலன்புரி அரசின் கடமை.** ஆணைக்குழுவின் தலைவி மனோகரி முத்தெட்டுவேகம பின்வருமாறு சொல்கிறார்: **''இந்தத் துயரமான சம்பவங்கள் சட்டத்திலும் ஒழுங்கிலும் ஏற்பட்ட உடைவு மட்டுமன்றி நமது சமூக பொருளாதார நிலைமைகளின் மீதான வெளிப்பாடுமாகும்''.**

கிட்டத்தட்ட 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விண்ணப்பங்களைப் பெற்றுக்கொண்டுள்ள இவ்வாணைக்குழுக்கள் இதுவரை 200க்கும் மேற்பட்ட விசாரணைகளையே முடித்துள்ளன இவ்வாணைக்குழுவின் செயற்பாடுகள் மீதும் அவதானிகளால் இரு விமர்சனங்கள் வைக்கப்படுகின்றன.

1. விசாரணைக்குழு அனுப்பப்பட்ட பல விண்ணப்பங்களைப் போதிய சாட்சியங்கள் இல்லை என நிராகரித்துள்ளது.

நள்ளிரவுகளிலும் முகமூடி அணிந்தவர்களாகவும் வந்து ஆட்களைக் கடத்திச் செல்கையில்; சாட்சியங்களாக இனம் காணப்பட்டவர்களும் கூட காணாமல் போகையில் போதிய சாட்சியங்களைப் பாதிக்கப்பட்டவர்கள் சமர்ப்பிப்பதெப்படி?

2. மேற்குறித்த விசாரணைகள் அநேகமானவற்றில் இராணுவமும் பொலிஸுமே குற்றவாளிகளாக இனங்காணப்படப்பட்டு வருகின்றமையால் தொடரும் விசாரணைகளுக்கு அவர்களிடம் இருந்து பாரிய அழுத்தம் விசாரணைக்குழுக்கள் மீது பிரயோகிக்கப்படுவதாக உள்ளிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கிடைக்காவிடினும் குற்றவாளிகளுக்கு தண்டனை அளிப்பது முக்கியமாகும்.

'' எனது மகனோ, எனது கணவனோ , அல்லது எனது சகோதரியோ ஒரு போதும் என்னிடம் திரும்பி வரப்போவதில்லை. ஆனால் அவர்களை கருவறுத்தவர்கள் ஊமைச்சனங்களின் கண்ணீரிலும் இரத்தத்திலும் சீவித்தபடி இன்னும் இன்னும் கொலைகளைச்செய்து கொண்டு நிம்மதியாக வாழ்கிறார்களே''.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பெண்கள் - குழந்தைகள் உரிமையும் புதிய சட்டச் சீர்திருத்தமும்

சென்ற இதழ் தொடர்ச்சி



ஜீவா ஆரோக்கிய மேரி

குறறப புலனாயவுத் துறைக்கென இலங்கையில் ஒரேயொரு இரசாயன ஆய்வு கூடமேயுள்ளது. பரிசோதனைக்காக விந்துகள் ஆண், பெண் இருவரதும் உடைகள் அனுப்பப்பட்டு அறிக்கை வந்த பின்னரேயே மஜிஸ்ட்ரேட் நீதிமன்றில் வழக்கு ஆரம்பமாகும். இந்த மருத்துவ அறிக்கைவர ஐந்து மாதங்களுக்கு மேல் செல்கிறது.

மஜிஸ்ட்ரேட் நீதி மன்றில் வழக்கு பிரதான வழக்கறிஞர்கள் சபையில் (Attorney Generals Department) பாலியல் வல்லுறவுஎன அங்கீகரிக்கப்பட வேண்டும். அதன் பின அது உயர் நீதி மன்றத்திற்குக் கொண்டு செல் லப்படும். மஜிஸ்ட்றேட் நீதி மன்றத்திலிருந்து உயர் நீதி மன்றத்திற்கு வழக்கு செல்ல குறைந்தது இரண்டு வருடங்களாவது எடுக்கும். இதற்கிடையில் விந்து பரிசோதிக்கப்பட்டு குறிப்பிட்ட ஆண் வழக்குத் தொடுத்துள்ள பெண்ணுடன் புணர்ச்சியிலீடுபட்டது நிச்சயிக்கப்பட்டால் அவன் இரு வார தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு பிணையில் விடு தலை செய்யப்படலாம். அல்லது மஜிஸ்ட் றேட் நீதிமன்றில் வைத்தே பிணையுடன் விடுவிக்கப்படலாம்.

பாலியல் வல்லுறவு தொடர்பான வழக்கில் பெண்ணின் சாட்சியங்கள் மிகக் கூர்மையாக அவதானிக்கப்படும். பொலிஸ் நிலையத்தில், மஜிஸ்ட்றேட் மன்றில், உயர் நீதிமன்றில் அவர் ஒரே மாதிரியாகவே கூற வேண்டும்.

பொலிஸ் நிலையத்தில் கதைத்ததற்கும், உயர் நீதி மன்றில் கதைப்பதற்குமிடையிலுள்ள கால இடைவெளியை வருடங்களாலேயே கணிப்பிட வேண்டியுள்ளது. இந்நிலையில் வல்லுறவிற்குள்ளான பெண் எங்ஙனம் ஒரே மாதிரியான சாட்சியத்தைக் கூற முடியும்?

வழக்கறிஞர் ஒருவரின் கூற்றுப்படி பாலியல் வல்லுறவிற்குள்ளான பெண்ணை சட்டம் பகிரங்கமாக மூன்று முறை வல்லுறவு செய்கிறது. பொலிஸ் நிலையத்திலும் நீதிமன்றத்திலும் அவள் பல ஆண்களுக்கு முன்னிலையில் தனது அந்தரங்கப் பகுதிகளையெல்லாம் குறிப்பிட்டு தனக்கு என்ன நடந்ததென்பதை அப்படியே கூற சட்டம் பெண்ணை நிர்ப்பந்திக்கிறது.

தன் மீது இழைக்கப்பட்ட கொடுமையானது தனது சம்மதத்திற்கு மாறாக நடந்த குற்றம் என்பதையே பெண் நீருபிக்க வேண்டும். பெண்ணின் சம்மதம் என்பது தான் பாலியல் வல்லுறவு தொடர்பான வழக்கில் பிரதானமானதாயுள்ளது.

குறிப்பிட்ட ஆண் விந்தும் பெண்ணுடலில் காணப்பட்ட விந்தும் ஒன்றென நிருபணமான நிலையில் எதிரியின் தர்க்கம் பெண்ணின் சம்மதத்துடனேயே புணர்ச்சி நடைபெற்றது என்பதாயிருக்கும். ஆணின் பக்க வழக்கறிஞர்கள் பெண்ணின் சம்மதம் என்பதைத் தான் தமது வழக்கிற்கு ஆதாரமாய்க் கொள்கின்றனர்.

பாலியல் வல்லுறவு வழக்கில் ''புணர்ச்சி பெண்ணின் சம்மதத்துடன் நடந்ததா/ இல்லையா? என்பதே தீர்மானிக்கும் காரணியாயிருப்பதால் நான் சம்மதிக்கவில்லை என பெண் வாதாடுவதிலும் விட அவள் சம்மதித்தாள் எனும் ஆணின் வாதம் பலமானதாயமைகிறது.

இதைவிட நீதிமன்ற அணுகுமுறைகள் ஆணுக்குமான வழக்கில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பை வழங்குகின்றன.

ஆண் தரப்பு வக்கீல் பெண்ணிடம் பலவிதத்திலும் கேள்வி கேட்கலாம். (உ+ம்: ஒரு வழக்கில் எதிர்தரப்பு வக்கீல் பெண்ணிடம் ஒரு பென்சிலைக் கொடுத்து அதை தனது கையிலுள்ள கடதாசியில் காணப்படும் ஓட்டையில் போடச் சொன்னார். பெண் அதைப்போட முயற்சிக்கும் போது அந்த வக்கீல் கடதாசியை அங்கும் இங்கும் அசைத்து அதைப் போடவிடாமல் தடுத்தார். பின் அவரது வாதம் பின் வருமாறு அமைந்தது. ''நான் கடதாசியை அங்குமிங்கும் அசைத்ததால் இந்தப் பெண்ணால் பென்சிலை கடதாசியிலுள்ள ஓட்டையில் போட முடியவில்லை. அதேபோல் இவள் எதிர்த்திருந்தால் எப்படி ஆண் குறியை யோனியில் செலுத்தியிருக்க முடியும்....?)''

மேலும் பெண்ணின் கடந்தகால வாழ்க்கையை கேள்விக்குள்ளாக்கலாம் பெண் நடத்தை சரியில்லாதவள் என நிரூபிப்பது ஆணின் தரப்புக்கு மிக இலகுவானதும் பயனுள்ளதுமாகும். இதனால் அநேகமாக எல்லா வழக்குகளிலும் இதுவே ஒரு துடுப்பாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. எதிரிக்காக அமரும் வக்கீல்கள் பாதிக்கப்பட்ட பெண்ணை விபச்சாரியாக, ஒழுக்கங்கெட்டவளாக சித்திரிக்க முயல்வர். வக்கீல்களால் பலர் முன்னிலையிலும் வல்லுறவு பல செய்திருந்தாலும் அவற்றிற்கெதிராக வழக்குத் தொடுக்கப்படாதிருந்தால் அவற்றைக் காரணம் காட்ட முடியாது.

ஆண் தரப்பு வக்கீல் ஒரு போதும் அவனை விசாரணைக்கூண்டிற்கு கொண்டு வருவதில்லை. அப்படி வரும்பட்சத்தில் அவன் அகப்பட்டுக் கொள்வான் என்பது வக்கீல்மாருக்குத் தெரியும். இதைக் ''நீதிமன்றும்''டும் அங்கீகரித்துளளது.

இங்கு பாலியல் வல்லுறவு (Rape) என்பது பெண்மீது இழைக்கப்படும் வன்முறையாக- அத்துமீறலாக பார்க்கப்படாமல் வெறும் பாலியல் செயற்பாடாக குறுக்கப்பட்டுள்ளது.

இப்படியாக ஒவ்வொரு வழக்கும் எட்டு முதல் பத்து வருடங்களுக்குக் குறையாமல் தொடரும். இவ்வளவு காலத்திற்கும் குற்றவாளி வெளியில் சுதந்திரமாக இருக்க அனுமதிக்கப்படுகிறான். இதற்கிடையில் பல பாலியல் வல்லுறவுக் குற்றங்களைப் புரியும் சந்தர்ப்பம் அவனுக்குள்ளது.

இன்னுமொரு முக்கியவிடயம் என்னவென்றால் இவ்வளவு காலத்திற்கும் வழக்கு நடத்த செலவழிக்க வேண்டியுள்ளது. ஆணின் தரப்பில் அனுபவமுள்ள வக்கீலை கூடிய செலவு செய்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள அமர்த்துகிறான். ஆனால் பெரும்பாலும் பெண்ணின் தரப்புக்கு ஓரிருவருட அனுபவ முள்ள அரச வக்கீல்களே ஆஜராகின்றனர். இதனால் பெண் தரப்பு வாதங்கள் காத்திரமாயிருப்பதில்லை. மிகப் பெரும்பாலான வழக்குகள் (70% என்பதும் குறை வானதே) தள்ளுபடியாவதே நடை முறையிலுள்ளது. குற்றம் நிருபிக்கப்பட்டாலும் ஒத்திவைப்புச் சிறைத்தண்டனையே பெரும் பாலும் வழங்கப்படுகிறது. உ+ம்: மகளை பலாத்காரம் செய்த தகப்பன் குற்றத்தை ஒப்புக்கொண்ட தால் அவனு க்கு ஒரு வருட ஒத்தி வைப்புச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. இதன்படி இத்தகைய குற்றத்தை அவன் மீண்டும் செய்தால் தண்டனையை அனுபவிக்க நேரும்.)

பொதுவாக இந்த வழக்குகளின் முடி

செய்திருப்பாள்- இறந்திருப்பாள் -ஆண் இறந்திருப்பான்- நிர்பந்தத்தின் காரணமாகவோ/இயலாமையாலோ பெண் தன்னை வல்லுறவுசெய்தவனையே திருமணம் செய்திருப்பாள்.

ஒட்டு மொத்தத்தில் இந்த சட்ட நடவடிக்கையால் நீதி கிடைத்ததா இல்லையா என்பதை விட பெண் மேலும் துன்புறுத்தப்பட்டதாகவே முடிகிறது. பல வருடங்களாக இழுத்தடிக்கப்படும் வழக்குகளில் அநேகமான பெண்கள் நம்பிக்கையிழந்து விடுகின்றனர். இதனால் இவர்கள் தமக்குள் குமுறிக் குமுறியே உளவியல் ரீதியாகக் காயப்படுகின்றனர். வாழும் காலம் முழுதும் தமக்குள் துயரத்தைப் புதைத்துக் கொண்டிருக்க நேர்கிறது. அப்படித் தான் குற்றவாளி தண்டிக்கப்பட்டாலும் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு என்ன நிவாரணத்தை- ஆறு தலை அளிக்க சட்டம் முயன்றுள்ளது.....?

இந்நிலையில் பெண்களையும்- குழந்தைகளையும் பாதுகாக்க இருக்கும் சட்டத்தில் என்ன மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்பதையும் பார்ப்போம்.

* இரத்த உறவுகளுக்கிடையிலான புணர்ச்சி (incest) குற்றமாகும்.
* கணவனும் மனைவியும் விவாகரத்து கோரின நிலையில் நீதி மன்றத்தின் முடிவுப்படி பிரிந்து வாழும் காலத்தில் ஆண் பெண்ணை நிர்ப்பந்தித்து உறவு கொள்வது பலாத்காரம் ஆகக் கருதப்படும்.-
* பெண்ணின் திருமண வயது பன்னிரண்டிலிருந்து பதினெட்டாக உயர்த்தப்பட்டுள்ளது.
* பதினாறு வயதுக்குக் கீழ்ப்பட்ட பெண்ணுடன் அவளது சம்மதத்துடனோ/ சம்மதமின்றியோ ஆண் உறவு கொள்வது பலாத்காரமாகக் கருதப்படும்.-
* சிறுவர்/ சிறுமியரை ஆபாசப்படங்களுக்குப் பாவிப்பது, சிறுவர்கள் மீதான பாலியல் இம்சை, சிறுவர்களை பாலியல் வியாபாரத்தில் ஈடுபடுத்துவது யாவும் குற்றமாகக் கருதப்படுகிறது.

மேற்கண்ட குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு குறைந்தது ஏழு வருட சிறைத்தண்டனை அளிக்கப்படுவதுடன் அவர்கள் தம்மால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமும் அரசுக்கு குற்றப் பணமும் செலுத்த வேண்டும் எனவும் புதிய சட்டம் கூறுகிறது.

திருமண வாழ்வில் கணவன் அந்தரங்கத்தில் மனைவியை இம்சிப்பது சட்டத்தில் பேசாப்பொருளாயிருக்கிறது. அரசும் அதை மூடி வைத்துவிட்டு விவாகரத்து செய்து கொள்ளும் நிலையிலிருப்பவர்கள் பக்கம் மாத்திரம் பெயருக்குப் பார்வையைச் செலுத்தியுள்ளது. அப்படியானால் திருமண உறவில் கணவன் மனைவியை வல்லுறவு செய்வதை (Marital rape) சட்டமும் அங்கீகரிக்கின்றது என்று தானே அர்த்தம்?

நாளாந்தம் பெண்கள் மீது இழைக்கப்படும் பாலியல் அத்துமீறல்கள் பற்றி எதுவுமே கதைக்காமல் நழுவி விட்டதும் அரசின் சாமர்த்தியம் தான். வல்லுறவு செய்த குற்றவாளியை பெண் பிடித்துக் கொடுத்தாலும் அவனைத் தண்டிக்க திராணியற்ற/விரும்பாத அரசு, தினம் தினம் வீதிகளிலும் பஸ்களிலும் பொது இடங்களிலும் பெண்கள் மீது நடக்கும் பாலியல் அத்துமீறலை ''ஆணாதிக்க பாசிசத்தை'' அடக்க எப்படி முன்வரும்?

ஆணாதிக்க சட்டத்துறையில் கட்டமைப்பில் எதுவித மாறுதலும் ஏற்படுத்தாமல் பெண்களை பாலியல் பண்டமாகவே பார்க்கப்பழகிவிட்ட ஆணாதிக்க மனோபாவமுடைய சமுதாயத்தை அப்படியே கட்டிக்காத்தபடி புத்தகத்தில் சில வரிகளை மாத்திரம் மாறறி விட்டால் பெண்களும்- குழந்தைகளும் நன்மையடைவார்கள் என அரசு நம்பினாலும், நாளாந்தம் பாதிக்கப் படும் பெண்கள் தமது காதில் பூச்சுற்றப்படுவதை உணரவே செய்கிறார்கள்.

புதிய சட்ட திருத்தங்கள் அறிவிக்கப்பட்ட சூடு கூட மாறாத நிலையில் பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் பல காதுக்கு எட்டிவிட்டன. அதிலொன்று நுவரெலியா மாவட்டத்தில் ஐம்பத்தைந்து வயது ஆண் மூன்று வயதுப் பாலகியை வல்லு றவு செய்த சம்பவம். சட்டங்கள் இயற்றப்படுவதையல்ல குறிப்பிட்ட சம்பங்கள் நடைபெறாமல் தடுப்பதையே பெண்களாகி நாம் எதிர்பார்க்கிறோம்.

கருக்கலைப்பு பற்றியும், பெண்கள் நலன் காக்கும் (!) அரசு கதைக்கத் தவறவில்லை. புதிய சட்டத்தின்படி தாயின் உயிருக்கு ஆபத்து நேரும் போது மாத்திரமல்ல, வல்லுறவுக்குள்ளான பெண்கள், தடை செய்யப்பட்ட இரத்த உறவுகளால் கருத்தரித்த பெண்கள் தமது வயிற்றில் வளரும் கருவைக் கலைத்துக் கொள்ளும் உரிமையுடையவர்கள். அதேபோல் ஊனமுற்ற குழந்தையாக மாறும் என மருத்துவர்கள் நிச்சயிக்கும் போதும் கருவைக் கலைத்துக் கொள்ளலாம். இதைத்தவிர வேறு எந்த நிலையிலும் பெண்களுக்கு தமக்கு வேண்டாத கருவைக் கலைத்துக் கொள்ளும் உரிமை கிடையாது.

இந்த நாட்டில் பெரும்பாலான பெண்கள் முறையான குடும்பக்கட் டுப்பாட்டு அறிவின்றியிருப்பதும், பொருளாதாரக் காரணங்களுக்காகவும் சமூகக் காரணங்களுக்காகவும் தமக்கு வேண்டாத கருவை அவர்கள் ஏதாவதொரு வழியில் கலைத்துக் கொள்வதும் அரசுக்குத் தெரியாதா?

''தமக்கு வேண்டாத கருவைக் கலைத்துக் கொள்ள இந்நாட்டின் பெண்கள் அனைவரும் உரிமையு டையவர்க்ள்'' என ஒரேவரியில் கூறிச் செல்ல ஏன் இந்த அரசுக்கு முடியாதிருக்கிறது? பெண்கள் தமது உடலை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க ஆணாதிக்க அரசு விரும்பாது என நாமே தான் சமாதானம் செய்துகொள்ள வேண்டும்?.

எப்படியோ புதிய சட்ட திருத்தங்கள் பரந்தளவில் ஒரு சலசலப்பை ஏற்படுத்துவதை தொடர்பூடகங்கள் மூலமாக அறிய முடிகிறது. எனினும் இதுவரை கால சட்ட இயக்கப் போக்கிலும் சட்ட அணுகு முறையிலும் பெண்களாகிய நாம் கசந்து போயுள்ளோம். புதிய சட்ட த்தின் மூலம் நடைமுறையில் பெண்களுக்கு நீதி தேடித்தருமளவுக்கு சட்டத்துறையின் பக்கத்தில் ஒத்துழைப்புக் கிடைக்குமா என் பது சந்தேகமே எழுத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டாலும் நடை முறையென்று வந்து விட்டால் மீண்டும் அதே பழைய பாணி சட்ட அணுகு முறையைத் தான் முகங் கொடுக்க நேரும் என்பதை நாம் அறிந்தேயுள்ளோம். இதனால் புதிய சட்டங்களின் வருகையால் பெண்கள் எமது மனிதாய உரிமைகள் பாதுகாக்கப்பட்டு விட்டது என நாம் ஏமாறப் போவதில்லை, இப்பொழுதெல்லாம் எமது கண்கள் எந்நேரமும் விழித்துக் கொண் டிருக்கின்றன.

●

**குடும்ப அலகில் பெண்கள், குழந்தைகள் உரிமைகள் குறித்த ஔவையின் அவதானங்களைத் தொடர்ந்து குறமகள், ஜீவா ஆரோக்கிய மேரி ஆகியோரும் தமது அபிப்பிராயங்களை எழுதியுள்ளனர். இக்கருத்தாடலில் வாசகர்களும் பங்கேற்கலாம்.**

**ஆ - ர்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "அபே ரட்டே" மூலம் முஸ்லிம்கள் அந்நியப்படுத்தப்பட்டனர்

எம். எல். ஏ. காதர்

***1.இலங்கை முஸ்லீம்களின் அரசியலில் அண்மையில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் கவனிப்புக்கு உரியது. தேசியக் கட்சிகளுக்கு சரண் என்ற நிலையில் இருந்து தனிக்கட்சி என்ற அளவுக்கு முஸ்லீம்கள் கவனத்தைத் திருப்பி உள்ளனர். இதற்கான அரசியல் பின்புலங்களைக் கூற முடியுமா?***

முஸ்லீம் மக்கள் அரசியலில் பங்குபற்றல் அவர்களின் சமுதாயப் பொருளாதாரத் தேவைகளுக்கேற்ப காலத்திற்குக் காலம் மாற்றமுற்று வந்திருக்கின்றது.

உதாரணத்திற்கு காலனித்துவ காலத்தின் இறுதிப்பகுதியிலும் சுதந்திர தொடக்க காலத்திலும் இடம்பெற்ற முஸ்லீம் அரசியலைக் கவனிப்பின் அது பாரிய பொருளாதார சமுதாயப்பிரச்சினைகளைக் களையும் பொருட்டு நடாத்தப்பட்ட அரசியல் என நாம் வர்ணிக்கமாட்டோம், முஸ்லிம் மக்களின் அடிப்படைக் கலாசார உரிமைகளுக்கே அவ்வரசியல் பெருமளவு கவனம் செலுத்தியிருந்தது. முஸ்லீம் கல்வி நிலையங்கள், முஸ்லீம் பாடசாலைகள், தரமான அரபிக் கல்லூரிகள், முஸ்லீம் விடுமுறை தினங்கள், முஸ்லீம் விவாகப்பதிவு, முஸ்லீம் பள்ளிவாசல்களின் நிர்வாகம் போன்ற விடயங்களுக்கே மிகுந்த அக்கறையினை அவ்வரசியல் காண்பித்தது. காலனித்துவ கால பிரித்தானிய சட்ட ஒழுங்கின் கீழ் தமிழர்களும், சிங்களவர்களும், முஸ்லீம்களும் சமயசார்பற்ற முறையில் காலனித்துவ சட்ட திட்டத்தின் படி ஒரே மாதிரி நடாத்தப்பட்டதனால், கலாசார விடயுங்களைப் பேணுவதே முஸ்லீம்களுக்கு பாரிய பொறுப்பாக, அடிப்படைத் தேவையாக அன்றிருந்தது. முஸ்லீம்கள் தமிழ் பேசினாலும், அவர்கள் தனியானதோர் இனமாக மதிக்கப்படுதல் வேண்டும் என்ற அம்சம் அரசியலில் அடிநாதமாகியது. ஆதலால் கலாசார உரிமைகள் முக்கியம் பெற்றன.

மேலும் சுதந்திரத்தின் பின் இடம் பெற்ற அரசியலும் தொடக்க காலத்தின் கலாசாரம் சம்பந்தமான விடயங்களுக்கே கவனம் செலுத்தின. இங்கு முஸ்லீம் தலைவர்கள் விடுத்த சமய கலாசார ரீதியானவற்றை அரசு நிறைவேற்றுவதில் பாரிய எதிர்ப்புகள் அரசிற்கு இருக்கவில்லையென்பதனாலேயே, முஸ்லீம் தலைவர்களுக்கும் தேசியக் கட்சித் தலைவர்களுக்கும் இடையிலான உறவு சமூகமாகவும், பரஸ்பரமாகவும், நெருங்கியதாகவும் தொடர்ந்து இருக்க நேர்ந்தது. மேலும் முஸ்லீம்களின் தலைவர்கள் தனியான அமைப்புகளை ஆக்க வேண்டும் என்ற எண்ணமோ, அரசியலில் தீவிரப் போக்குகளை கையாளுதல் வேண்டும் என்ற உந்துதல்களோ அவர்களுக்கு இருக்கவில்லை. தேசியக் கட்சித் தலைவர்களோடு ஒன்றுபட்டும், அவர்களின் நல்லுறவின் மூலமும் முஸ்லீம் பிரச்சினைகளை அணுகி, தீர்வுக்குட்படுத்தவே விருப்புக் கொண்டனர். இங்கு தேசியக் கட்சித் தலைவர்களும், முஸ்லீம் தலைவர்களும் ஏறத்தாழ ஒரே வர்க்கப் பின்னணியிலிருந்தே தோற்றம் பெற்றிருந்தமையினால், இவர்கள் மத்தியில் உருவான புரிந்துணர்வு பலமானததாகவும் காரியங்களைச் சாதிக்கக் கூடியதாகவும் அமைந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் அறுபது எழுபதுகளில் குறிப்பாக 'அபே ரடே' (எங்களுடைய நாடு) என்ற கோஷங்கள் கலந்த அரசியல் தோற்றம் பெற்ற போது, முஸ்லீம் மக்கள் படிப்படியாக அந்நியப்படுத்தப்பட்டனர். தமிழ் - சிங்கள கைகலப்புகள் இனவுணர்வுகளை முதன்மைப்படுத்திய போது முஸ்லீம்களும் படுமோசமாக பாதிப்படைந்தனர். வர்த்தகத்துறையிலும் உற்பத்தி முயற்சிகளிலும் ஜீவனோபாயம் தேடிய முஸ்லீம்கள் ஏழைகளாயினர். ''நாடோடிகள்'' ''சுரண்டி வாழ்பவர்கள்'' என்று இவர்கள் மீது குத்தப்பட்ட முத்திரைகள் அவர்களது வியாபார நிலையங்களையும் தொழில் முயற்சிகளையும், இறக்குமதி வியாபார நிறுவனங்களையும் அரசு பொதுவுடமையாக்க உதவின. இவ்வாறு முஸ்லீம்களின் நீண்ட வரலாறு மறைக்கப்பட்டு, அரசும் தனியாரும் பகற்கொள்ளை செய்தபோது, அரசியல் தலைவர்கள் ''கண் பொத்தி வாய் மூடி'' தங்கள் அதிகாரத்தையும் பாராளுமன்ற இருக்கையையும் பாதுகாத்துக் கொள்வதிலேயே நாட்டம் கொண்டிருந்தனர்.

1980களில் இனப்பிரச்சினையின் உச்சம் முஸ்லீம் மக்களின் உயிருக்கும், உடமைக்கும் தீ வைத்த போது முஸ்லீம் தலைமைத்துவத்தின் மேல் வகுப்புத் தன்மையும், முஸ்லீம் தலைவர்களின் ''அரைநேர'' அரசியல் நடாத்தும் பாணியும் மிகுந்த குறைபாடாக காணப்பட்டது. முஸ்லீம் மக்கள் விமோசனத்திற்கு புதிய சிந்தனை, அமைப்புத் தேவை என்ற விவரம் அறிந்துணரப்பட்டது. இவ்வாறு நிலை கொண்டிருந்த எண்ணத்தை, சிந்தனையை வெளிப்படுத்த முஸ்லீம் காங்கிரஸ் துணைநின்ற போது, அது புது வேகமும் உற்சாகமும் பெற்று வளர்ந்தது.

முஸ்லீம் கட்சியமைப்பு முஸ்லீம் மக்களின் அரசியல் தேவையின் நிறைவாக்கத்திற்கு வேண்டியதோர் பலமான அத்திவாரத்தை இட்டிருக்கின்றது. காலத்தேவைக்கு ஏற்ப அக்கட்சி தன்னையும் மாற்றி, சமூகத்தையும் மாற்றிச் செல்லும் என்பது என் கருத்து.

***2.ஓர் இனம் முழுமையாகப் புறக்கணிப்பிற்குள்ளாகும் போது தமக்கான தனிக்கட்சி பற்றிய தேவை எழுவது இயல்பு. அவ்வாறாயின் முஸ்லீம் காங்கிரஸின் செயற்பாடுகள் எவ்வளவு தூரம் இந்த இலக்கை அடைந்துள்ளது?***

ஒரு சிறுபான்மை இனம் ஓரளவு பாதிப்படையலாம்; அதனால் பரவாயில்லை; என்பது போல் கேட்கிறீர்கள்.

ஆனால் நான் அவ்வாறு எண்ணவில்லை. ஒரு காலில் பட்ட அடியைப் பரவாயில்லை என்று விட்டு விட முடியுமா? அதற்கு மருந்து வைத்து ஆற்றும் போதே மனிதன் சுகம் பெறுகிறான். அது போலவே ஒரு இனத்தின் ஒரு பகுதி அழிக்கப்படும் போது, அது மறுபகுதிக்கும் ஆபத்தாக முடியும். ஆதலால் இவ்விடயத்தில் ''கொஞ்சம் புறக்கணிப்பு'', ''பாரிய புறக்கணிப்பு'' என்று கூறுவதற்கு இடமில்லை.

உண்மையில்: முஸ்லீம்கள் அவர்களுக்குரிய இடத்தை அரச பொருளாதார நிர்வாக போக்கில் பெறவேண்டுமாயின் அவர்கள் பால் நின்று சிந்தித்து செயற்படுவதற்குத் தேவையான ஒழுங்கமைப்பும், மூலவளமும், மூளைப்பலமும் ஓர் இடத்தில் கூட்டப்பட்டு செயல்பட வேண்டும். இது மாத்திரமல்ல. அது ''முழு நேரம்'' செயல்படும் ஒன்றாக இருத்தல் வேண்டும். அப்போதே ஓர் இயக்கவிசையை முஸ்லீம் பிரச்சினை அரசியலில் பெறுதல் கூடும். ''சந்தர்ப்பவாத அரசியலையே'' முஸ்லீம்கள் மேற்கொள்ளுவார்களா எனக் கேட்டால் ''ஆம்'' என்றே பதில் சொல்வேன். ஆனால் அதனையும் திறம்படச் செய்வதற்கு முழுநேரம் சிந்தித்துச் செயலாற்றும் ''முஸ்லீம் அமைப்பு'' அவசியமாகும். இன்று முஸ்லீம்களுக்குள்ள உரிமைகளும் சலுகைகளும் நாளையும் சலுகைகளாகவும் உரிமைகளாகவும் இருக்க வேண்டுமாயின் இன்றைய அரசியல் சூழ்நிலையில் தனிக்கட்சி அவசியம் என நூறு முறை சொல்வேன்.

***3.அரசின் தீர்வு யோசனைகள் வடக்குக் -கிழக்கு முஸ்லீம்களின் பிரச்சினைகளுக்கு தீர்வாகுமா?***

அரசு முன்வைத்துள்ள ''தீர்வு யோசனைகள்'' அதிகாரப் பரவலாக்கத்தைப் பொருளுள்ளதாக்கியுள்ளது. வடக்குக் -கிழக்குப் பிராந்தியத்தை எடுப்பின் அதனை அரசு தனிப்பிராந்தியம் என்றோ, அல்லது பல பிராந்தியங்கள் என்றோ, அல்லது பல பிராந்தியங்கள் இணைந்த ஒரு கூட்டுப் பிராந்தியம் என்றோ பிரகடனப்படுத்தவில்லை. சனநாயக முறைப்படி வடக்குக் கிழக்கில் வாழும் தமிழர்கள், முஸ்லீம்கள், சிங்களவர்கள் ஆகியோர்களைக் கலந்தாலோசித்ததன் பின்னரே, அதனைச் செய்ய அரசு உத்தேசித்திருப்பது அதன் உயர்ந்த சனநாயகப் பண்பையே காட்டுகிறது. முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வாழும் பிராந்தியங்களை உள்ளடக்கியதொரு தனியமைப்பைச் சிருஷ்டித்து, வடக்குக் -கிழக்குப் பிராந்தியத்தோடு இணைக்க முடியும் என்றும், சிங்கள மக்களையும் இவர்களது ஒரு கூட்டாகவும் ஆக்குதல் கூடும் என்றும் அரசு திட்டமிட்டிருக்கலாம். எவ்வாறு இத்தீர்வு யோசனைகள் இலங்கையைப் பல பிராந்தியங்களாகப் பிரித்திருக்கிறதோ அதேபோன்று, வடக்குக் கிழக்குப் பிராந்தியத்தையும் பல பிரிவுகளாகக் கண்டு ஒன்றுபடுத்தி ஒரு கூட்டாக்கலாம் என்ற நோக்கம் அரசு பெற்றிருக்கலாம் அல்லவா?

ஆனால் ஒரு விவரத்தை இங்கு வலியுறுத்துதல் வேண்டும் அரசு முன்வைத்துள்ள தீர்வு யோசனைகள் ''முஸ்லீம் பிரச்சினைகள்'' என்ற கோணத்திலிருந்து நோக்கப்பட்டவையல்ல.

உண்மையில் இது தமிழ் மக்களைப் பெருமைப்படுத்தும் ஆலோசனைகளாகவே உள்ளன. அந்நோக்கத்திலிருந்து அரசு வழங்கியுள்ள அதிகாரப் பரவலாக்கத் தீர்வுக்குள் நின்றே முஸ்லீம்களுக்கும் ஓர் இடத்தை இரங்கிப் பெறுதல் வேண்டும். அதுவே முஸ்லீம் மக்களின் இன்றைய அரசியல் நிலைப்பாடாகும். சாந்தி, சமாதானம் என்று தினமும் பேசும் முஸ்லீம் சமூகம், இறைவனிடம் வேண்டும். ''கெஞ்சுதலையே'' தங்களது ஆயுதங்களாகக் கருதும் முஸ்லீம்கள், அம் முறையையே தொடர்ந்தும் அரசியல் போக்கிலும் கையாளுதல் மூலம் வெற்றி பெறுவர்.

***4.முஸ்லீம் மாகாணசபைக் கோரிக்கை இன்று தென்கிழக்கு மாகாணசபையாக பரிமாணம் பெற்றுள்ளது. முஸ்லீம்களின் நீண்ட கால அபிலாசைகளுக்கு தென்கிழக்கு மாகாணசபை திருப்தியான தீர்வாகுமா?***

தென்கிழக்கு மாகாணசபை அமைப்பு முஸ்லீம் மக்களின் நீண்ட கால அபிலாசைகளுக்கு வழிவகுத்துக் கொடுக்கும் என்பதே என் கருத்து. காரணம் முஸ்லீம் மக்கள் அரசியல் யாதாயினும் ஓர் இடத்தின் பலமான அத்திவாரத்தில் இடப்படுதல் வேண்டும். எல்லா மாவட்டங்களிலும், மாகாணசபைகளிலும் ''எடுப்பார் செல்லப்பிள்ளையாக'' இருத்தல் கூடாது. தென்கிழக்கு மாகாணத்தில் மாத்திரமே முஸ்லீம்கள் பொறுப்புள்ள முறையில் முஸ்லீம்களுக்காக முழுநேரம் சிந்திக்கும் வாய்ப்புக் கிடைக்கும். அவர்கள் அரசியல், கலாசாரம் பரிணமிக்கும். இது சம்மந்தமான ஆக்கபூர்வ நடவடிக்கைகளை அங்கு எடுத்தல் முடியும். கொழும்பு வாழ் முஸ்லீம்களின் எண்ணிக்கைப் பலத்துடன், இணைந்து செயல்படும் போதே முஸ்லீம் மக்களுக்கு இந்நாட்டில் பூரண விமோசனம் ஏற்படும் என்பதே என் கருத்து.

***5.அரசின் தீர்வு யோசனையாக முஸ்லீம்களுக்கு அம்பாறை மாவட்டத்தின் அம்பாறைத் தொகுதி தவிர்ந்த சம்மாந்துறை பொத்துவில் கல்முனைத் தேர்தல் தொகுதியின் உள்ளடங்கிய உபபிராந்திய சபையினை முன்வைத்துள்ளது. உபபிராந்தியம் என்பதற்கு அப்பால் பிராந்திய சபையாக முன்வைக்கப்படுவதே முஸ்லீம்களது தனித்துவத்திற்கு சாதகமானது என்று கூறப்படும் கருத்துக்கள் தொடர்பாக உங்கள் நிலைப்பாடு என்ன?***

*எம். எல். ஏ. காதர் B. A.(HONS), M. A. அரசியல் விஞ்ஞானத்துக்கான பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர். தற்போது தென் கிழக்கு பல்கலைக் கழகத்தில் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். முஸ்லிம்களது அரசியலிலும். அவர்களது அபிவிருத்தி யிலும் தீவிரமான அக்கறை காட்டுபவர்.*



நீங்கள் கூறுவது போல் முழுப் பிராந்தியம் ஒன்றை முஸ்லீம்களால் ஆக்கிக் கொள்ள முடியுமானால் அதுவே சிறப்பு. ஆனால் அது கிடைக்காத பட்சத்தில் முஸ்லீம்கள் தங்களுக்கென ஒரு உபபிரிவினைக் கோருவதில் பிழையொன்றிருப்பதாக நான் கருதவில்லை. மன்னார் முஸ்லீம்களின் நலனும் வடபுல முஸ்லீம்கள் நலனும் தட்டுப்பட்டுப் போகிறதே என்று ஐயப்படுபவர்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். அவர்கள் நலன் சார்பாக உறுதியாக நின்று அரசியலில் பேசுவதற்கு முதலில் ஓர் அத்திவாரம், எங்கேயாவது ஓர் இடத்தில் இடப்பட வேண்டும்.

***6.வடகிழக்கு முஸ்லீம் தமிழ் - உறவுகள் சிதைந்தமைக்கான பொறுப்பான காரணங்களை விளக்குவீர்களா?***

முஸ்லீம் - தமிழ் இன உறவுகள் வடக்கிலோ, கிழக்கிலோ வேறு எந்த இடத்திலோ சிதைவுறவில்லை என்பது என் கருத்து. காரணம் அரசியல் இலாபத்திற்காக பல சேஷ்டைகள், கொலைகள், கொள்ளைகள் நடாத்தப்பட்டுள்ளன. அதுவும் குறிப்பிட்ட சில அமைப்புகளால் நடாத்தப்பட்டுள்ளன. இதற்கு முழுத் தமிழ் சமூகமும் பொறுப்பல்ல. இந்நடவடிக்கைகள் பல நூறு ஆண்டுகள் நின்று வளர்ந்து பூத்த உறவினைப் பாதிக்கும் என்று நான் நம்பமாட்டேன். குறிப்பாக கிழக்கிலங்கைத் தமிழர்களையும், முஸ்லீம்களையும் பிரிக்க முடியாதளவு சமுதாய, பொருளாதார நலன்களில் ஒன்றிணைக்கப்பட்டிருக்கிறார்கள். காலப் போக்கில் சில சீரழிவுகள் சீராகிவிடும்.

***7.முஸ்லீம்களின் தனிக்கட்சி தமது தேவைகளில் அக்கறையற்றுள்ளது. ஆயின் தீவிரவாத அரசியல் தனித்துவத்தை சாத்தியமாக்கலாம் என்ற நிலைப்பாடு முஸ்லீம் அரசியலின் இன்னுமொரு வளர்ச்சி எனப்படுகிறது. இதுபற்றி தங்கள் கருத்து என்ன?***

தனிக்கட்சி தமது தேவைகளில் அக்கறையற்றுள்ளது என்ற தங்களது கூற்றும், தீவிரவாத அரசியலில் தனித்துவத்தைப் பேணலாம் என்ற உங்கள் கூற்றும் கட்சியின் உள்வாரி அம்சங்களைக் கருத்தில் கொள்கிறதா, அல்லது வெளிவாரியான விடயங்களில் கவனம் வைக்கிறதா என்று தெரியவில்லை.

முஸ்லீம் கட்சியொன்று வெற்றிபெற வசீகரத் தலைமைத்துவம் அவசியம். ஒரு கட்சியின் சாதனைகள் தொடர்ந்தும் அதற்கு கேடயங்களாக அமையும் போது, அக்கட்சியின் தலைமைத்துவம் வசீகரத்துவத் தன்மை பெறுகிறது. அந்நிலையில் சனநாயகம் கட்சியினுள் பேணப்பட வேண்டும் என்ற கேள்விக்கு இடமில்லை. ஆனால் நீண்டகாலம் கட்சி பிரயாணம் செய்ய வேண்டும் என்பதனால், அதனுள் சனநாயகப் பண்புகளை வசீகரத் தலைவர்களே நிர்மாணித்து, அதனைச் சம்பிரதாயங்களாக பேண வழிவகுப்பவர். முஸ்லீம் மக்கள் ஆயுதம் தாங்கிப் போராட வேண்டும் என்ற சூழ்நிலை அவர்களுக்கு உருவாகாது. போத்துக்கேயர், டச்சுக்காரர்கள் காலத்திருந்தே, முஸ்லீம் சமூகத்திற்கு ஏற்பட்ட அச்சுறுத்தல்களைச் சமாளித்து பழகியவர்கள் முஸ்லீம்கள். அதற்கு உறுதுணையாக அவர்களது மதப்பற்று இருந்திருக்கிறது என்பதனை கருத்தாகக் கொள்ள வேண்டும்.

***8.ஜேர்மன் பிரதிநிதித்துவம் முஸ்லீம்களுக்குச் சாதகமாகலாம் என்று கூறுகிறார்கள். இதுபற்றி விளக்குவீர்களா?***

ஜேர்மன் முறை முஸ்லீம்களுக்கு மாத்திரமல்ல முழு இலங்கையரசியலையும் சீர்திருத்தத்திற்குள்ளாக்குவதற்கு ஏற்ற பரிகாரத்தைக் கொண்டிருக்கிறது என்பதே என் கருத்து. ஜேர்மன் விகிதசமப் பிரதிநிதித்துவ முறையின் சிறப்பம்சங்களும் ஒன்று, அம்முறை சிறந்த அனுபவசாலிகளை, கல்விமான்களை, தொழிலதிபர்களை, பாராளுமன்றம் கொண்டு செல்ல நோக்க பெற்றிருத்தலாகும். ''பட்டியல் முறையை'' உருவாக்கி அப்பட்டியலில் அனுபவசாலிகளை, திறமைசாலிகளை, கல்விமான்களை, விஞ்ஞானிகளை, திறமைசாலிகளை, சிவில்சேவை உயர் உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்துக் கொள்கிறது. ஒரு கட்சிப் பட்டியிலில் இடம் பெறும் இத்திறமைசாலிகள் பின்பு கட்சிக்குக் கிடைக்கும் மொத்த வாக்குகளுக்கேற்ப பாராளுமன்றத்திற்கு தெரிவாகின்றனர்.

பாராளுமன்றம் செல்லும் நீதிவான்கள், கல்விமான்கள், சிவில்சேவை உத்தியோகத்தவர்கள் தங்கள் பதவிகளை சம்பள உயர்வுகளை இழக்கமாட்டார்கள். மீண்டும் அதே பதவிக்கு அவர்கள் எந்நேரமும் வந்து சேர்ந்துவிட முடியும் என்பதனால், அவர்களைப் பட்டியலில் இருந்தும் ஆடசேர்ப்பதும் கடினமான விடயமாக இருப்பதில்லை.

இலங்கை முஸ்லீம் மக்களுக்கு வரப்பிரசாதமாக இம்முறையிருக்கும் என நான் கூறும் போது, அக்கருத்தை மிகைப்படக் கூறுகிறேன் என தயவு செய்து எண்ணவேண்டாம். ஜேர்மன் முறையின் ''இரு வாக்கு முறை'' என்ற அம்சம் இலங்கையில் அமுலாகின், அத்தோடு 50:50 என்ற பண்பும் உட்புகின் முஸ்லீம்களின் பிரதிநிதித்துவப் பண்பு உயர்வு பெறும்.

முஸ்லீம்கள் ஐ.தே.கவோடும் ஸ்ரீ.ல.சு.கட்சியோடும் இணைந்து செயல்பட வேண்டும் என்று ஆர்வமுள்ளவர்கள். அதேநேரம் முஸ்லீம் மக்கள் நலன் பாதிப்படையாத வகையிலும், ''முஸ்லீம் கட்சியை' பராமரிக்க வேண்டும் என்ற உள்நோக்கம் கொண்டவர்கள். ஜேர்மன் முறையின் இருவாக்கு என்ற அம்சம், அதாவது ஒரு வாக்காளன் தனக்கிருக்கும் இரு வாக்குகளில் ஒன்றை தொகுதியில் போட்டியிடும் தேசியக் கட்சி வேட்பாளர்களில் ஒருவருக்கும் எடுத்த வாக்கை தேசியக் கட்சிப் பட்டியலுக்கும் வழங்கலாம் என்ற பண்பும், அவ்வாறு வழங்கும் இருவாக்குகளும் ஒரே கட்சிக்கு இருக்க வேண்டும் என்ற அத்தியாவசியமில்லை என்ற ஷரத்தும் முஸ்லீம்களின் அடிப்படையான விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு இடமளிக்கிறது. அக்குறணையில் வாழும் ஒரு முஸ்லீம் வாக்காளன், தனக்கிருக்கும் ஒரு வாக்கை தான் விரும்பும் தேசியக் கட்சியினில் இருந்து போட்டியிடும் (ஐ.தே.கவோ அல்லது ஸ்ரீ.ல.சு.கட்சியோ) போட்டுவிட்டு அடுத்த வாக்கை முஸ்லீம் கட்சிக்கு வழங்குதல் கூடும். இவ்வம்சம் வேறு எந்த ஒழுங்காலும் சாத்தியமில்லை என்பதனாலேயே இன்று ஜேர்மனியில் நடைமுறையிலுள்ள பிரதிநிதித்துவ முறை முஸ்லீம்களுக்கு வரப்பிரசாதமாக அமையும் என நினைக்கின்றேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வடக்கு முஸ்லீம்களின் பிரச்சினைகள் தனித்துவமானவை

**- ஹஸ்புல்லாஹ்**

***சாஹுல் ஹமீது ஹஸ்புல்லாஹ் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றுகிறார்.***
***இலங்கை முஸ்லீம்களின் சமூக பொருளாதார நிலைமைகள் தொடர்பாக தொடர்ச்சியான ஆய்வுகளில் ஈடுபட்டு வருகிறார்.***
***வட மாகாணத்திலிருந்து புலிகளால் விரட்டப்பட்ட முஸ்லீம் அகதிகளின் அரசியல் உரிமைகள் குறித்தும், அவர்களது சமூக பொருளாதார மேம்பாடு குறித்தும் ஆரவாரமில்லாமல், ஆனால் அழுத்தமாகக் குரல் கொடுத்து வருகிறார். அவருடனான பேட்டி இது. பேட்டி கண்டவர் ஆர். எம்.இம்தியாஸ்.***

ஆ-ர்

**தேசியக்கட்சிகளினால் முஸ்லிம்கள் திருப்திகரமான அரசியல் பாதுகாப்புக்களைப் பெற்றுக்கொள்ள முடியாததன் வெளிப்பாடே முஸ்லீம் காங்கிரஸ் ஆகும். ஆனால் முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களின் நலனில் எவ்வளவு தூரம் சாதகமான நகர்வுகளை முன்னெடுத்துள்ளது?**

இலங்கையில் முஸ்லிம் கட்சி ஒன்றின் வளர்ச்சிக்கு, முஸ்லிம்களுக்கு தேசிய கட்சிகளில் ஏற்பட்ட அதிருப்தி மட்டுமல்ல, இந்திய இலங்கை ஒப்பந்தத்துடன் உருவான பிரதேச மட்டத்திலான அரசியல் வளர்ச்சியும், வட - கிழக்கு மாகாண சபையில் முஸ்லீம்களின் செறிவும் காரணங்களாகும்.

முஸ்லிம்களை அரசியல் ரீதியாக இணைப்பதிலும் அவர்களின் பிரச்சினைகளை அடையாளப்படுத்தி, அவற்றைத் தேசியமயப்படுத்துவதிலும் முஸ்லிம் காங்கிரஸ் சாதகமான பங்களிப்பைச் செய்துள்ளது.


அதே நேரத்தில் இக்கட்சி முஸ்லிம்களின் இஸ்லாமிய உணர்வை அரசியல் வளர்ச்சிக்காகப் பயன்படுத்த எடுத்த முயற்சிகள் தமிழ் - முஸ்லிம், சிங்கள - முஸ்லிம் உறவில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தின.

**இனப்பிரச்சினைக்கான தீர்வு ஆலோசனைகள் வட, கிழக்கு முஸ்லிம்களைப் பொறுத்து சாதகமாக அமையுமா?**

பாதுகாப்பும், இன - அரசியல் தனித்தவத்தைப் பேணுவதற்கான யாப்பு ரீதியான வழிமுறைகளுமே வட - கிழக்கு முஸ்லீம்களின் முக்கிய வேண்டுகோள்களாகும். இன்றைய தீர்வுத்திட்ட ஆலோசனைகளில் இவ் அபிலாஷைகள் கருத்துக்கு எடுக்கப்படவில்லை, தமிழரைப் பெரும்பான்மையாகக்கொண்ட வட - கிழக்குப் பிரதேசத்திற்கு சுயநிர்ணய அடிப்படையிலான அதிகாரப் பரவலாக்கல் என்ற அம்சத்தை மட்டுமே நோக்காக இத்தீர்வு ஆலோசனை கொண்டுள்ளது.

**தென்கிழக்கு மாகாணசபையின் உள்ளடக்கம் முன்னைய முஸ்லீம் மாகாணசபையின் உள்ளடக்கங்களை விட குறைவானது என்றுவிமர்சிக்கப்படுகிறது. இது பற்றி என்ன கூறுகிறீர்கள்?**

தென்கிழக்கு பிரதேச சபை ஒன்று உருவாக்கப்படக்கூடிய சாத்தியம் பற்றி அரசியல் தீர்வு ஆலோசனைக்கான தீர்வுத் திட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. அரசாங்கத்துக்கும் முஸ்லிம் காங்கிரசுக்குமிடையில் இது பற்றிய உள்ளரங்கமான திட்டம் இருப்பதாக செய்திகள் குறிப்பிகின்றன.



**வடபகுதி முஸ்லிம்களின் அரசியல் அபிலாஷகள் பொதுவாக ஏனைய பகுதி முஸ்லிம்களின் அரசியல் அபிலாஷைகளில் இருந்தும் மாறுபட்டதா?**

இலங்கை முஸ்லீம்கள் இந் நாட்டின் எந்தப் பிரதேசத்தில் வாழ்ந்தாலும் அவர்களின் அடிப்படை அபிலாஷைகளாக அடையாளப்படுத்தப்படக்கூடியவர்கள் இவர்களின் பாதுகாப்பும் அரசியல் இன தனித்துவத்தைப் பேணுவதற்கான யாப்பு ரீதியான வழிமுறைகளும் ஆகும். வடமாகாண முஸ்லீம்களின் அபிலாஷைகளும் இவற்றிலிருந்து வேறுபட்டவை அல்ல. அதே நேரத்தில் பலவந்தமான வெளியேற்றத்தினால் வடமாகாண முஸ்லீம்களுக்கு உருவான அரசியல் - மனிதாபிமானப் பிரச்சினைகளுக்கும், மீண்டும் தமது வாழ்விடத்தில் குடியேறுவதோடு தொடர்பான நடைமுறைப் பிரச்சினைகளும் இம்மக்களின் தனித்துவமான பிரச்சினைகளாக காணப்படுகின்றன. இவை ஏனைய முஸ்லிம்களின் பிரச்சினைகளில் இருந்து வேறுபட்டனவாகும்.

**வடபகுதி முஸ்லிம்களுக்கான அரசியல் இயக்கத்தின் தேவையினை இது வெளிப்படுத்துகிறதல்லவா?**

வடமாகாண முஸ்லீம்கள் சொத்துக்கள் பறிக்கப்பட்ட நிலையில் ஆயுதமுனையில் பலவந்தமாக வாழ்வுரிமை மறுக்கப்பட்டு எல். ரீ. ரீ.ஈ.யால் வெளியேற்றப்பட்டார்கள். முஸ்லிம் - தமிழ் உறவு சுமூகமாக இருந்த சூழ்நிலையில் இப்பாதகமான நிகழ்ச்சி வேறு எந்த பிரதேச அல்லது இன மக்களுக்கும் நிகழ்ந்ததொன்றல்ல. இப்பலவந்தமான வெளியேற்றம் இம்மக்களுக்கு மிகவும் பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றது.

முஸ்லீம் சார்ந்த கட்சிகளும், தலைவர்களும் இம்முஸ்லீம்களின் வெளியேற்றத்தை தமது அரசியல் இலாபத்துக்குப் பயன்படுத்தினார்களே தவிர, தனித்துவமான இம்மக்களின் பிரச்சினைக்கு தேசிய , சர்வதேச அங்கீகாரத்தையும் தீர்வையும் பெற்றுத்தர முயற்சிகள் எடுக்கவில்லை.

நீண்ட கால இடைவெளிக்குப்பின் இம்மக்கள் மத்தியில் உருவாகி வருகின்ற சில இயக்கங்கள் இம்மக்களின் அரசியல் விழிப்புணர்ச்சிக்கும், இம்மக்களின் பிரச்சினைகளை தேசிய, சர்வதேச மயப்படுத்துவதற்கும் முயன்று வருகின்றன. இவ்வியக்கங்கள் அரசியல் இயக்கமாக உருவாகுவதில் பல நடைமுறைப் பிரச்சினைகள் காணப்படுகின்றன.

**உத்தேச அரசின் தீர்வு யோசனைகள் வடபகுதி முஸ்லிம்களின் நலனில் ஏற்படுத்தும் தாக்கங்களை கூற முடியுமா?**

உத்தேச அரசியல் ஆலோசனையில்

1. வடமாகாண முஸ்லீம்களின்மீள் குடியேற்றத்தையும்

2. பொருத்தமான அரசியல் பிரதிநிதித்துவத்தையும் பாதுகாப்பையும் உத்தரவாதப்படுத்தாவிட்டால் இம்மக்களின் எதிர்காலம் மிகவும் மோசமானதாக மாறும். சொந்த நாட்டிலேயே அநாதைகளாக வாழ்கின்ற நிலை நீடிக்கும். நீண்ட காலத்தில் சமூக, பொருளாதார, காலாசார தனித்துவம் இழந்த நிலைக்கு இம்மக்கள் இட்டுச் செல்லப்படலாம்.

**நிகழ்கால தமிழ், முஸ்லிம் உறவின் பாதகமான போக்குகளுக்கு அடிப்படைக் காரணங்களாக எவற்றை நீங்கள் அடையாளப்படுத்துகிறீர்கள்?**

வட -கிழக்குப் பிரதேசம் தமிழர் தாயகம் மாத்திரமே என்ற தீவிரவாத தமிழர்களின் கண்ணோட்டமும், அதை நிலைநாட்டுவதற்கான முஸ்லீம்களுக்கு எதிரான அரசியல், அத்துடன் ஆயுத முயற்சிகளும் தமிழ் - முஸ்லிம் உறவின் இன சகஜ நிலைமைக்கு எதிரான காரணிகளாகக் காணப்படுகின்றன.

**இலங்கை முஸ்லிம்களின் பரவலான அங்கீகாரத்தைப் பெற்ற முஸ்லிம் தலைமையொன்று இன்னும் முழுமையாக சாத்தியமாகவில்லை. இதற்கான காரணங்களினை கூறமுடியுமா?**

முஸ்லீம்கள் இலங்கை பூராவும் பரந்து வாழ்கின்றார்கள். இம்மக்களின் அரசியல் அபிலாஷைகள் தாம் வாழும் சமூக, பொருளாதார, இன சூழலால் செல்வாக்குப்படுத்தப் படுகின்றது. பிரதேசமட்டத்திலான அதிகாரப் பரவலாக்கலை அடிப்படையாகக் கொண்ட இன்றைய அரசாங்கத்தின் உத்தேச தீர்வுத் திட்டம் ஒன்றிணைந்த இலங்கை முஸ்லீம்களின் அரசியல் தனித்துவத்திற்கு பாதகமானதாகும். இது அரசியல் ரீதியாக முஸ்லீம்களை ஒன்றிணைக்க முடியாத சூழ்நிலையை எதிர்காலத்தில் உருவாக்குவதோடு முஸ்லிம்களின் சமய, இன, கலாசார, ரீதியான வளர்ச்சியையும் பறிக்கக்கூடியது. எனவே புதிய அரசியல் யாப்புச் சீர்த்திருத்தத்தில் இலங்கை முஸ்லிம்களை ஆகக்குறைந்தது சமய, கலாசார ரீதியாகவாவது ஒன்றாக இணைக்கக் கூடியதான யாப்பு ரீதியான ஒழுங்குகள் அவசியமாகும். எவ்வானான யாப்புரீதியான வழிமுறைகள் செய்யப்பட வேண்டும் என்பது பற்றி முஸ்லிம்கள் மிக அவசரமாகச் சிந்திக்க வேண்டும்.

**முஸ்லிம்களின் தனிக்கட்சி தோல்வியான அரசியல் அனுபவங்களைப் பெறுமாயின் அது தீவிரவாத அரசியலுக்கு வழிப்படுத்தப்படலாம் எனப்படுகிறது. இது பற்றி உங்கள் கருத்தென்ன?**

இலங்கையில் முஸ்லீம்களின் புவியியல் பரம்பல் வெற்றிகரமான தீவிரவாத முஸ்லிம் அரசியல் வளர்ச்சிக்குச் சாதகமாக அமையாது. கடந்த காலத்தில் அவ்வாறு ஏற்பட்ட, தீவிரவாத முஸ்லிம் அரசியல் முயற்சிகள் முளையிலேயே கிள்ளி எறியப்பட்டன. இலங்கையின் எதிர்கால தேசிய, பிரதேச அரசியல் நிதர்சனத்தைப் புரிந்து கொண்ட அடிப்படையான அரசியல் நிலைப்பாடே முஸ்லீம்களின் ஆரோக்கியமான அரசியல் எதிர்காலத்திற்குப் பொருத்தமானதாகும்.

# முஸ்லீம் ஊர்காவல்படை இனமுரண்பாடுகளை மேலும் அதிகரிக்கும்

**முஹிர் றஹ்மான்**

**வட,கிழக்கு முஸ்லிம்கள் ஊர்க்காவல் படைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். முஸ்லிம்களது பாதுகாப்புக்கு இது உத்தரவாதம் கொடுக்குமா?**

முஸ்லிம்களது பாதுகாப்புக்காக அரசு முஸ்லிம் இளைஞர்களை ஊர்க்காவல் படைகளில் சேர்த்துள்ளது. உண்மையிலேயே இது பெரும் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும். முஸ்லிம்கள் தம் பாதுகாப்பில் பூரணமான அக்கறைக் காட்ட வேண்டும் ஆயின் அது ஊர்க்காவல் படைகளில் சேர்வதாக அமைவதில் முடிவடையக்கூடாது. அரசபடையான ஊர்காவற்படை இன முரண்பாடுகளை மேலும் அதிகரிக்கும். அதிகம் பயிற்சி பெறாத, பூரண தெளிவில்லாத இப்பிரிவினர் சகோதர தமிழ் இனத்தை சந்தேகித்து செயல்படுவதும், அரச படைகளுக்கு ''மூன்றாம் நிலை'' வேலைகளில் உதவி வழங்குவதும் பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கும். இது முஸ்லிம்களது நீண்டகாலப் பாதுகாப்புக்கோ, குறுங்காலப் பாதுகாப்புக்கோ உதவாது.

**முஸ்லிம்களது சொந்தப் படைப்பரிவின் அவசியத்தை விளக்குவீர்களா?**

இலங்கையில் முஸ்லிம்கள் சிங்களப் பேரினவாதத்தாலும், தமிழ்தேசியவாதத்தாலும் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளனர். வட, கிழக்கில் தமிழ் இயக்கங்களால், நசுக்கப்பட்டுள்ளார்கள் என்றால், தெற்கில் அரசபடைகளால், அரச குண்டர்களால் பாதிப்படைந்துள்ளனர். முஸ்லிம்கள் என்பதற்காய், அவர்களது அடிப்படை குணாம்சங்களை நசுக்குவதற்காய் முஸ்லிம்கள் அடக்கப்பட்டுள்ளனர். இந்த நாட்டில் சிங்கள மக்களைப் பாதுகாக்க சிங்களப் படைகள் இருக்க முடியுமாயின், தமிழர் படையொன்றை உருவாக்க நாட்டு சனாதிபதியே உடன் பட முடியுமாயின் முஸ்லிம்களுக்கான சொந்தப்படை என்ற கோரிக்கை எவ்வகையிலும் பிழையானதல்ல.

**அரச நிறுவனம் சிங்கள மயப்பட்டுள்ளது. இதற்குள் முஸ்லிம்கள் இன சமத்துவத்தை அனுபவிக்கலாமா?**

இலங்கை அரசப் படை சிங்களப் பேரினவாதப்படையாகவே உள்ளது. சிங்களப் பேரினவாதத்தின் மூல இலக்கு தூய சிங்களமயம். இதற்கு முன் ஏனைய இனங்கள் சமத்துவத்தை அனுபவிக்கலாம் என்பது கற்பனையே. ஆகவே நிகழ்காலத்து இன விடுதலைப் போராட்டம் தவிர்க்க முடியாததே.

**முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களின் பிரச்சினைகளினை சரியான வகையில் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை என எழுகிற குற்றச்சாட்டைப் பற்றி... ?**

முஸ்லிம் காங்கிரஸ் தனது ஆரம்பகாலங்களில் முஸ்லிம்களின் தேசியத் தேவைகளை முதன்மைப்படுத்தி செயற்பட்டது.ஆனால் அதன் அடிப்படையான பிற்போக்கு, வர்க்கக் குணாம்சம் காரணமாக அதுபின் வந்த காலத்தில் சந்தர்ப்பவாத நிலைகளை எடுத்துள்ளது. நண்பர் யார், எதிரி யார்? என்று சரியான வகையில் அடையாளம் காணாது தனது நலனை மட்டும் முக்கியமாக்கி தலைவர் அஷ்ரஃப் காய்களை நகர்த்தினார். காங்கிரஸின் முஸ்லிம் மாகாணசபை இன்று தென் கிழக்கு மாகாண அலகாக சுருங்கும் அளவுக்கு காங்கிரஸின் பிற்போக்குத்தனம் காணப்படுகிறது.

**முஸ்லிம் இளைஞர்களின் ஒரு பகுதியினர் ஆயுத அரசியலை நோக்கி தள்ளப்பட்டு வருகின்றனர் என்கிற அபிப்பிராயம் பற்றி....?**


முஸ்லிம்கள் அடக்கப்பட்டுள்ளனர். இதனைப் பயன்படுத்தி முஸ்லிம் காங்கிரஸும் துரோகமாய் இயங்குகிறது. இந்நிலையில் ஆயுத அரசியலில் ஆர்வம் ஏற்படுவது தவிர்க்கமுடியாது. அவ்வாறு ஏற்பட்டால் அதற்கான பொறுப்பு எம்மை ஏமாற்றிய பேரினவாதக் கட்சிகளையும், காங்கிரஸையும் சாரும்.

*முஹிர் ரஃமான்*
*முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் பொதுச் செயலனர், முஸ்லிம்களது அரசியல் தொடர்பாக ஆர்வம் காட்டும் இளைஞர்களுள் ஒருவர்.*

பேட்டித் தொகுப்பு:- பாமியா பாரூக்

# வா வந்து சுடு

காத்தான்குடி நஸீம்



துப்பாக்கியை உடைத்து நொருக்கி விட்டுப்
பேசு என்னிடம்
நீ இப்படித்தான் நெடுகிலும்....

நான் தவண்டு திரிஞ்சதும்
என்னை ஊட்டி வளர்த்ததும்
இந்தப் பூமி தான்...

313 அஸ்ஹாபுகளின் விசுவாசம்
எனக்குள் வேர்களாகி நாளும்
நான் நிமிருகையில்...
நீ வேறு வந்து
தீயை மூட்டுவதும் என் நெஞ்சத்தைத்
திருப்பித் திருப்பிச் சுடுவதுமாய்...!

ஆயுத வணங்கி!
அறத்தின் மார்புகளை
வெட்டிக் கீலம் பண்ணி மகிழும்
உன் கடைசிக்காலம் இதுதான்....

என் வேதத்தில் உள்ளபடி
ஒவ்வொரு வெள்ளி இரவுகளையும்
நான் எதிர்பார்க்கிறேன்....

பஞ்சாய்ப் பறக்கும் மலைகள் வெடிக்கும்!
கை கோர்க்கும் ஆறும் கடலும்
கட்டிப் புரளும்!
பூமி கொட்டாவி விடும்
ஒரே ஒரு முறை
நீயும் நானும் அப்போது கிடப்போம்
வயிறூதிச் செத்த மாடுகள் போலவும்
வெள்ளத்தில் அடிபட்ட கெழுத்திகள் போலவும்

இஸ்ராபீலின் ஊது குழலுக்கு எக்காளமிட
இறைவன் ஏவும் வரைதான்....
நீ என்னை அச்சமூட்டுவாய்....!
உனது ஆயுதக் கிடங்குகளுக்குள்ளும்
அணு உலைகளுக்குள்ளும் இருந்து கொண்டு.

முட்டாள்!
என் தந்தையின் விந்தும்
என் தாயின் முலைப் பாலும்
கிளைவிட்டுப் பரந்து போய்க் கிடக்கும்
என் பாச மண்ணை விட்டும்
ஒரு சதுர அடி கூட
நகர முடியாது என்னால்!
முடியுமானால் என் நெஞ்சில்
சுட்டுப் போட்டு எடுத்துக் கொள்.
இந்தப் பூமியை!
இன்னும் முடியுமானால் உன்னை
மனிதன் என்றும் சொல்லிக் கொள்!

www.tamilarangam.net



# தமிழர் என்பதால்...

95மார்ச் 3 முதல் இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தராக சேர்ந்து இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிலையத்தில் ஒருவருட காலத்தைக் கொண்ட ப்யிற்சி நெறி ஒன்றில் கலந்து கொண்டுள்ளேன். எனக்கு வழங்கப்பட்ட நியமனக்கடிதத்தின் படி அரசாங்கப்பதவி நியமன விதிகளுக்கு இணங்க உத்தியோகத்தர் ஒருவர் சமர்ப்பிக்க

வேண்டிய மருத்துவ அறிக்கையைப் பெறும் பொருட்டு 95ஜுன் 19ம் திகதி கொழும்பு பொது மருத்துவமனையின் முதலாம் இலக்க அறைக்கு சென்று தொடர்பு கொண்டபோது நியமனக்கடிதம், மற்றும் அடையாள அட்டை என்பனவற்றைச் சமர்பிக்குமாறு கேட்கப்பட்டேன். இதற்கிணங்க நான் அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பித்தேன். மேலும் என்னுடன் சில தமிழ் பேசும் ஏனைய நீர்வாக சேவை உத்தியோகத்தர்களும் வந்திருந்தனர். நாங்கள் தமிழ் பேசியதை அவதானித்த அங்கு இருந்த அதிகாரிகள் நீங்கள் மோலதிகமாக பொலீஸ் அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் எனக்கேட்டனர் நான் ஏன் இதைச்சமர்பிக்க வேண்டும் எனக்கேட்ட பொழுது அங்கு இருந்த ஊழியர்கள் கல்முனையில் இருந்து வந்துள்ளீர்கள் எனவே நீங்கள் கட்டாயமாக பொலீஸ் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் எனக்கூறினர். என்னவகையான பொலீஸ் அறிக்கை என்று எங்களுக்குப்புரியவில்லை. பின்னர், இவ்விடயத்தை இவ்வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு தெரியப்படுத்தினோம். ஆனால் பயன் ஏதும் கிடைக்கவில்லை. இன்னும் எங்களுடைய மருத்துவ பரிசோதனையை செய்ய முடியாத நிலையில் விசனமுற்றுள்ளோம்.

பின்னர் எங்களது ஏனைய சிங்கள நண்பர்களிடம் விசாரித்த பொழுது இப்படியான அறிக்கை வழங்கத் தேவையில்லை என்றும் கண்டி, காலி, அனுராதபுரம் போன்ற இடங்களில் இருந்துவந்த நாங்களும் மருத்துவ பரிசோதனையை எந்த அறிக்கையையும் சமர்ப்பிக்காமல் இதே மருத்துவ மனையில் முடித்த விட்டோம் எனக் கூறினர்.

ஆயின் தமிழ்பேசிய ஒரே காரணத்துக்காகவே எங்களுக்கு மருத்துவபரிசோதனை செய்யும் உரிமை மறுக்கப்பட்டது இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தருக்கே இந்நிலை என்றால் ஏனையவர்களின் நிலை என்னவாகும் என்பது மிகவும் வேதனைக்குரியதாகும். எனவே தயவு செய்து சம்மந்தப்பட்ட அதிகாரிகளும் திணைக்களமும் நடவடிக்கை எடுக்க உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தமிழ் பேசும் நிர்வாக சேவை**
**அதிகாரி**
**கொழும்பு - 07.**

# யாழ் ப.நோ.கூட்டுறவுச் சுரண்டல்!

யாழ் மாவட்டத்தில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நட்டத்தில் இயங்குவதாகவும், நிவாரண உதவி தேவை எனவும் போர்க்கால சூழலில் மக்களுக்கு பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் அவை பணியாற்றுவதாகவும் பத்திரிகைளுக்கு கூட்டுறவு சங்கத்தினர் செய்திகளையும், அறிக்கைகளைஃும் வெளியிட்டு வருகின்றனர்.

ஆனால் யாழ். மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின செயற்பாடுகள் என்ன என்பது மக்களுக்கு தெரிவதில்லை. இடம்பெயர்ந்தோருக்கு வழங்கப்படும் உலர் உணவு நிவாரணப் பொருட்களுக்காக பற்றுச் சீட்டில் ஒவ்வொரு தடவைகளும் 50 சதம் முதல் ஒரு ரூபா வரை வெட்டி விடுகின்றனர். உதாரணமாக 420 ரூபாவுக்குரிய பொருட்களின் பற்றுச்சீட்டில் மீதி 50 சதம் அல்லது 70 சதம் அல்லது 1 ரூபா என்று கணக்கு போடப்படுகிறது. இத்தொகைக்கு எதுவித பொருட்களும் விநியோகிக்கப்படுவதில்லை. இதன் இலாபம் யாருக்குச் செல்கிறது?

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இது பற்றிய செய்தி ஒன்று யாழ்ப்பாண பத்திரிகைகளில் வெளிவந்ததையடுத்து மீதிப்பணத்துக்குரிய பொருட்கள் விரைவில் வழங்கப்படும் என்று ஒரு அறிவித்தலை அதன் கிளைகளில் மக்கள் பார்வைக்கு போடப்பட்டிருந்தது. சில நாட்களில் அந்த அறிவிப்பு மறைந்துவிட்டது. இந்த மீதிப்பணம் மூலம் பல இலட்சம் ரூபா வருமானம் இச்சங்கங்களுக்கு கிடைக்கிறது.

தனியார் கடைகளை விட் குறைந்த விலையில் சில பொருட்கள் விற்பனைக்கு விடப்படும். ஆனால் சில தினங்களில் அவை முடிவடைந்து விடும். காரணம் அருகில் உள்ள தனியார் வியாபாரிகள் இவற்றை வாங்கிவிடுவார்கள்.

இனி நிவாரணப் பொருட்களின் நிறுவைகளிலும் மோசடி. 100 கிராம் அல்லது 50 கிராம் குறைவாகவே நிறுத்துவிடுவார்கள்.

கப்பலில் வரும் பொருட்கள் யாழ் செயலகத்தினால் எல்லா சங்கங்களுக்கும் ஒரே தடவையில் விநியோகிக்கப்பட்டுவிடும். ஆனால் நிவாரணப் பொருட்களை வாங்க மக்கள் சென்று கேட்டால் சில சங்கங்கள் பொருட்கள் வரவில்லை என்று கூறுவார்கள். ஒரே நேரம் ஒரு கட்டத்துக்குரிய பொருட்கள் விநியோகிக்கப்படுவதில்லை.

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் முதலாம் வாரத்துக்குரிய நிவாரணப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டால், பக்கத்தில் உள்ள யாழ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளையில் பொருட்கள் வரவேண்டும் என்று கூறுவார்கள்.

நிவாரணப் பொருட்களிலும் பழுதடைந்த அரசி, பழுதடைந்த பூடு, வண்டு பிடித்த கடலை, நிறம் மாறிய மண்ணெண்ணெய் என்பனவே தொடர்ந்தும் விநியோகிக்கப்படுகிறது. இனி கிளைகளுக்கு கிளை பொருட்களின் விலைகளிலும் வேறுபாடு. எல்லா சங்கங்களுக்கும் கப்பலில் தான் பொருட்கள் வருகின்றன. உதாரணமாக தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் லக்ஸ்பிறே 60 ரூபா. வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலே 61 ரூபா.


பண்டத்தரிப்பு சங்கத்தில் 62 ரூபா. பண்டத்தரிப்பு சங்கத்தில் 63 ரூபா. இதன் லாபம் யாருக்கு?

இதே போலவே ஏனைய பொருட்களும் ஒவ்வொரு சங்கத்திலும் வெவ்வேறு விலைகளில் விற்கப்படுகின்றன,

இப்படியாக் கொள்ளை இலாபம் அடிக்கும் இக்கூட்டுறவு சங்கங்கள் தமக்கு நட்டஈடு தரும்படி மேலிடத்திடம் கேட்பது பெரிய விந்தையாகவே இருக்கிறது!.

போர்க்கால சூழலில் மக்களிடம் - குறிப்பரக இடம் பெயர்ந்த மக்களிடம் - சுரண்டி இலாபம் ஈட்டுகிறார்கள் யாழ் மாவட்ட கூட்டுறவாளர்கள்!

***மரிமைந்தன்***
***யாழ்ப்பாணம்***




# யாராவது பதிலளிப்பார்களா?

வடகிழக்கு மாகாண அரசின் சுகாதார அமைச்சில் 12. 10. 90 அன்று நடந்த மாற்று முறை மருத்துவப் பணிப்பாளரை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சையில் நிகழ்ந்த முறைகேடு ஐந்து வருடங்கள் கழித்து தற்போது அம்பலமாகி உள்ளது.

மேற்குறித்த பதவிக்கான வெற்றிடம் பற்றி வீரகேசரி பத்திரிகையின் 08. 09. 89 அன்றைய பதிப்பில் அறிவித்தல் வெளியானது. அவ்வறிவித்தலில் பட்டச்சான்றிதழாக சித்த அல்லது ஆயுர் வேத மருத்துவத்தில் பெற்ற பட்டச்சான்றிதழ் மட்டுமே கோரப்பட்டிருந்தது. ஆனால் 15. 01. 90 அன்று நிகழ்த்தப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கான அறிவித்தல் கடிதத்தில் பல்கலைக்கழகம் ஒன்றில் தாவரவியல்/ இரசாயனவியல் அல்லது விலங்கியல் பாடங்களில் பெற்ற பட்டச்சான்றிதழும் மேலதிகமாகக் கோரப்பட்டது. ஆனால் ஏனைய மாகாண அரசுகளால் நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் ஒரே பட்டச் சான்றிதழே (சித்த அல்லது ஆயுர்வேத மருத்துவத்தில்) கோரப்பட்டு நேர்முகப் பரீட்சையும் நடாத்தப்பட்டது.

மேலும் அரச பதவி வெற்றிடங்களை நிரவுவதற்கான அப்போதைய வயது எல்லை நாற்பதாக இருந்தது. அரச சேவையில் உள்ளோருக்கு இது பொருநதாது. எனினும் நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர் அரசசேவையில் இல்லாத 50 வயதுக்கு மேறபட்டவராவார். இது எவ்வாறு சாத்தியமானது? 40 வயதுக்குட்பட்டவர்களில் தகுதி உடையவர்கள் இருக்கவிலலையா? குறித்த நபர் ஒருவரை தெரிவு செய்யவெனவே மேற்குறித்த முறைகேடுகள் நிகழ்த்தப்பட்டனவோ? எனவெல்லாம் பாதிக்கப்பட்டவர்கள் குமுறுகின்றனர். இவர்களுக்கு பதிலளிப்பது யார்? வடகிழக்கு மாகாண அரசின் பொறுப்பான அதிகாரி ஒருவர் பதில் அளிப்பாரா?

**சி. சின்னத்துரை**
**அச்சுவேலி.**





பிதாவே
உமது நிழலில் விலகியென்
ஆன்மா
வெகு தொலைவில் போனபின்
பெறுவதற்குரிய நட்பின்
பிஞ்சுவிரல்களை பற்றியவாறு
உமது ஆலயத்தின் வாசலில்
ஓர் அந்நியனைப் போல்!

தூய்மையும் அமைதியுமாய்
பொலிந்த மண்டபத்தில்
வாய்பாடுகளை போலிருந்த
எல்லா வசனங்களையும்
ஒதுக்கி விட்டு
தேம்பி நின்ற ஜீவன்களிடையே
அமைதியாய் மண்டியிட்டேன்!

பிதாவே
கீதங்களால் நிரம்பிய
உம் மண்டபத்தில்
என்னருகே மிக இளையகுரல்
உமக்குரிய கீதங்களை இசைத்தது.
அந்த கீதங்களை பாட
நான் விரும்பினேன்.

தினமும் மரிக்கின்ற தளிர்களும்
நோயால் ஜீவனை இழந்த முகங்களும்
காட்டு அனலும்
வெயிலும்
மனித அவலங்களும் நினைவில் எழ
மடுமாதா கோயிலில்
ஒதுங்கிய மனிதர்களின்
ஜீவத்துடிப்பாய் எழுந்த
கீதங்களில் எனை இழந்தேன்!

வானத்தில் இருந்து குதித்த
தேவர்களைப் போல்
மனித அவலங்களிடையே
நெகிழ்ந்த ஓரிரு சொற்களுடன் நாம்!
நேசமான பார்வைகளைத் தந்த
விழிகளில் திரண்ட
கண்ணீர்த் துளிகளை
நினைவு கூர்வேன்!
அவலம் மிக்கது வாழ்வு
ஆன போதும்
நாளை பற்றிய செய்தியை ஈய்ந்தோம்!

பிதாவே
பாவங்களின் நிமித்தம்
உம்முன் மண்டியிட்ட
ஜீவன்களிடையே
அமைதியில் தோயும் அவள்
விழிகளின் செய்திகளில்
நான் நிரம்பினேன்.
நாம் அற்புதமான
உறவினைப் பின்னுகிறோம்!
தன் பிஞ்சுவிரல்களை
என்னிடம் தந்திருந்தாள்!
நிறைய கதைகளைக் கூறினேன்!

கவிதைகள் போலவும்
மனிதர்கள் கடந்து போகையில்
நான் நெகிழ்ந்தேன்!

இன்றென் தசைகளில்
கிளர்ச்சியில்லை!
வேதனை மிகுந்த நினைவுகளிற்கப்பால்
அமைதியடைந்ததென் ஆன்மா!

பரமபிதாவே
மீளவும்
என் கிடைத்தற்கரிய நட்பின்
பிஞ்சுவிரல்களை பற்றியவாறு
உம் நிழலில் விலகி
நான் தேடிப் பெற்ற
கவிதைகள் நிறைந்த
என் சோலைக்குள்.......

அல்வகோல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தெரிந்ததை யாருக்கும் பக்கச் சார்பில்லாது சொல்லுதல்

**முஸ்லிம் காங்கிரசின் "அவுட் அவுசு"லிருந்து ஒரு குரல் என்ற எம். வை. எம். சித்தீக்கின் ஓகஸ்ட் 24- செப்டம்பர் 06 சரிநிகர் இதழின் கட்டுரை தொடர்பாக; "தெரிந்ததை யாருக்கும் பக்கசார்பில்லாது சொல்தல்"** என்ற உண்மைக்கு அமைவாக இக் கட்டுரை எழுதப்படுகிறது.

"மருதூர் பஷீதினால் எழுதப்பட்ட நீண்ட கட்டுரை வடிவிலான கடித்ததை வாசித்ததன் ஊடாக; தான் ஆச்சரிய முற்றதாகவும் 1986, 87ம் ஆண்டுகளில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை வளர்த்தெடுப்பதில் அரும்பாடுபட்டவன் என்ற ரீதியில் சில தெளிவுகளை முன் வைத்தாக வேண்டியதன் அவசியம் உரைக்கப்படுகிறது, சித்திக்கினால்.

86,87களுக்குப் பின் முஸ்லிம் காங்கிரஸை வளர்த்தெடுப்பதற்கும் அரும்பாடுபடுவதற்கும் உங்களால் ஏன் முடியாமல் போனது என்ற கேள்வியுடன் - உங்கள் கட்டுரையில் இருக்கும் வக்காலத்து வாங்கும் பிரசாரபாணிக்கு பதிலாக சில உண்மைகளை சொல்லலாம் என எண்ணுகிறேன்.
இப்பதில் உங்கள் கட்டுரைக்கு மட்டுமல்லாது ஆயிரக்கணக்கான முஸ்லிம் வாக்காளர்களினதும் சிந்தனைக்கு சமர்ப்பணமாக்கப்படுகிறது.

கட்டுரையாளர் குறிப்பிடுவது போல் அஷ்ரஃப்பின் வரலாறு மருதூர் பஷீத்துக்கு தெரிந்திருக்க நியாயமில்லைத்தான். மருதூர் பஷீத்தின் வேலை அஷ்ரஃப்பின் சுய சரிதை எழுதுவதில்லை என நான் நினைக்கிறேன். அப்பணிக்கு இன்று ஆயிரக்கணக்கானவர்கள் முண்டியடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

முஸ்லிம்களது பிரச்சினைகளை சந்திக்கு கொண்டு வந்தவர்களுள் அஷ்ரஃபும் ஒருவர் என்பதை இங்கு மறுப்பதற்கு ஒருவரும் இல்லைத்தான். ஆனால் சந்திக்கு கொண்டு வரப்பட்ட முஸ்லிம்களுடைய பிரச்சினைகளை சந்தையில் வியாபாரமாக்கும் கைங்காரியம் அரங்கேறிக் கொண்டிருப்பதை கட்டுரையாளர் மறுக்கிறாரா? முஸ்லிம்களுடைய அரசியல் விடுதலைப் போராட்டத்தை அஷ்ரஃப் தலைமையேற்று நடாத்துகிறார் என்றால்; 13வது தேசியமகா நாடு கொண்டாடப்பட்ட முஸ்லிம் காங்கிரசினால் முஸ்லிம் சமூகத்திற்காக அக்கட்சி சாதித்திருக்கும் மகத்தான சாதனைகளை பட்டியல் இட்டு சித்தீக்கினால் காட்ட முடியுமா? நான் இங்கு குறிப்பிடுவது முழுமந்திரி, அரைமந்திரி, தேசியப்பட்டியல் பாராளுமன்றப் பிரதிநிதி, புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் பதவிகளையல்ல.

மருதூர் பஷீத் குழம்பியுள்ளதாகவும் அதிகார அலகுகள் பற்றி இன்னும் உத்தியோக பூர்வவெளியீடுகள் வரவில்லை எனவும் சித்தீக் அவர்கள் சொல்கிறார். ஆனால் சித்தீக்குக்கு அல்லது முஸ்லிம் வாக்காளனுக்குத் தெரியாத பல விடயங்கள் இங்கு கன பேருக்கு தெரியும் என்பது சித்தீக் போன்றவர்களுக்குத் தெரியாமல் இருப்பது துரதிர்ஷடமானது. பிராந்தியங்களின் எண்ணிக்கை எத்தனை என்று அரசினால் வெளியிடப்பட்ட யோசனையில் தெட்டத்தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ள ஒரு விடயத்தை நீங்கள் பார்க்கவில்லையா?

***"அதிகாரப் பாவலாக்கல் அமைப்பு முறை"*** என்ற தலைப்பின் 1.1 என்ற ***பரவலாக்கல் கூறு*** என்ற சிறு தலைப்பின் கீழ் "பிராந்தியங்களின் ஒன்று தற்போதுள்ள வடக்கு கிழக்கு மாகாணத்தின் ஏலவேயுள்ள எல்லைகளை மீள் அமைப்பதன் மூலம் அழைக்கப்படும்" என சொல்லப்பட்டிருப்பதை எப்படி மறைக்கலாம்? இதிலிருந்து ஒன்று தெளிவாகத் தெரிகிறது. அரசினால் வெளியிடப்பட்டுள்ள இத் தீர்வு யோசனையில் முஸ்லிம்களுக்கு ஒருநிர்வாக அதிகார அலகு இல்லை என்பதும்; வடக்கு கிழக்கின் ஊடே ஒரே ஒரு பிராந்திய சபையே அமைக்கப்படும் என்பதுமாகும். இத்தீர்வு யோசனையில் எங்கேதானும் ஓரிடத்தில் உப பிராந்திய சபைகள் பற்றி குறிப்பிடப்படவில்லை என்பதும் சித்தீக்குக்கு தெரியாதா?

மருதூர் பஷீத் குழம்பியுள்ளார் எனவும முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அம்பாறை மாவட்டத்தினை மட்டும் கொண்ட முஸ்லிம் மாகாணசபையை கேட்கிறார் என்பதற்கு அஷ்ரஃப்பினால் அல்லது அவரது கட்சியினால் வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வமான அறிக்கைகள் உள்ளதா? எனவும் சித்தீக் கேட்கிறார். மருதூர் பஷீதுக்கு மட்டுமல்ல, எனக்கு மட்டுமல்ல, ஆயிரக்கணக்கான முஸ்லிம் வாக்காளர்களுக்கும் தமிழ் புத்திஜீவிகளுக்கும், முஸ்லிம் மாகாண சபை என்றால் என்ன? தென் கிழக்கு மாகாண சபை என்றால் என்ன? அதன் எல்லைகள் என்ன? அதன் அதிகாரங்கள் என்ன? அரசு வைத்துள்ள "பிராந்தியங்களின் ஒன்றியம்" தீர்வில் முஸ்லிம்களுக்கும், "பிராந்திய ஒன்றியம்" ஒன்று வழங்கப்படுகிறதா? போன்ற விடயங்களில் குழப்பமாகவே இருக்கிறது.

இந்நிலைக்கான காரணம் மருதூர் பஷீதோ அல்லது முஸ்லிம் வாக்காளரோ அல்ல முஸ்லிம் காங்கிரஸ் தான் இந்நிலைக்கு காரணம். நான் சித்தீக் அவர்களிடம் ஒரு கேள்வி கேட்கிறேன். முஸ்லிம் மாகாண சபை என்றால் என்ன? தென்கிழக்கு மாகாண சபை என்றால் என்ன? அதன் புவியியல் எல்லைகள் என்ன? அதன் அதிகாரம் என்ன? என்பது தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் ஆவணரீதியாக ஏதாவது ஒன்றைக் கொண்டிருக்கிறதா? அல்லது அக்கட்சியின் மூத்த தலைவர்களிடம் அது பற்றிய விளக்கம் உள்ளதா? அப்படியிருப்பின் ஏன் அவர்கள் முஸ்லிம் மக்கள் மத்தியில் அதனை இதுவரை தெளிவு படுத்தமுன் வரவில்லை. ஒரு சமூகத்துக்கு



அரசியல் வழிகாட்ட வந்த தலைமை குழம்பிப்போய் கிடக்கும் போது முஸ்லிம் மக்கள் என்ன செய்வார்கள்?

தீர்வு யோசனைகளில் முன் வைக்கப்பட்டிருக்கும் பிராந்தியங்களில் ஒன்றை முஸ்லிம்களுக்கு தருவதாக அஷ்ரஃப்பின் காதுக்குள் சந்திரிகா சொல்லியிருக்கிறாரா? அதனால் இதுபற்றி நாம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லையென சித்தீக்கிடம் அஷ்ரஃப் சொல்லி இருப்பார் போலிருக்கிறது. ஆக சித்தீக்குக்கு குழப்பமில்லை ஆனால் எமக்கு பயமாகவும், குழப்பமாகவும் இருக்கிறது எங்கள் குழப்பங்களை தீர்ப்பது முஸ்லிம் காங்கிரஸின் கடமை; மாறாக குழப்பமாய் இருக்கிறது என சொல்பவனை திட்டி தீர்ப்பதுடன், குழப்பத்தை மேலும மேலும் அதிகரிப்பதற்கு பதில் எழுதுவது எந்த நியாயம்? குழப்பத்திற்கு பதில் தேடுவதற்கு முஸ்லிம் காங்கிரஸை விடுத்து நாம் எங்கு போவது? எமது குழப்பம் சம்பந்தமாக முஸ்லிம் காங்கிரஸுக்கு ஆய்வு ரீதியான தெளிவான கருத்துக்கள் எப்போதும் இருந்ததில்லை என்பது எனது கருத்து. வ. ஐ. ச. ஜெயபாலனுக்கு உள்ள முஸ்லிம்கள் பிரச்சினை பற்றிய ஆய்வுரீதியான தெளிவு கூட அஷ்ரஃப்புக்கு இல்லை என்பது துரதிர்ஷ்டவசமானது. இந்தக் கருத்து வறுமையை நீங்கள் முஸ்லிம் காங்கிரஸில் இருப்பின் நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

1989ம் ஆண்டின் பாராளுமன்ற தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு கிடைத்த ஒரேயொரு தேசியப் பட்டியல் பிரதிநிதியை புஹார்தீன் ஹாஜியாருக்கு கொடுத்ததையும் அவர் பாராளுமன்றத்திற்குள்ளேயும் வெளியேயும் 'முஸ்லிம்களின் அரசியல் விடுதலைக்கு' அயராது உழைத்ததையும் நாங்கள் எப்படி மறக்க இயலும்? இந்த புஹார்தீன் ஹாஜியார் பாராளுமன்றினுள் எத்தனை தடவை முஸ்லிம்களுக்காக பேசியிருக்கிறார்? கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தேசியப் பட்டியல் உறுப்பினர்களாக வந்த அசீத பெரேரா, பாமிஸ் சுஹைர் போன்றோர் முஸ்லிம் காங்கிரஸின் கடந்த காலங்களில் நிறைய பங்களிப்பை செய்திருப்பார்கள் போலும்... இவைகள் தெரியாததுதான் எமக்கு குழப்பமாக இருக்கிறது தெளிவு படுத்துவீர்களா சித்தீக் அவர்களே!

முஸ்லிம் மாகாணக் கோரிக்கை அஷ்ரஃப்பின் சிந்தனையால் உதித்ததில்லை. என்பதைப் பலர் இங்கு அறிந்திருக்க நியாயமில்லைதான். முஸ்லிம் மாகாணக் கோரிக்கையின் காரணகர்த்தா அஷ்ரஃப் இல்லை என்பது தான் உண்மை. அரசியலுக்காக அஷ்ரஃப் தூக்கிப்பிடித்த கோஷமே இது. கடந்த காலங்களில் தமிழர் அரசியல் வரலாற்றில் தமிழ்த் தலைவர்கள் அரசியலில் தங்களது பதவிகளைப் பிடித்துக் கொள்வதற்காகவும் தக்கவைத்துக் கொள்வதற்காகவும் 'ஈழம்' கோஷத்தை வானுயர எழுப்பியதையும் பின் அந்த ஈழக் கோரிக்கை வெறும் அரசியல் பிழைப்புவாத மார்க்கமாக இவ்வரசியல் தலைவர்களால் கையாளப்பட்டதையும் நாம் காண்கின்றோம். அது போலவே இந்தத் தென்கிழக்கு மாகாணக்கோரிக்கையும் இருப்பதாக நாம் கருதுகிறோம். இக்கருதுகோளுக்கு நிறைய சார்புக் காரணங்கள் இருக்கின்றன.

" அஷ்ரஃப் ஹிருதயமாகவுள்ள" இன்றைய சந்திரிகா அரசில் அண்மையில் அவ்வரசால் வெளியிடப்பட்ட தீர்வு யோசனைகளில் ஏன் முஸ்லீம்கள் பற்றி ஒரு வார்த்தை தானும் இல்லாது போயிற்று? அஷ்ரஃப் - சந்திரிகா ஒப்பந்தத்தில் முஸ்லீம் காங்கிரஸ் கூறித்திரிந்த அம்சங்கள் இருக்குமானால் அதிகாரங்கள் வழங்கும் சந்திரிகாவின் அண்மைய யோசனைகளில் ஏன் முஸ்லீம் மாகாணத்தைப் பற்றியோ அல்லது தென்கிழக்கு மாகாணத்தைப் பற்றியோ ஏன் அஷ்ரஃப்பால் ஒரு வார்த்தை தானும் இடம் பெற வைக்க முடியாமல் போயிற்று? நாங்கள் இப்படிக் கேட்பது நியாயமான கேள்வி இல்லையா? "சந்திரிகா - அஷ்ரஃப் வரலாற்றுப் புகழ்மிக்க ஒப்பந்தம்" அமைச்சர் ஆனதுடன் காலாவதியாகிவிட்டதா? பலவீனமான ஒரு அரசாங்கத்திற்கு முண்டு கொடுத்த கிழக்கு முஸ்லீம்களின் வாக்குகள் குப்பைக் கிடங்கில் போட்ட கதையாகிவிட்டதா?

கடந்த கால அரசியலில் தலையாட்டிப் பொம்மைகளாக இருந்த முன்னாள் அமைச்சர்களையும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களையும் குற்றம் சாட்டும் சித்தீக் அவர்கள் ஏன் அஷ்ரஃப் அவர்களை மறந்து விட்டார்? அஷ்ரஃப் அவர்கள் இன்றைய ஆட்சியில் அமைச்சராக இருந்து கொண்டு இந்த அரசினால் வெளியிடப்பட்ட தீர்வு யோசனைகளில் முஸ்லீம்கள் பற்றி ஒரு குறிப்பும் இல்லா நிலையில் அஷ்ரஃப் அவர்களை நாங்கள் என்னவென்று சொல்லுவது? நான் இந்தத் தீர்வு யோசனையை நூற்றுக்கு நூறு வீதமாக ஆதரிக்கிறேன் என அஷ்ரஃப் அவர்கள் ரூபவாஹினியில் தோன்றி சிங்களத்தில் சொல்லவில்லையா? (சித்தீக் சொல்வது போல் யோசனையில் உள்ள சிறப்பான அம்சங்களை மட்டும் ஆதரிப்பதாக அஷ்ரஃப் சொல்லவில்லை. ஞாபகம் இருப்பின் மீட்டுப்பாருங்கள்.)

சித்தீக் அவர்கள் தலையாட்டிப் பொம்மைகள் எனச்சொல்பவர்கள் யார்? 90% க்கும் அதிகமான சிங்கள மக்கள் உள்ள தேர்தல் தொகுதி ஒன்றில் தெரிவு செய்யப்பட்ட எம். எச்.முகம்மதுவோ; ஹரிஸ்பத்துவவில் இருந்து சிங்களப் பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட ஏ.சீ.எஸ்.ஹமீதோ அல்லது கல்முனை, சம்மாந்துறைத் தொகுதிகளில் இருந்து தமிழ் மக்களின் ஆதரவுடன் தெரிவு செய்யப்பட்ட ஏ.ஆர்.எம். மன்சூரோ, மஜீதோ முஸ்லீம்கள் பற்றி கதைக்கவில்லைத்தான். ஆனால் முஸ்லீம் சமூகத்தின் பெயராலும் அல்குர் ஆனின் பெயராலும் பதவிக்கு வந்த அஷ்ரஃப் அவர்கள் ஏன் இன்றைய அரசு வைத்துள்ள தீர்வு யோசனைகளில் முஸ்லீம்கள் பற்றிய தீர்வு வருவதற்கு உழைக்கவில்லை? இக்கேள்விக்கு என்ன பதில் சொல்வீர்கள் என்பதும் எமக்குத் தெரியும். தெரிவுக்குழு முன் யோசனைகள் பரிசீலனைக்கு வரும் போது நாம் நமது கோரிக்கையை முன் வைப்போம் என்பீர்கள். தெரிவிக்குழுவின் முன் யோசனைகளை முன் வைப்பதற்கு நீங்கள் எதிர்க்கட்சியிலும் இருக்கலாம் அல்லவா? அரசின் யோசனையில் முஸ்லீம்கள் பற்றி உள்ளதா? அப்படி முன் வைக்காத அரசுக்கு எப்படி உங்களது தார்மீக ஆதரவைத் தொடர்ந்து வழங்குவீர்கள்.

பொத்துவில், சம்மாந்துறை, கல்முனை தொகுதிகளை மையப்படுத்தியதாக அமையவிருப்பதாகச் சொல்லப்படும் தென்கிழக்கு மாகாணசபை அல்லது வேறு ஏதாவது பெயர் கொண்ட முஸ்லீம் நிர்வாக அலகில்; அம்பாறைத் தேர்தல் தொகுதியை ஊவாவுடன் இணைக்கும் அனைத்து சிங்களத் தலைவர்களினதும் விட்டுக் கொடாத கோட்பாட்டில் அஷ்ரஃப்பின் நிலை பரிதாபமானது. அஷ்ரஃப் அவர்கள் ஒரு அதிகார அலகுக்குத் தேவையான முக்கியமான நிலப்பகுதிகளையும் வளங்களையும் சிங்களவர்களுக்கு தாரைவார்த்துவிட்டு; அம்பாறை மாவட்டத்தின் 50% மான நிலப்பகுதிகளை அதாவது 1775 சதுர மைல் கொண்ட மாவட்டத்தில் 900 சதுர மைல் கொண்ட அம்பாறைத் தேர்தல் தொகுதியை கைவிட்டு விட்டு என்ன தான் செய்யப்போகிறார். இவர் மௌனமாக இருப்பது எதைக் காட்டுகிறது?

நான் சிறுவனாய் இருக்கையில்; கல்முனையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் மறைந்த தமிழ்த் தலைவர் அமிர்தலிங்கம் கூறிய வார்த்தைகளை நான் ஞாபகப்படுத்திப் பார்க்கிறேன்.

" அம்பாறையில் சிங்களவர்களை அரசாங்கம் குடியேற்றும் போது எங்களைவிட முஸ்லீம்களே அதனை வன்மையாக கண்டித்திருக்க வேண்டும்! அம்பாறை நகரம் முஸ்லீம்களின் கைகளிலேயே இருந்திருக்க வேண்டும். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக அந்நிலை காணப்படவில்லை. முஸ்லீம் தலைவர்கள் மௌனமாக இருந்துவிட்டனர்" என்றார் அமிர்தலிங்கம். இது எவ்வளவு உண்மையானது.

தமிழர்களை விட அம்பாறை மாவட்டம் முஸ்லீம்களின் அடிப்படைத் தளமாகும். இத்தளத்தின் ஆணிவேரையே அசைக்கும் இந்த பயங்கரத் திட்டத்தின் சூட்சுமத்தையே அறிந்து கொள்ளவில்லை எனின் அல்லது அந்தப் பேரினவாத நிர்ப்பந்தத்திற்கு ஆட்பட்டு மௌனம் சாதிக்கிறார்கள் எனின் இவர்களையிட்டு நாங்கள் என்ன நினைக்கலாம்? சிங்களவர்களுடைய அதிகாரங்களுக்குள் தமிழர்களும், முஸ்லீம்களும் வாழலாம் என்றால் ஏன் தமிழர்களின் அதிகாரத்திற்குள்ளும், முஸ்லீம்களின் அதிகாரத்திற்குள்ளும் சிங்களவர்கள் வாழக்கூடாது?

முஸ்லீம் வாக்காளர்களை ஏமாற்றுவதற்காக வெறும் கோஷங்களை மட்டும் முன் வைத்து விட்டு, அடிக்கடி பத்திரிகை அறிக்கைகளை விட்டுக் கொண்டு அக்கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக எந்தவிதமான ஆக்கபூர்வமான முயற்சிகளிலும் ஈடுபடாமல் இருப்பது இவர்களுக்கு எப்படி சாத்தியமானது? அம்பாறை தேர்தல் தொகுதியை சிங்களவர்களிடம் விட்டு விட்டு முஸ்லீம்களின் விவசாயக் காணிகளுக்கு நீர்ப்பாய்ச்ச மின்சார தேவைகளுக்கு எதிர்கால குடியேற்றங்களுக்கு என்ன செய்யப் போகிறார்கள்? ஆழமான யோசனைக்குரிய விடயமிது! இதையொரு தூக்குக் கயிறு என்று சொல்வதை விட எப்படிச் சொல்லலாம்.

ஐ.தே.கவின் தலையாட்டிப் பொம்மைகள் எனச்சொல்கிறாரே சித்தீக்; பழைய முஸ்லீம் காங்கிரஸின் வரலாற்றையும் சம்பவங்களையும் மறந்துவிட்டார் போலிருக்கிறது! அல்லது நாங்கள் சொல்வதுதான் வேதவாக்கு என்று நினைக்கிறார் போலும். உண்மை அதுவல்ல, கடந்த காலத்தைச் சற்றுப் பின்னோக்கிப் பாருங்கள். ஐ.தே.கவில் உள்ள ஒரு அமைச்சரோ அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களோ அரசுக்கு வக்காலத்து வாங்கும் பணிக்கு விசுவாசமாக இருந்திருக்கலாம். இதை நான் நியாயப்படுத்தவும் வரவில்லை. ஆனால் அஷ்ரஃப் இன் கடந்த கால அரசியல் குத்துக்கரணங்களும் இன்றைய நிலையை ஒருக்காலும் நியாயப்படுத்த முடியாதவை! பிரேமதாச காலத்தில் முஸ்லிம் காங்கிரஸ் என்ன செய்து கொண்டிருந்தது என சித்தீக்கிடம் கேட்க விரும்புகிறேன். அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரி திறப்பு விழா! பிரேமதாசாவுடன் ஒரே ஹெலிக்கொப்டரில் அஸ்ரஃப். அட்டாளைச்சேனை கல்விக்கல்லூரி மைதானத்தில் வானுயர "அல்லாஹு அக்பர்" கோஷம்; பிரேமதாசாவே அஷ்ரஃப் இன் நேரடியான ஆதரவு கண்டு அசந்திருக்க வேண்டும். அஷ்ரஃப் கூப்பிட்டு என்ன பேசினார். " நாங்கள் பிரேமதாசாவை கடைசிவரை ஆதரிப்போம். பிரேமதாசாவின் ஆட்சிக்காலத்தில் முஸ்லீம்களுடைய பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என நம்புகிறோம். 'இன்ஷா அல்லாஹ்' இனிவரும் முறையும் பிரேமதாசாவே ஜனாதிபதியாக வர உழைப்போம். அதற்காக இறைவனைப் பிரார்த்திப்போம்"

13 →

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இது எந்தளவு விபரீதமானது

- சாள்ஸ் அபேசேகர

சென்றக்கிழமை நான் எனது உறவினர் ஒருவரின் வீட்டுக்குச் சென்றிருந்த வேளை அங்கு நடைபெற்ற நினைவு அஞ்சலி நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது.

அந்நிகழ்ச்சியில் போதனை செய்த பிக்கு, தனது கடமையை சரிவர ஒழுங்காகச் செய்தார். சந்தர்ப்பதிற்கு பொருத்தமான விதத்தில் போதனைக்கு ஏற்ற தலைப்பைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு அவர், வாழ்வின் நிலையாமையையும், மனித, மிருக வாழ்வு என்றும் மாறுபாட்டுக்கு உள்ளாகும் என்றும் போதனை செய்தார். அவரின் போதனையில் சமநிலை தொடர்பான விடயங்கள் உள்ளடங்கியிருந்தன. பெரும்பான்மையோர் போதனையில் இருந்து தெளிவை உண்டாக்கிக் கொண்டார்கள்.

ஆனால் போதனை முடிவுற்ற பின்னர், அவரும் வீட்டு நபர்களும் வேறுசிலரும் உரையாடலை மேற்கொள்ளும் போது இவரின் குணநலன்களும் செய்த போதனையுட் ஒன்றுக்கு ஒன்று எதிரான தன்மையுடையனவாக இருந்ததை அவதானித்தேன். சில நிமிடங்களுக்கு முன் ''எல்லா உயிர்களும் வாழ்க, ஆரோக்கியமாக இருக்க வேண்டும்'' எனக் கூறியவர், உரையாடலின் போது தமிழ் சமூகத்தை கீழ்நிலைப் படுத்தி கதைக்க முற்பட்டார். அரசியல் தீர்வுக்கு எதிரான கருத்துக்களை அவர் தெரிவித்தார். நாட்டில் சிங்கள பௌத்தத்தை பாதுகாக்க சிங்கள பௌத்தர்கள் தியாகங்களை புரிய வேண்டும் என்றும் அதனால் யுத்தம் என்பது அவசியமானது என்றும் அவர் கூறினார்.

சுருக்கமாகிக் கூறினால் அரை மணித்தியாலங்களுக்குள் அவர் பௌத்த போதகரில் இருந்து சிங்கள பௌத்த போதகராக மாறிவிட்டார்.


இந்த வேறுபாட்டை நாம் எப்படி விளங்கிக் கொள்வது? எனக்கு தெளிவாகும் இந்த இடைவெளியை வேறுயாரும் புரிந்து கொள்ளவில்லையா? இந்த பிக்குவுக்கும் இந்த எதிரெதிரான தன்மை விளங்கவில்லையா?

எல்லா மனிதர்களிடமும் கருணை, இரக்கம் காட்டவேண்டும் என கூறிவிட்டு தன்னோடு ஒன்றாக வசிக்கும் சமுதாயத்தினரை அவற்றிலிருந்து விலக்கி வைத்தலை அவர் புரிந்து கொளள முடியாமை மிகவும் பாரதூரமானது.

சார்ள்ஸ் அபேசேகரா

இலங்கையில் குறிப்பிடத்தக்க சமூகவியல் அறிஞர்.
இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் தலைவர்.
தமிழ் மொழி அமுலாக்கல் ஆணைக்குழுவின் தலைவராகத் தற்போது கடமையாற்றுகிறார்.
சமூக விஞ்ஞானிகள் சங்கத்தால் வெளியிடப்படும் எனும் சஞ்சிகையின் ஆசிரியர்.
அவர் யுக்திய வில் எழுதிய பத்தி தமிழில் இங்கு தரப்படுகிறது.

ஆ-ர்



இருப்பினும் இதை நினைக்கும் அதேவேளை எனக்கு மனோதத்துவியலாளரர்ன சிக்மண்ட் புறொய்டின் கூற்று ஞாபகத்துக்கு வருகின்றது. சென்றகிழமை அதை நான் தேடிப்பார்த்தேன். அவருடைய விளக்கத்தை சுருக்கமாக இவ்வாறு கூறலாம்.

எல்லா மனிதர்களும் பிற மனிதர்களிடம் இருக்கும் ஒத்த தன்மையை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றனர். இருப்பனும் அவர்கள் பிற மனிதர்களிடம் இருந்து சிறுவேறுபாடுகளைக் காண்கின்றனர். அந்த சிறு வேறுபாடுகளுக்குள் கலாசார மட்டத்திலும், சமய மட்டத்திலும் தொகை மட்டத்திலும், இன மட்டத்திலும் இவர்கள் வேறுபடுகின்றனர். வேறுபாட்டை முன்வைத்து ஒருவருக்கொருவர் விரோதிகளாகின்றனர், சண்டை செய்கின்றனர்.

இருப்பினும் அவர் இவற்றை முரணாகக் காண்கிறார். நான் முன்னர் கூறியதை விட ஆழமான உளவியலை கண்டுகொள்கிறார்.

ஒரு பக்கம் எல்லோரிடமும் செலுத்தும் கருணை, இரக்கம் என்பன ஆழமானதொன்றாகும்.

இன்னொரு பக்கம் ''சின்ன வேறுபாடுகள்'' என்ற அடிப்படையில் முன்நிற்கும் துவேஷம், குரோதம் இது கீழானது ஆகும். இவ் இரண்டும் நம் மனதில் போராட்டத்தை நடாத்துகின்றன. சமயங்களில் துவேஷமும் குரோதமும் கருணையை பின்தள்ளி விட்டு மனதை ஆக்கிரமிக்கத் தொடங்கி விடும்.

இந்தக் கீழ் நிலையான தன்மையை வெற்றிக் கொண்டு இரக்கம் என்பதனை நிலைநாட்டவேண்டும் என்றும், அப்படி நடக்க மனிதர்களுக்கு உதவவேண்டும் என்றும் பௌத்த தர்மம் உறுதியாகக் கூறுகிறது.

இன்று எங்கள் அவலநிலை என்ன வென்றால் இந்தச் செயலை செய்ய வேண்டியவர்களே அவற்றை பின்போட்டு விட்டு துவேஷம் குரோதம் என்பவற்றை விதைத்து மக்களை இந்நிலைப்படுத்தியுள்ளனர்.

யாழ்ப்பாண தமிழ் கத்தோலிக்க குருவானவர் ஒருவர் ஒருமுறை இவ்வாறு கூறினார். 'முதல் நான் தமிழன்', இரண்டாவது 'கத்தோலிக்கன்' என்றார். நான் முன்னர் கூறிய பிக்கு கூறுவதும் இவ்வாறே. ''நாம் முதலில் சிங்களவர். பின்னர் பௌத்தர்'' இது எந்தளவு விபரீதமானது? தர்மத்திலிருந்து என்ன மாதிரியான விலகல்?

தமிழில் ரசனா



## அரசு குடும்பம் பெண்ணியப்
## பெண்ணிய கட்டுரை தொகுப்பு

ஒருவர் பிறப்பின் மூலமோ, சந்தர்ப்பவசத்தாலோ அல்லது பழக்கதோஷத்தாலோ பெண்ணிலைவாதியாகி விட முடியாது.பால் வேறுபாடு என்பது ஏற்கெனவே சகஜமானதாக ஆக்கப்பட்டுள்ள இச்சமூகத்தில், இதற்கெதிரான ஒரு நிலைப்பாட்டை எடுத்து, அதன் வழி தனது அணுகுமுறையை அமைத்துக்கொள்ளும் ஒருவரைத் தான் நாம் பெண்ணிலைவாதி எனக்குறிப்பிடமுடியும்''

இது 'அரசு குடும்பம் - பெண்ணியம்' எனும் மேற்படி புத்தகத்தின் முன்னுரையில் வலியுறுத்தப்பட்டுள்ள ஒரு குறிப்பு. இந்நூலை தொகுத்திருப்பவர்கள் அ. மார்க்ஸ், இ. ரவிக்குமார், பெ. வேலுசாமி ஆகியோர். இவர்கள் இன்று தமிழ்நாட்டில் தத்துவார்த்த விவாதங்களை மிகத்திவீரமாக முன்னெடுத்துச் செல்லும் **'நிறப்பிரிகை'** குழுவைச் சேர்ந்தவர்கள்

ஏற்கெனவே நிறப்பிரிகையில் பெண்ணியம் பற்றி வெளிவந்த விவாதங்கள், கட்டுரைகள், மொழிபெயர்ப்பு ஆக்கங்கள் என்பவற்றோடு பெண்ணியம் குறித்து 91 யூலையில் பாண்டிச்சேரியில் நடத்தப்பட்ட கூட்டு விவாதத்தையும் தொகுத்து இந் நூல் வெளியிடப்பட்டுள்ளது.

பிரபல பெண்ணிலைவாதிகளான **'லூஸி எரிகாரே, வில்ஹெம் ரெய்ச், ஹால் த்ராபர்'**ஆகியோரின் பெண்ணியம் தொடர்பான கட்டுரைகளையும் அமெரிக்காவில் பெண் அரசியல் கைதிகள் மூவரின் பேட்டியையும் மொழிபெயர்த்து இந் நூலில் இடம் பெறச்செய்யப்பட்டுள்ளது.

இந்நூலின் சிறப்பு என்னவெனில் பெண்ணியம் பற்றி நடைமுறையில் உள்ள நேரெதிரான பார்வைகளும் கூட அருகருகே வைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் வாசகன்; இந்நூலில் வைக்கப்பட்டுள்ள கருத்துக்களை அப்படியே ஏற்றுக்கொள்ளாது செய்வதுடன் சிந்தனை விரிவாக்கத்தை ஏற்படுத்த முயல்கிறது எனச் சொன்னால் மிகையாகாது.

சில இடங்களில் மார்க்ஸிய கண்ணோட்டத்தில் பெண்ணியம் தொடர்பான கருத்துக்களை ஆய்வுக்கு உட்படுத்துகின்ற போது சில இடங்களில் மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின் ஆகியோரின் பெண்ணியம் பற்றிய கருத்துக்களை கேள்விக்குள்ளாக்கவும் தவறவில்லை.

அதே நேரம், முன்னுரையில் கூறப்பட்டது போல **'பெண்ணியத்தை பூஜ்ஜியத்திலிருந்து தொடங்கவேண்டிய அவல நிலை நமக்கு இல்லை'** என்பதை சொல்லவும் மறக்கவில்லை.

இந்நூல் குடும்ப அமைப்பு முறை தகர்க்கப்பட வேண்டியதன் அவசியத்தை கோடிட்டு காட்டுகிறது.

பெண்ணியம் பற்றிய கூட்டு விவாத்தில் நிறப்பிரிகை முன் வைத்த கருத்தில் ''தந்தை வழிச் சமூக அமைப்பின் உருவாக்கத்தோடு பெண்மீதான சமூக ஒடுக்குமுறை தொடங்குகிறது. இந்த ஒடுக்குமுறையானது பொருளியல், கருத்தியல், அரசியல் எனச் சகல தளங்களிலும் செயல்படுகிறது. தந்தை வழிச் சமூக அமைப்பில் உருவாக்கப்பட்டு நிர்வகிக்கப்படும் குடும்பம், மதம், கல்வி, கலைஇலக்கியம் எனச் சகல நிறுவனங்களும் இந்த ஒடுக்குமுறையை நிறைவேற்றும் களங்களாக அமைகின்றன. இத்தகைய நிறுவனங்களில் பெண் ஒடுக்குமுறையை நியாயப்படுத்தும் கருத்தியல்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன..... ஆணாதிக்க நிறுவனங்களின் மூலமாகவே இங்கு அறிவானது உருவாக்கப்பட்டு வினியோகிக்கப்படுவதன் விளைவாகப் பெண் தனக்கான அறிவை உற்பத்தி செய்துகொள்ள வேண்டியது அவசியமாகிறது....

இன்றைய சமூகநோக்கு என்பது ஆண்நிலைப்பட்டதாகவே உள்ளது. நமது இறுதிக் குறிக்கோள் ஆண்/பெண் என்ற பாலியல் வேறுபாடற்ற **''பாலிலி''** நோக்கொன்றை உருவாக்குவதே. இதற்கு பாலாதிக்கச் சமூகத்தால் நிர்ணயிக்கப்பட்ட பெண்மை தறித்த வரையறைகளை மீறி வரவேண்டியதாகிறது....'' எனக் கூறப்பட்டுள்ளது.


இதை விட இன்நூலில் அமெரிக்காவில் லெக்ஸிங்டன் சிறையில் அடைக்கப்பட்டுள்ள சூஸன், லிண்டா, லாரா ஆகிய பெண் கைதிகளின் பேட்டிகளும் தொகுக்கப்பட்டுள்ளது. (ஏற்கெனவே இப்பேட்டி சரிநிகரில் வெளியானது)

இந்நூலை வெளியிட்டிருக்கிற 'விடியல் பதிப்பகம்' பதிப்புரையில் இந்நூலில் உள்ள கருத்துக்கள் பற்றி இவ்வாறு குறிப்பிடுகிறது:

'இந்தத்தொகுப்போடு இந்தத் தலைப்பிலான விவாதங்கள் முற்றுப் பெற்றுவிட்டதாக விடியல் பதிப்பகம் கருதவில்லை'

இது பெண்ணிய கருத்தாடலுக்கான ஆரோக்கியமான விடயம். இக்காரியத்தை 'நிறப்பிரிகை' செய்து வருவதாகத் தெரிகிறது. மொத்தத்தில் இத் தொகுப்பு பயனுடைய தொகுப்பு என்பதில் சந்தேகம் இல்லை. இத் தொகுபாசிரியர்கள் இது பற்றி குறிப்பிட்டுள்ள விடயம் இங்கு பொருத்தமானது.

'பெண்ணியம் குறித்த விவாதப்போக்குகளை அறிமுகப்படுத்துதல், தாராளமானவர்களின் சிந்தனைகளை ஒருங்கு திரட்டி தருதல். என்ற விதத்திலும் இத்தொகுப்புக்கு ஈடாக தமிழில் வேறு ஒரு நூலும் இதுவரை வரவில்லை எனக்கூறுவது தற்புகழ்ச்சியாகாது.'



## The Right to Self Determination
## Helena J well

சுயநிர்ணய உரிமை - இலங்கைத் தமிழ் தேசியப் பிரச்சினை,' எனத் தலைப்பிட்டு புத்தகம் ஒன்று வெளிவந்துள்ளது. இதை இங்கிலாந்திலுள்ள தமிழ் தகவல் நிலையம் வெளியிட்டுள்ளது.

தமிழ் தகவல் நிலையத்தில் ஆய்வாளராக இருக்கும் ஹெலனா ஜே.வோல் என்பவரே இதை எழுதியவர். இவர், லண்டன் பல்கலைக்கழகமொன்றில் கலாநிதிப் பட்டத்திற்காக படித்துக்கொண்டிருக்கிறார்.

இப் புத்தகம் சர்வதேச சட்ட வழக்குகிற்கு அமைய சுய நிர்ணய உரிமை கோட்பாட்டின் இயங்கியலையும், சர்வதிகார அரசின் கீழ் வாழும் சிறுபான்மை குழுக்களுக்கு அதனை வழங்கும் போது உருவாகும் சிக்கல்களையும் ஆராய்கின்றது.

சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டினை ஆராய்வதற்காக இலங்கையில் சுய நிர்ணய உரிமை கேட்கும் தமிழ் சிறுபான்மையினரின் பிரச்சினையை ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளது இந்நூல். இது தமிழ் மக்கள் போராட்டம், சுதந்திர தமிழர் தாயகம் என்ற அடிப்படையிலான சுயநிர்ணய உரிமை கோரிக்கை, இலங்கை பேரினவாத ஆட்சியாளர்களின் அடக்கு முறை ஆகியவற்றின் பரிணாம வளர்ச்சியை ஆராய்கின்றது.

மேலும் சிங்களப் பேரினவாதத்தின் பிரதேச ஒருமைபாட்டு கோஷத்துக்கும் தமிழ் சிறுபான்மையினரின் சுய்நிர்ணய உரிமை கோரிக்கைக்கும் இடையிலான முரண்பாட்டையும் வெளிக்கொணர வருகின்றது.

ஒரு தசாப்தத்திற்கு மேலாக நடைபெறும் சிவில் யுத்தத்தினால், ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் இறந்துள்ளதுடன், ஐந்து லட்சத்திற்கும் அதிகமான தமிழர்கள் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளது இந்நூல்..




வண்ண மலர்கள்
சிறுவர் பாடல்கள்
ந. கிருஷ்ணராசா

சிறுவர்களுக்கான பாடல்கள் பத்தினை அவர்களது உளவியலைப் புரிந்து கொண்டு அவர்களது மொழியிலேயே படைத்திருக்கிறார் ந. கிருஷ்ணராசா.

சோகக்காட்சிச்சாலை, கூண்டுக்கிளி, வண்ணத்துப்பூச்சிக்கள் ஆகிய பாடல்கள் சிறுவர் உளவியல் தொடர்பான அவரது புரிதலை வெளிப்படுத்தி நிற்கின்றன. சிறுவர் மொழியில் இன்னும் கூடுதல் கவனத்தைச் செலுத்தியிருக்கலாம்.

1995ம் ஆண்டு தமிழ் மொழித்தின விழா மலரான ''பார்த்தேன்'' வடக்குக் கிழக்கு மாகாண கல்வித்திணைக்களத்தின் வெளியீடாக மலர்ந்திருக்கிறது. அழகான அட்டைப்படமும் உயர்ந்த ரகத் தாளில் நேர்த்தியான அச்சுப்பதிவும் கொண்டு ஏறத்தாழ இருநூறுபக்கங்களை அழகுற அமைத்திருக்கிறார் இதழாசிரியர் ச. அருளானந்தம் அவர்கள். வட-கிழக்கு மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றும் இவர் ஒரு சிறந்த எழுத்தாளரும் கவிஞருமாவார். தரமான பலகவிதைகள் கட்டுரைகள் பிற ஆக்கங்கள் என்பவற்றை இம்மலர் தாங்கி வருகின்ற போதிலும், நூலைப் பார்வையிடும் போது ஏதோ ஒரு நெருடல் தோன்றவே செய்கிறது. தமிழ் மொழித்தினத்தை விட ஒரு சிலருடைய ஆக்கங்களை அச்சுருவில் - அதுவும் நிரந்தர பதிவுகளை உருவாக்கக் கூடிய ஒரு மலரில் பார்க்கவேண்டுமே என்ற நோக்கம் தான் கூடுதலாக இருக்கிறது போல் தெரிகிறது.

எனது எழுத்தை பல பெயர்களில் அச்சில் ''பார்த்தேன்'' என்று ஒருசிலரும், எனது



பெயரில் பல ஆக்கங்களை மலரில் ''பார்த்தேன்'' என்று வேறு சிலரும், எனது குடும்பத்தில் உள்ளோர் பெயர்களிலெல்லாம் ஆக்கங்களைப் ''பார்த்தேன்'' என பிறிதொரு சிலரும் மகிழ்ச்சி கொள்ள மலர்ந்திருக்கிறது ''பார்த்தேன்''மலர்.

இதழாசிரியர் ச. அருளானந்தம் மட்டும் தனது பெயரிலும் புனைப் பெயர்களிலுமாக ஏழுக்கு மேற்பட்ட ஆக்கங்களை இம்மலரில் அச்சேற்றியுள்ளார். தாமரைத்தீவான் என்ற பெரிய கவிஞர் ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட ஆக்கங்களில் தனது பெயரைப் ''பார்த்தேன்'' என்றுமகிழ்ந்து போயுள்ளார். மாகாண சபை அதிகாரியான சி.பற்குணம் தனது பெயரையும் தனது மனைவி பெயரையும் மலரில் ''பார்த்தேன்''என்று குளிர்ந்திருக்கிறார். இதழாசிரியர் தனது கிராமத்தவர்களையெல்லாம் தேடிப்பிடித்து எழுத வைத்திருக்கிறார். என்பது மட்டும் ஒரு மகிழ்ச்சியான

வரவு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net





# எமது தாயகமும் வடக்கே – 4

ஹஸ்புல்லாஹ்



## வடக்கு - கிழக்கு முஸ்லிம் சிறுபான்மையினர் ஒப்பீடு

வடக்கு கிழக்கு மாகாணங்கள் இன்று ஒரு தனி அரசியல் அல காகக் கருதப்பட வேண்டும் என்று தமிழ் மக்கள் அரசியல் ரீதியாகவும், ஆயுத ரீதியாகவும் போராடி வருகின்றனர். இவ்விரு மாகாணங்களும் இணைக்கப்பட வேண்டும் என்ற அவர்களின் கோரிக்கைக்கு இவ்விரண்டு மாகாணங்களிலும் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழ்வதே அடிப்படைக் காரணமாகும். வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் பாரம்பரியப் பிரதேசம் என்ற தமிழ் மக்களின் அரசியல் அபிலாசையைப் பூர்த்தி செய்யும் நோக்கோடு அறிமுகப்படுத்தப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தம் இவ்விரு மாகாணங்களையும் இணைத்து ஒரு நிர்வாக அலகாக ஆக்கியது. அன்றிலிருந்து இன்று வரை வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்த அடிப்படையிலான அரசியல் சிந்தனைகள் மேலோங்கி காணப்படுகின்றன. இச்சிந்தனைகளில் இவ்வாய்வுடன் தொடர்பான ஒரு அம்சம் இவ்விரு மாகாணத்திலும் வாழ்கின்ற முஸ்லிம் சிறுபான்மையினர்களின் நிலைப்பாடாகும். இக்கண்ணோட்டத்தில் பின்வரும் பகுதியில் வடக்கு_ கிழக்கு முஸ் லிம் சிறுபான்மையினரின் அரசியல் அபிலாசைகள் அதற்கான பின்னணிகள் ஒப்பிடப்படுகின்றன.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் மொத்த சனத்தொகையின் 33% மாகக் காணப்படுகின்றனர். இம்மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் எண்ணிக்கை ரீதியாகவும் விகிதாசார ரீதியாகவும்;முஸ்லிம்கள் பெரும்பான்மை ரீதியாக காணப்படுகின்றார்கள். அம்பாறை மாவட்டத்தில் குறிப்பாகச் சம்மாந்துறை, கல்முனை, பொத்துவில் தேர்தல் தொகுதியில் முஸ்லிம்களின் விகிதாசாரம் 80%ற்கும் அதிகமாகக் காணப்படுகின்றது. அரசியல் ரீதியாக பலம் வாய்ந்த பிரதேசமாகவும் இது காணப்படுகின்றது.

வடக்கு, கிழக்கு முஸ்லிம் சிறுபான்மையினருக்கிடையில் உள்ள மிக அடிப்படையான ஒற்றுமை ஒரே மார்க்கத்தை பின்பற்றுபவர்களாகவும், ஒரே மொழியைப் பேசுபவர்களாகவும், இன, கலாசார அம்சங்களில் நிறைந்த பொதுத் தன்மையுடையவர்களாகவும் இருப்பதாகும்.

மாறாக, இவ்விரு முஸ்லிம் சிறுபான்மையினருக்கிடையில் பொருளாதார, புவியியல், அரசியல் அபிலாசைகள் ரீதியாக நிறைந்த வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவ்விரு முஸ்லிம்களுக்கிடையிலான புவியியல் தொடர்பை நோக்கின் நூற்றுக்கும் அதிகமான மைல் பிரதேசத்தால் இவ்விருமக்களும் பிரிக்கப்பட்டுக் காணப்படுகின்றார்கள். உதாரணமாக கல்முனை முஸ்லிம் செறிவுக்கும்; மன்னார் மாவட்ட அல்லது முல்லைத்தீவு மாவட்ட அல்லது யாழ்ப்பாண மாவட்டத்திற்கிடையிலான தூர வேறுபாடு சிங்களப் பெரும்பான்மைப் பிரதேசத்திற் காணப்படும் புத்தள மாவட்ட முஸ்லிம் செறிவை விடவும், ஏனைய பல மாவட்ட முஸ்லிம் செறிவை விடவும் தூரமானது. தாக்கமுள்ள இன, பொருளாதார கலாசார; அரசியல் பரிமாற்றத்திற்கு இவ்விரு முஸ்லிம் சிறுபான்மையினருக்கிடையிலான தூர இடைவெளி தடைக்கல்லாக இருக்கும்.

அடுத்து வரலாற்று ரீதியாக கலை கலாசார பாரம்பரிய தனித்துவ ரீதியாகவும் இவ்விரு முஸ்லிம்களும் வேறுபட்டுக் காணப்படுகின்றனர். பொருளாதார ரீதியாகவும் இவ்வேறுபாடுகள் இவ்விரு சிறுபான்மை முஸ்லிம்கள் மத்தியில் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. குறிப்பாக பொருளாதார நடவடிக்கைகள் தமிழ் முஸ்லிம் உறவில் முரண்பாடான போக்கினைக் கிழக்கில் கொண்டதாக இருக்க, வடக்கில் முன்பு குறிப்பிட்டது போல முரண்பாடற்ற உறவாகக் காணப்படுகின்றது. அரசியல் பாரம்பரிய ரீதியாக கிழக்கு முஸ்லிம்கள் தமது எண்ணிக்கை முக்கியத்துவத்தினால் தனித்துவமான அரசியல் முறைமையை அமைத்துக் கொள்ளக்கூடிய வாய்ப்புக் காணப்படுகின்றது. மாறாக, வட மாகாண முஸ்லிம்கள் பரம்பல், எண்ணிக்கை ரீதியாகத் தமிழ் அரசியலில் தங்கி வாழ வேண்டியவர்களாக உள்ளனர்.

கிழக்கில் பொருளாதார; அரசியல் அடிப்படையில் உருவாக்கிய முஸ்லிம் தமிழ் முரண்பாடுகள் 1990ம் ஆண்டின் ஆரம்ப கட்டத் தில் தமிழ்-முஸ்லிம் மக்களுக்கிடையில் வன்செயல்கள் உருவாகக் காரணமாகியது. இக் கால கட்டத்திலும் கூட முஸ்லிம் _தமிழ் உறவு வடமாகாணத்தில் சீராகக் காணப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலே குறிப்பிட்டவாறு வரலாற்று புவியியல் பரம்பல், பொருளாதார இன உறவு ஆகிய அடிப்படை யில் வடக்கு-கிழக்கு முஸ்லிம் சிறுபான்மையினருக்கிடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவ்வேறுபாடுகள் இவ்விரு பிர தேச முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாசைகளின் வேறுபாட்டில் பிரதிபலித்திருக்கின்றன.

வடக்குக் கிழக்கு முஸ்லிம்களுக்கு இடையிலான பொதுத்தன்மைகளையும் வேறுபாடுகளையும் சரியாக அடையாளப்படுத்தப்பட்ட, அடிப்படையிலான பொருத்தமான முஸ்லிம்களுக்கான அரசியல் தீர்வு ஒன்றில் இவ்விரு முஸ்லிம்களினதும் அபிலாஷைகள் ஒன்றிணைக்கப்படலாம் என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

## வடமாகாண முஸ்லிம்களின் அரசியல் அபிலாஷைகள்

அகதிகளாக்கப்பட்ட இம்மக்கள் தமது அகதி நிலையில் மாற்றம் ஏற்பட்டு இந்நாட்டில் வாழும் ஏனைய மக்களைப் போல் தாமும் வாழ வேண்டும் என்று விரும்புவது நியாயமானதே. இம்மக்கள் தமது பாரம்பரியப் பிரதேசத்தில் வாழ்வதே பொருத்தமானதாகும். குறிப்பாக பலவந்த வெளி யேற்றத்தால் தாம் இழந்த வீடு, உடமைகளைத் திரும்பவும் பெற்று வாழ்வது இம்மக்களின் சீரான வாழ்க்கையின் அடிப்படைக்கு அவசியமானதாகும். அன்றியும் தாம் அகதிகளாக அந்நியர் பிரதேசங்களில் வாழுப் நிலை மாறிதாம் பிறந்து வளர்ந்த பிரதேசத்தில் தமது வாழ்வுரிமையை த்திரும்பவும் பெற்றுக் கொள்வது மேலும் சிறப்பானதாகும். மேற்குறித்த வாழ்வுரிமையை மீளப்பெற்றுக் கொள்ளும் உரிமை எந்த மனித சமுதாயத்தினதும் அடிப்படைக்குடியியல் உரிமையாகும். இந்த வகை யில் வடமாகாண முஸ்லிம்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், கலந்துரையாடல்கள், கருத்தரங்குகளிலிருந்து இம்மக்களின் அபிலாசைகள் பின்வருமாறு அடையாளப் படுத்தப்படுகின்றன.

### மீள் குடியேற்றம்

சமாதான சூழ்நிலையில் தமது மீள் குடியேற்றம் நடைபெறுவதை இம்மக்கள் விரும்புகின்றார்கள். அவ்வாறான மீள்குடியேற்றம் ஒன்று தமது சொந்த இடங்களில் ஏற்பட்ட பின் மீண்டும் தாம் வெளியேற்றப்படாமல் இருப்பதற்கான உத்தரவாதத்தையும் இம்மக்கள் வேண்டி நிற்கின்றனர். இவ்வுத்தரவாதம் தேசிய மட்டத்திலும் சர்வதேசிய மட்டத் திலும் அளிக்கப்படக்கூடியது சாலப்பொருத்தமானது.

### பாதுகாப்பு

வடமாகாணத்தில் பரஸ்பர இன ஐக்கியமும் புரிந்துணர்வும், ஜனநாயகப் பாரம்பரியமும் உருவாகும் வரை தமது வாழ்வுரிமையை உத்தரவாதப்படுத்தக்கூடிய இடைக்காலப் பாதுகாப்பை இம் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

### அரசியல் உரிமை

வடக்கின் பிரதான சிறுபான்மையினரான முஸ்லிம்கள் எண்ணிக்கை ரீதியாக மொத்த சனத் தொகையில் குறைவானவர்களாவர். இம்மக்களின் அரசியல் உரிமைகளைப் பாதுகாக்கக்கூடிய அரசியல் யாப்பு ரீதியான சீர்திருத்தங்களை இம்மக்கள் வேண்டி நிற்கின்றனர்.

### புனர் வாழ்வு

திருப்தியான புனர்வாழ்வு-புனர் நிர்மாணத் திட்டங்கள் முற்றாக வேரறுக்கப்பட்ட இச்சமூகத்தை மீண்டும் கட்டி எழுப்புவதற்கு அவசியமானதாகும்.

## இழந்த சொத்துக்களை மீளப் பெற்றுக்கொள்ளும் உரிமை

### நஷ்டஈடு

இழந்த சொத்துக்களுக்கும் இருக்கின்ற சொத்துக்களுக்கும் ஏற்பட்ட சேதங்களுக்கு நியாயமான நஷ்டஈட்டிற்கான ஒழுங்குகளை எதிர்பார்க்கின்றனர்.

### தமிழ் — முஸ்லிம் உறவு

முறிந்து போன தமிழ்_ முஸ்லிம் உறவைக் கட்டி எழுப்பவும், இனப்புரிந்துணர்வை ஏற்படுத்தவும் பொருத்தமான கல்வியூட்டல் திட்டம் ஒன்று முன்வைக்கப்படுதல் வேண்டும்

### அகதி நிலையில்

மீள்குடியேற்றம் செய்யப்படும் வரை அகதி வாழ்க்கையின் தற்போதைய நிலையில் இருந்து மாற்றம் ஏற்படத் தாக்கமான சீர்திருத்த முயற்சிகள் செய்யப்பட வேண்டும்.

## இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அரசியல் திட்டங்களும் வடமாகாண முஸ்லிம்களும்

இலங்கையின் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காக இதுவரை எடுக்கப்பட்ட முயற்சிகள் எதுவும் வெற்றியைத் தரவில்லை. அரசியல் தீர்வு முயற்சிகளில் முஸ்லிம்களின் அபிலாசைகள் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப் படாமையும் இத்தோல்விகளுக்குக் காரணம் எனலாம். 1987ம் ஆண்டு இந்திய_ இலங்கை ஒப்பந்தமாக நடைமுறைக்கு வந்த அரசியல் தீர்விலும் முஸ்லிம்களின் நலன்கள் புறக்கணிக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக முஸ்லிம்களின் நலன்களை வென்றெடுப்பதை நோக்கமாகக் கொண்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற அரசியல் கட்சி ஒன்று இக்கால கட்டத்தில் உருவாகியது. இந்நாட்டின் இன்றைய அரசியலில் முக்கியமான சக்திகளில் ஒன்றாக இக்கட்சி வளர்ந்து காணப்படுகின்றது. இக்கட்சி வடக்குகிழக்கு முஸ்லிம்களின் அரசியல் உரிமை, பாதுகாப்பு, கலாச்சார தனித்துவத்தை வென்றெடுப்பதற்கான ஒரு திட்டத்தை இன்று முன்வைத்திருக்கின்றது.

வரும்....

# நந்தலாலாவின் தீர்த்தக்கரைக் கதைகள்

## பூவரசுகளின் விமர்சனம் – சில குறிப்புக்கள்

மலையக மக்களின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் தீர்த்தக் கரைக்கதைகள் (சிறுகதைத் தொகுப்பு)விமரிசனக் கூட்டம் பூவரசுகளின் ஏற்பாட்டில் அண்மையில் மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இடம் பெற்றது.

தீர்த்தக்கரை, நந்தலாலா இரண்டுமே மலையகத்தின் இலக்கிய சஞ்சிகைகள். தீர்த்தக்கரை 1980-1982 காலப்பகுதியது. நந்தலாலா, 1992க்கு பிந்தியது 1982ல் நின்று போன தீர்த்தக்கரையை சேர்ந்தவர்களில் சிலரே 1992இல் நந்தலாலாவை உருவாக்கினர்.

இவ்விரு சஞ்சிகைகளிலும் வெளிவந்த 13 சிறுகதைகளின் தொகுப்பாக இத் தொகுப்பு அமைந்துள்ளது. எல்லாச் சிறுகதைகளும் திருப்திதராவிட்டாலும் கூட சில கதைகள், திருப்தி தருவன. உதாரணமாக ராமையா முருகவேள் எழுதிய 'சிறுவன்' சிறுகதையைக் குறிப்பிடலாம்.

மலையக மக்களின் இலக்கிய முயற்சிகளை அறிமுகப்படுத்தும் நோக்கில் பூவரசுகள் நடாத்திய இரண்டாவது நிகழ்வுதான் 'தீர்த்தக்கரைக் கதைகள் - விமர்சனக்கூட்டம்'. தலைமை கவிஞர் வாசுதேவன். விமர்சகர் மண்டூர் அசோகா நந்தினி சேவியர் பதிலுரை எல். ஜோதிக்குமார்.

தலைவர் தமதுரையில் 'நான் இந்த தொகுப்பை முழுமையாக வாசிக்கவில்லை. வாசித்த கதைகள் திருப்தி தரவில்லை' என்றார். சில வேளை முழுமையாக படித்திருந்தால் கருத்து மாறுபட்டுமிருக்குமோ என்னவோ?

முதலில் விமர்சனத்தை ஆரம்பித்தவர் சிறுகதை ஆசிரியர் மண்டூர் அசோகா. தொடர்ந்தும் எழுதிக்கொண்டிருக்கின்ற பெண் எழுத்தாளர். இவரும் இந்தப் புத்தகத்தை முழுமையாக படிக்காமல் சாருமதி அவர்கள் என்னை நிர்பந்தித்ததனால் (சாருமதி பூவரசின் அமைப்பாளர்) வந்திருப்பதாகவும் தான் விமர்சிக்கப் போவதில்லை என்றும் கூறிவிட்டு சிறுகதைகளின் தலைப்புகளையும் எழுத்தாளர் பெயர்களையும் ஒரு மேலோட்டமான சாரத்தையும் சொல்லி இவை இத்தொகுப்பின் நல்ல பக்கம் எனக் குறிப்பிட்டார்.

'அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்' தொகுப்பின் ஆசிரியர் நந்தினி சேவியர் அடுத்து விமர்சனத்தை செய்தார். தமக்கு வழங்கப்பட்ட பணியை ஓரளவு செய்து முடித்தவர் இவர் மாத்திரமே என்று குறிப்பிடலாம்.

ஈழத்திலே சிறுகதை இலக்கியத்தின் தன்மை, அதன் போக்கு இதில் தீர்த்தக்கரைக்கதைகள் எவ்வாறுள்ளன எனக் கூறி பல தோல்வியடைந்த கதைகளினூடே சில நல்ல கதைகள் இருப்பதாகவும் கூறினார்.

நந்தினி சேவியர் தவிர்ந்த தலைவர் வாசுதேவனோ, மண்டூர் அசோகாவோ இத்தொகுப்பை முழுமையாகப் படித்திருக்கவில்லை. பதிலுரைக்கு அழைக்கப்பட்ட ஜோதிகுமாரோ சமூகமளிக்கவேயில்லை. தொகுப்பை படிக்காதவர்களைப் பூவசுகள் தலைமை தாங்கவும் உரையாற்றவும் அழைத்தது ஏன்? பதிலுரையாற்ற அழைக்கப்பட்ட ஜோதிக்குமார் இத் தொகுப்பில் ஒரு கதை கூட எழுதியிருக்கவில்லை.தொகுப்பில் எழுதியிருந்த யாராவது ஒருவரை அழைத்திருந்தால் பிரயோசனமாக இருந்திருக்குமல்லவா?

மட்டக்களப்பிலுள்ள இலக்கிய அமைப்புக்களிலே மலையக தமிழ் இலக்கியம் மீது முதன் முதல் கவனத்தை திருப்பியவர்கள் பூவரசுகள். ஆனால் மலையக தமிழ் இலக்கியம் பற்றி பூவரசுகள் நடத்திய இரண்டு நிகழ்வுகளும் சப்பென்றானது, கவலைக்குரிய விடயம்.ஏன் என்பதை பூவரசுகள் கவனத்தில் கொள்ள வேண்டும்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






பேராதனைப் பல்கலைக்கழகம் கால வரையறையின்றி மூடப்பட்டுள்ளது. மாணவர்கள் அனைவரையும் வெளியேறுமாறு நிர்வாகம் அறிவித்திருந்த போதும் 200 மாணவர்கள் அளவில் விடுதியிலேயே தொடர்ந்தும் தங்கியிருக்கின்றனர். பல்கலைக்கழக வளாகத்தினுள் பொலிஸார் காவல் புரிவதாகவும் தெரியவருகின்றது.

பல்கலைக்கழகம மூடியது தொடர்பாக உபவேந்தர் பத்திரிகைகளுக்கு தெரிவித்த செய்தியில் ''புதிய மாணவர்களுக்கு ராக்கிங் செய்தமை, கலைப்பீட விரிவுரையாளர் ஒருவரை பயணக்கைதியாக வைத்திருந்தமை ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக ஏழு பல்கலைக்கழக மாணவர்கள் மீது பல்கலைக்கழக நிர்வாகம் ஒழுங்கு நடவடிக்கை எடுத்தது. ஆனால் பல்கலைக்கழக நிர்வாகத்தின் முடிவை ஆட்சேபித்து கலைப்பீட மாணவர்கள் பின்வரும் மூன்று நிபந்தனைகளை முன்வைத்து விரிவுரைகளை பகிஷ்கரித்தனர். அவையாவன,

- மாணவர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனை நீக்கப்பட வேண்டும்.
- காசாளரை (Bursar) இடைநிறுத்த வேண்டும்.
- பல்கலைக்கழக ஊழல் நடவடிக்கைகளை விசாரனை செய்வதற்கு ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்க வேண்டும்.

இவர்கள் மேற்கொண்ட பகிஷ்கரிப்பு நடவடிக்கை மற்றைய பீடங்களுக்கும் பரவியத்தைத் தொடர்ந்து பல்கலைக்கழகம் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது.

''பேராதனை பல்கலைக்கழக நிர்வாகத்தின் ஊழல்களை எதிர்த்ததாலும் அவற்றை வெளிக்கொண்டு வந்ததாலும் மாணவர் தலைவர்களுக்கு கல்விகற்க முடியாதவாறு தண்டனை வழங்கியுள்ளது நிர்வாகம். இவர்களுள் ஏழு மாணவர்கள் தம் வாழ் நாள் முழுவதிலும் பல்கலைக்கழத்திற்குள் நுழைய முடியாது. மற்றும் ஏழு மாணவர்கள் மூன்று வருடங்களுக்கு விரிவுரைகளுக்குச் செல்ல முடியாது...'' என்கிறார் ஒரு மாணவர்.

ராக்கிங் செய்தமையாலும், விரிவுரையாளரைப் பணயக்கைதியாக வைத்திருந்தமையினாலுமே மாணவர்களுக்கு தண்டனை வழங்கியுள்ளதாக உபவேந்தர் தெரிவித்துள்ளாரே என்கிற கேள்விக்கு ''இவர்கள் எப்பொழுதும் இப்படியே செய்வார்கள். இப்பொழுதும் வழமையான குற்றங்க்ளையே சுமத்தியுள்ளனர். தண்டனை கிடைக்கப்பெற்ற மாணவர்கள், மாணவர் பிரதிநிதிகள் மட்டுமல்ல, மாணவர் தலைவர்களும் கூட. இவர்கள் ராக்கிங் செய்வதில்லை அதற்கு எதிரானவர்கள்'' என்பது அவரது பதி லாக இருந்தது.

''இந்த மாணவர் பிரதிநிதிகளின் மீதான ராக்கிங் குற்றத்தை நிர்வாகத்தால் நிரூபிக்க முடியாது. ஊழல்களை வெளிக்கொண்டுவரும், மாணவர் தலைவர்களுக்கு இது போன்ற தண்டனைகளை வழங்கி, தமக்குத் தேவையானவர்களை மாணவ பிரதிநிதியாக நியமிப்பது வழக்கம். இப்படியான நிகழ்வுகள் அரசாங்கத்தின் ஆதரவோடு கடந்த காலங்களில் நடைபெற்றுள்ளன''. என்கிறார் சற்று ஆவேசபபட்ட இன்னொரு மாணவர்.

'நீங்கள் வைத்துள்ள நிபந்தனைகளில் காசாளரை நீக்கும்படி கோரியுள்ளீர்களே அதற்கான காரணம என்ன?

''பல்கலைக்ழக நிர்வாகத்தில் இடம்பெற்ற பல ஊழல்களுக்கு இவரே பிரதான காரணகர்த்தா ஆவார் இவருக்கு இருக்கும் அரசியல் செல்வாக்கினால், உபவேந்தர் கூட தனது பதவியை காப்பாற்றிக் கொள்ள மௌனமாக இருக்கிறார் என்கிறார் அவர் காசாளர் மீதான ஊழல் குற்றச்சாட்டுக்களில சில்லறை குறிப்பிடுகிறார்கள்.

- பல்கலைக்கழக அபிவிருத்திக்கு அரசிடம் இருந்து வந்த 90 இலட்சம் (9மில்லியன்) ரூபாக்களை, அரசாங்கத்திற்கு மீண்டும் திருப்பியனுப்பி அரசியல்வாதிகளுடன் தனது நட்பை நெருக்கமாக உருவாக்கிக் கொண்டமை.
- பல்கலைக்கழக மின்மானிகளை (மீட்டர்) நிற்பாட்டி, 9 இலட்சம் ரூபாய்களை களவாடியமை.
- கேள்விப் பத்திரங்கள் தொடர்பான ஊழல் மூலமாக 15% பணத்தை தான் எடுத்துக் கொண்டமை.
- இந்த கேள்விப் பத்திரங்களை தனது நெருங்கிய உறவினர்களுக்கு மட்டுமே கொடுத்தமை.
- இவற்றுக்கு ஆதாரமாக இருந்த ஆவணங்களை இல்லாமல் செய்வதற்கு முயற்சித்தமை.

இந்த ஊழல்கள் வெளியானமைக்கு காரணமாக அமைந்தது, பதிவாளருக்கும், (Regisrar) காசாளருக்கும், (Bursar) இடையில் 92ம ஆண்டு உருவான, பதவிப் போட்டி என அம் மாணவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

87ம் ஆண்டு, இது போன்ற ஊழல் தொடாபான விடயங்களை தேட முற்பட்ட நிஸ்மி என்ற மாணவன் இவரின் தூண்டுதலால், அரசாங்கத்தின் துணையுடன் படுகொலை செய்யப்பட்டார் என்றுமுன்னைய சம்பவமொன்றை ஞாபகப்படுத்தினார்.

தண்டனை கிடைக்கப்பெற்ற மாணவர்களுடன் தொடர்பு கொண்ட காசாளர், தன் மீது சுமத்தியுள்ள குற்றங்களை மீளப்பெறுவீர்களானால், உங்கள் மீதான தண்டனையையும் மீளப்பெற்று விடுவேன் எனக்கேட்டதாகவும் சில மாணவர்கள் தெரிவித்தனர்.

மாணவர்களின் கோரிக்கைகளுக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பதில் அளித்த போது, முதலாவது நிபந்தனையை ஏற்க முடியாது. ஏனெனில் இது விரிவுரையாளர் சங்கம் எடுத்த முடிவாகும். இரண்டாவது நிபந்தனையான காசாளரை இடைநிறுத்துவது, என்னால் முடியாத காரியம். ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்க வேண்டும். என்ற கோரிக்கையை நானும், ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அதை அரசாங்கமே செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கெனவே மாணவர்களின் கோரிக்கையை ஏற்று, ஒரு ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். ஆனால் மாணவர்கள் இந்த ஆணைக்குழு மீது நம்பிக்கையில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

கடைசியாக கிடைத்த தகவல்களின் படி, புதிய ஆணைக்குழு முன் சாட்சியமளிக்க மாணவர்கள் இணங்கியுள்ளதாகவும் ஆனால் இது தொடர்பான எழுத்து. மூலமான அறிவித்தல் எதுவும் மாணவர் சங்கத்திற்கு இதுவரை கிடைக்கவில்லை. எனவும் தெரிய வருகிறது.

மறறும், பல்கலைக்கழக விடுதியை விட்டுப் போகுமாறும், மாணவர்கள் போனதன் பின் நான்கு நாட்களுக்குள் பல்கலைக்கழகத்தை திறப்பதாகவும் உபவேந்தர் அறிவித்துள்ளார்.

ஆனால், மாணவர்கள் தாம் வெளியேறிய நாளில் இருந்து 16 நாட்களுக்குள் பல்கலைக்கழகத்தை திறப்பதாக உபவேந்தர் எழுத்து மூலம் உத்தரவாதம் தர வேண்டும் எனவும் கேட்டுள்ளனர். இதற்குப் பதிலளித்த உபவேந்தர், மாணவர்கள் எந்த நிபந்தனையும் இன்றியே பல்கலைக்கழக விடுதியை விட்டு வெளியேற வேண்டும்'' எனத் தெரிவித்துள்ளார்

ஆக மாணவர் போராட்டம் தொடர்கிறது.

## மறு பக்கம்

# பொல்லாப் பிள்ளையார்

உலகெங்கும் உள்ள பிள்ளையார் விக்கிரகங்களில் பெரும் பாலானவை கடந்த வாரம் பாலை உறிஞ்சிக் உறிஞ்சி குடித்தனவாம்! உறிஞ்சுகிற சத்தம் கூட கேட்டதாக, சில பக்தர்கள் பரவசப்பட்டார்கள். பிள்ளையார் மட்டுமல்ல, வேறும் பல இந்து விக்கிரகங்களும் பால் குடித்தனவாம்!!

பிள்ளையார் படங்கள் பால் குடித்தனவா? என விசாரித்துப் பார்த்ததில், அவ்வாறு நடைபெறவில்லை என ஏமாற்றத்துடன் தெரிவிக்கப்பட்டது. தூணிலும் துரும்பிலும் உள்ள ஆண்டவன் படத்தில் இல்லாமல் போனான், என தர்க்கரீதியான கேள்விகளை எழுப்பி ஈ.வெ.ரா. பெரியாரின் சீடப் பிள்ளையாக என்னைக் காட்டிக் கொள்வது அல்ல எனது நோக்கம்.

தனிப்பட்ட ரீதியில் எனது கருத்து என்னவெனில், திராவிடர் கழக மறுமலர்ச்சிக் காலத்தில் ஈ.வெ.ரா. பெரியார் இந்து விக்கிரகங்களுக்கு செருப்பால் அடித்தது மிகவும் அநாகரிகமான அருவருப்பூட்டும் செயல் என்பதே. இந்துக்களின் மனங்களை அச் செயல் மிகவும் புண்படுத்தியது.

ஆனால் அரசியல் ஆசாமியான சந்திரா சுவாமியின் அதிரடி அறிவிப்பு அதைவிடவும் அநாகரிகமானது.

ஏதோ, தான் 'ஓடர்' போட்ட படியால் தான் பிள்ளையார் பால் குடித்தாராம்!

சில வேளைகளில் ஜெ.ஜெ.வீட்டுக்கல்யாணத்தில் தேவர்கள் வந்து பூமாரி பொழிந்தார்கள் என செய்தி வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

புது டில்லியிலும், உலகின் வேறுபல பெரும் நகரங்களிலும் பாலுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டதாம். பத்திரிகைகள் பாடுவெகு கொண்டாட்டம். நான் கைந்து நாட்களாக விளாசித்தள்ளி விட்டன. நமது தமிழ்ப்பத்திரிகை ஒன்று ''இனியென்ன பிள்ளையார் பால் குடிச்சிட்டாராம்.... சமாதானம் அந்தா வருகிறது... இந்தா வந்தே விட்டது'' என்று முற்பக்கத்தில் ''அடைப்புச்செய்தி'' எழுதியது.

வெகுவிரைவில் ''பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிட'' என்ற தலைப்பில் ''முற்போக்குக் கதை''கள் இவ்வாறான பத்திரிகைகளில் வெளிவரும் என்று எதிர்பார்க்கலாம். கதை இப்படித்தான் இருக்கும்.. ''ஒரு ஏழைச் சிறுவன் பசியால் துடிக்கிறான். பக்கத்து வீட்டுப் பணக்காரர் பிள்ளையாருக்கு பால் பருக்க ஓடுகிறார். அவர் திரும்ப வரும் போது சிறுவன் இறந்து போகிறான். பணக்காரர் வள்ளலாக மாறி சவ அடக்கத்துக்கு உதவி செய்கிறார்''...

சில சிறு விக்கிரகங்களுக்கு தேக்கரண்டிகள் மூலம் புகட்டப்பட்ட பால் மாயமாய் மறைந்தது உண்மையே. இது ஒன்றும் அதியம் அல்ல. பௌதீகவியலில் சாதாரண அறிவுள்ள எவருக்கும், மேற்பரப்பிழுவிசை, நுண்துளைக்குழாய் இயல்பு ஆகியவற்றின் மூலமே இந்த மாயத்தோற்றப்பாடு கிட்டியது என்பது இலகுவில் புரியும். உங்களது குழந்தையின் நாய்க்குட்டி பொம்மை கூட இவ்வாறு பால் பருகும்!

இதை வைத்துக் கொண்டு இந்து மதத்தின் காவலர்களாக தம்மைக் காட்டிக் கொள்ளும் அரசியல்வாதிகள் அரசியல் பிழைக்க முயல்வதுதான் மிகப் பெரிய ஏமாற்றுவேலை.

இவ்விடத்தில்,இன்னுமொன்றையும் ஞாபகமூட்ட வேண்டியுள்ளது.

அந்நியர் ஆட்சிக்காலத்தில் பௌத்த, இந்து, முஸ்லிம் மதங்களும், மக்களும்

ஒடுக்கப்பட்டபோது, இந்துக்கள் சார்பில் மேற்கிளம்பிய ஒரு புதிய தெய்வம் ''அடுப்பு நாச்சியார்''

பகிரங்கமாக தெய்வ வழிபாடு செய்தல் ஆபத்தான காரியமாகியபோது, அடுப்படிக்குள், அடுப்புக்கல்லையே தெய்வமாகப் பாவித்து மக்கள் வழிபட்ட வரலாறுதான் அடுப்புநாச்சியின் வரலாறு. இன்றும் கூட கிராமங்களில் அடுப்பு நாச்சியாருக்கு மிகுந்த 'பய'பக்தி உண்டு. விஷேச உணவு வகைகள் தயார்படுத்தப்படும் போது முதல் பலகாரத்தை அடுப்பு நாச்சியாருக்குத் தான் படைக்கிறார்கள். உணவு மீது அதீத பிடிப்பு கொண்டு சண்டையிடுபவர்களை 'அடுப்பு நாச்சி' எனக் கேலி செய்தலும் உண்டு.

அடுப்புநாச்சியாரின் தோற்றமும், வழிபாடும் இயல்பானவை. நியாயப்படுத்தப்படக் கூடியவை. பால்குடிப் பிள்ளையார் கதை அந்நாகரீகமானது. கண்டிக்கப்பட வேண்டியது. ஒவ்வொரு இந்துவும் இவ்வாறு சொல்வதற்கும், நம்புவதற்கும் வெட்கப்படவேண்டும்.

இந்துவாக இருப்பதில் பெருமை கொள்ளக் கூடிய எதையாவது நாம் செய்திருக்கிறோமா என எண்ணிப் பார்த்ததில்...

ஆழ்வார்க்குட்டி.

## மறு பக்கம்

# பொருந்தாக் கல்யாணம்

சமீப காலங்களாக ஒன்றுமே இல்லை! ...பாபர் மசூதி அழிப்பு முதல் பள்ளிவாசல் படுகொலைகள் வரை.... வெட்கம், வெட்கம்தான் மிஞ்சுகிறது.

சமீப காலங்களாக, சிங்களத் தொலைக்காட்சி நாடகாசிரியர்களில் பலருக்கு ஒரு விதமான தொற்று நோய் பரவி வருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

அவர்களது கற்பனைகள் 'கலப்பு திருமணம்' பற்றி சுற்றிச் சுற்றி வட்டமிடுதலே அது!

ஒரு சிங்கள இளைஞனாம்... ஒரு தமிழ் யுவதியாம்.. அவர்கள் காதலிப்பார்களாம்!... காதலுக்கு பல தடைகளாம்... அப்பா, அம்மா, சமூகம்... அப்படி அப்படி பல தடைகளாம்... பிறகு கல்யாணம் பண்ணிக்கொள்வார்களாம். பிறகும் தடைகளாம்... புலி கிலி அப்படி.... அப்படி... பிறகு எல்லா வற்றையும் வென்று விடுவார்களாம்! இறுதியில் சுபம்.

அத்துடன் அச்சிங்கள இளைஞனோ அல்லது, அவனது நெருங்கிய உறவினரோ ஆயுதப் படைகளில் இருப்பதும் ஒரு முக்கிய விடயமாக இருக்கும்.

ஏனோ தெரியவில்லை, ஒரு தமிழ் இளைஞன்... சிங்கள யுவதி.. காதலாம்! அப்படி அப்படி.. என்று இவர்களால் ''கதை விட'' முடியவில்லை?

விடை சுலபம்.

ஆணாதிக்க சமுதாயம்.

தமிழ்ப் பெண் சிங்கள ஆணை மணமுடிப்பதன் மூலம் சிங்கள இனத்தில் சேர்ந்து கொள்வாள். சேர்ந்து கொள்ளவும் வேண்டும்! ஆனால் சிங்களப் பெண் தமிழ் இளைஞனை மணமுடித்து தமிழ் இனத்தில் சேர்ந்து கொள்ளலாமோ? கூடாதே!

இந்தக் கலப்பு மணச் சமாச்சாரம் 'சருங்கலே' திரைப்படத்தில்தான் முதன்முதலில் எட்டிப்பார்த்தது என்று எண்ணுகிறேன். ஆனால் ஒரு வித்தியாசம். அங்கு தமிழ்க் காதலன், சிங்களக் காதலி.

ஆனால், காதல் கைகூடமால் போய்விடும்! அவ்வாறு கற்ப்னை செய்வது தானே பொருத்தம்! சமுதாயத்தை வழி நடத்த முடியும்!!!

எனது சில இனிய சிங்கள நண்பர்களும், இனப்பிரச்சினை தீர்வுக்கான வழிமுறைகளில் முக்கியமான அம்சமாக, இந்தக் கலப்பு மணத்தை சிபார்சு செய்கிறார்கள். அத்துடன் சிங்களவர் தமிழரையும், தமிழர் சிங்களத்தையும் கற்பது கட்டாயமாக்கப்பட வேண்டுமாம். பலன் -தமிழர்கள் காலக்கிரமத்தில் சிங்களவர்களாகி விடுவார்கள். எப்படியோ 'தீர்வு' அங்கேதான் வந்து நிற்கிறது!

எனது சொந்த அனுபவத்தின்படி, இந்தக் கலப்பு மணங்களால் குடும்ப அலகில் பாதகமாக அம்சங்களே சாதகமான அம்சங்களை விட அதிகமாக ஏற்படுகின்றன. நீண்ட ஆண்டுகளுக்கு இந்தப் பாதகமான அம்சங்கள் குடும்ப அலகைச் சீர்குலைக்கின்றன.

எனது திருமணப் பதிவு வைபவத்தின் போது ஒரு சிங்களப் பெண்ணையே மணமுடிக்கும்படி பதிவாளரின் 'சிண்'ணினால் அறிவுறுத்தப்பட்டேன் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

ஆழ்வார்க்குட்டி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தெரிந்ததை...

என்றார். அதே ஹெலியில் பிரேமசாதாவுடன் கொழும்பு திரும்பினார் அஷ்ரஃப். அங்கு அஷ்ரஃப் மீது காங்கிரஸில் இருந்தவர்களாலேயே கேள்விகள் தொடுக்கப்பட்டது. கட்சியின் ஏகோபித்த முடிவு இல்லாமல் பிரேமதாசா அடுத்த முறையும் ஜனாதிபதியாக வர முஸ்லீம் காங்கிரஸ் உழைக்கும் என்று எப்படிப் பேசுவீர்கள் என்றார், கட்சியின் தவிசாளராக இருந்த முன்னாள் வடகிழக்கு மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் எம்.எச்.சேகு இஸ்ஸுதீன். அஷ்ரஃப்பின் இக்கூற்றுக் எதிராக பத்திரிகைகளில் அறிக்கை விட்டார். '' இது அஷ்ரஃப்பின் தனிப்பட்ட கருத்து, எதிர்காலத்தில் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பதென்பது இன்னமும் முடிவாகவில்லை. அப்படி அவர் பிரேமதாசா ஜனாதிபதியா வேண்டும் எனக் கேட்டிருப்பின்; அது முஸ்லீம் காங்கிரஸின் ஏகோபித்த குரலல்ல!'' என்று குறிப்பிட்டிருந்தார்.

இதன் பின் இன்றுவரை (சந்திரிகா அமைச்சரவையில் அமைச்சராகி இருப்பது வரை) நடந்திருப்பதை சித்தீக் எப்படி மறந்திருத்தல் இயலும்? பிரேமதாசா மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்ட பொழுது முஸ்லீம் காங்கிரஸ் எப்படி நடந்து கொண்டது? 1989ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட இப்போதைய அரை மந்திரி ஹிஸ்புல்லாஹ் அவர்கள் என்ன செய்தார்கள்? ஓட்டமாவடி, ஏறாவூர் முஸ்லீம் வாக்காளர்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதியைக் காப்பாற்றுவதற்காக ( இறுதி வரை முஸ்லீம் காங்கிரஸினால் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது.) ஹிஸ்புல்லாவை இராஜினாமா செய்யக் கேட்ட போது பதவியைக் காப்பாற்றுவதற்காக மன்சூருடனும், பிரேமதாசாவுடனும் ஹிஸ்புல்லாஹ் என்ன நெருக்கமாக இருந்தார். ( காத்தான்குடி மக்கள் இப்போதும் பிரேமதாசா, மன்சூரை மறக்க மாட்டார்கள்.) அஷ்ரஃப்பை வளைத்துப் போட பிரேமதாசா, ஹிஸ்புல்லாவை எப்படிப் பயன்படுத்தினார் என்பது முஸ்லீம் காங்கிரஸுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்து ஹிஸ்புல்லாஹ் எப்படி முஸ்லீம் காங்கிரஸின் இளைய தலைவர்களுள் ஒருவராகவும், உதவி மந்திரியாகவும் வந்தார் என்பதும் தெரிந்தவர்களுக்குத் தெரிந்த விடயமே!

1989ல் எதிர்க்கட்சிகளிடையே ஏற்பட்ட கூட்டுமுயற்சியில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுடன் பேசிக்கொண்டிருந்த அஷ்ரஃப், இரவோடு இரவாக பிரேமதாசாவுடன் சேர்ந்து கொண்டதும் அல்லாவின் பெயரால்; அல்குர்ரானின் பெயரால், ஜனாதிபதித் தேர்தலில் பிரேமதாசாவுக்கு வாக்களிக்கச் சொன்னதையும் நாங்கள் மறக்கவில்லை. அதற்குச் சொல்லப்பட் காரணத்தை நீங்கள் மறந்திருக்கலாம். நாங்கள் மறக்கவில்லை என்பதற்காகத்தான் உங்களின் இப்படியான பக்கசார்பான தோள்கொடுப்புக்களுக்கு பதில்களையாவது எழுத முடிகிறது! முஸ்லீம் மாகாணக் கோரிக்கையை மக்கள் கூட்டணி நிராகரித்து விட்டது! ம்ஸ்லீம்களின் அபிலாசைகளை, அரசியல் உரிமைகளை மதிக்கத் தயாராகவில்லாத மக்கள் கூட்டணியுடன் நாங்கள் உறவை முறித்துக் கொண்டோம்.'' ஸ்ரீமா எங்களது (எனது) முதுகில் குத்திவிட்டார். பிரேமதாசா முஸ்லீம்களின் முஸ்லீம் மாகாணக் கோரிக்கைக்கு இணங்கி விட்டார்! ஆகவே முஸ்லீம் மாகாணத்தை வென்றெடுப்பதற்கு பிரேமதாசாவிற்கு ஆதரவு வழங்குவோம்'' என்றார் அஷ்ரஃப். இது நடந்தது 1989ல். இப்போது 1995, இந்த இடைவெளிக்குள் அரசியல் அரங்கில் நடந்த மாற்றங்களையும், அஷ்ரஃப் அவர்களின் குத்துக்கரணங்களையும் சற்று நடுநிலையில் நின்று இரைமீட்டுப் பாருங்கள்!

இன்று முஸ்லீம் மாகாணக் கோரிக்கை கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகக் குழம்பிக் கிடக்கிறது. சந்திகா அஷ்ரஃப்பிடம் என்ன சொன்னார் என்பது இன்னும் தெரியாது! ஒருவேளை சித்தீக்குக்கு தெரிந்திருக்கலாம். (தெரிந்திருந்தால் '' வரலாற்று புகழ்மிக்க சந்திரிகா - அஷ்ரஃப் ஒப்பந்தம்'' என்னவென்று சொல்லவும்!)

தமிழ் மக்களுடைய அரசியல் போராட்டத்தில் தமிழ் அரசியல் தலைவர்கள் காலத்திற்குக் காலம் கோஷங்களுடனும்; வெறும் கோரிக்கைகளுடனும் காலத்தைக் கடத்தி வந்திருப்பதை கடந்த கால வரலாற்றின் ஊடே காண்கின்றோம்; இதன் வழியே நாமும் ஏமாற்றப்பட்டு விடுமோ என்ற அச்சம் முஸ்லீம் மக்கள் மத்தியில் ஏற்படுவது குற்றமா?

1. தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வில் முஸ்லீம் காங்கிரஸ் முஸ்லீம்களுக்கு எதனைக் கோருகின்றது என்ற விளக்கங்கள் அடங்கிய தீர்வுத் திட்டத்தை இதுவரை ஆவணரீதியாக வெளியிடாதது ஏன்?

2. வடக்கிலிருந்து புலிகளால் விரட்டப்பட்ட வடக்கு முஸ்லீம்கள் பற்றிய அஷ்ரஃப்பினதும் முஸ்லீம் காங்கிரஸினதும் தீர்வுதான் என்ன? புத்தளத்திலும் ஏனைய பகுதிகளிலும் வாழும் முஸ்லீம் அகதிகளின் வாழ்வில் நீங்கள் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சரான பின், என்ன மறுமலர்ச்சியைக் கொண்டு வந்திருக்கிறீர்கள்?

3. வடக்கு கிழக்கில் அம்பாறை மாவட்டத்திற்கு வெளியே வாழும் முஸ்லீம்களின் இருப்பிற்கு உங்களது அரசியல் கோரிக்கை எந்தவகையில் உத்தரவாதம் அளித்திருக்கிறது?

4. அம்பாறைத் தேர்தல் தொகுதியை விட்டுக்கொடுக்கும் சிங்கள பேரினவாத நிர்ப்பந்தத்திற்கு உங்களது பதில் தான் என்ன?

5. ''யாழ் மக்கள் மீது இலங்கை அரசு குண்டு போட்டுக் கொன்ற போது; உங்கள் கட்சியின் பெயரால் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் - அதற்கான முழுப்பொறுப்பையும் விடுதலைப் புலிகளே பொறுப்பேற்க வேண்டும்'' என்றீர்களே - எந்த அடிப்படையில் அது நியாயமானது?

6. முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் என்ற அந்த மகாபெரிய பணிவேறு - சந்திரிகா அரசின் அமைச்சர் என்ற பணிவேறு என்பதை நீங்கள் இன்னும் உணரவில்லையா?

இக்கேள்விகளுக்கு நீங்கள் தெளிவான பதில்களை அளித்தால் நாங்கள் தெளிவு பெற்றவர்கள் ஆகுவோம். சித்தீக் போன்றவர்களுக்கு மட்டுமே முஸ்லீம் காங்கிரஸின் அனைத்துமே தெரிந்திருப்பது நியாயமில்லையே?

முஸ்லீம்களின் அரசியல் விடுதலைக்காகப் போராடும் சக்தியாகத் தன்னைக் காட்டிக் கொள்ளும் முஸ்லீம் காங்கிரஸ், வரலாற்றில் எந்தவிதமான தடயங்களையும் அழித்து விட முடியாது! என்ற உண்மையை நன்கு புரிந்து கொள்ள வேண்டும்!

**ஹசன் (சாவகச்சேரி)**

## ''வளைவு'' வீடியோ குறும் படம்

பாலியல் வல்லுறவுக்கு உள்ளாகும் பெண் - அவளது மன உணர்வுகள் அவளுக்கும் கணவனுக்கும் இடையில் எழும் உறவுச் சிக்கல்கள். இவை குறித்த கேள்விகளை எழுப்பும் வீடியோ குறும் படம் (Video Short Film) ''வளைவு'' சீரோ கலை வட்டத்தின் முதல் தயாரிப்பாக வெளிவந்துள்ளது.

இப்படம் ஒக்ரோபர் 7ம் திகதி காலை பத்து மணிக்கு விபவி கலாசார மையத்தில் காண்பிக்கப்படவுள்ளது. அனைவரையும் வருகை தந்து பின் தொடரும் கலந்துரையாடலிலும் கலந்து கொள்ளுமாறு விபவி அழைக்கிறது.

# தாயகம்...

1990 ஆம் ஆண்டு பத்தாம் மாதம் 16ம் திகதிக்கு முன் எங்களை வெளியேறச் சொல்லி வீடு வீடாக சொல்லிக் கொண்டு வந்தார்கள். 16ம் திகதிக்கு முன்னமே இவர்கள் இப்படிச் செய்யப் போகிறார்கள் என்பதை அறிந்து பதட்டத்துடன் தான் இருந்தோம். எனது வீட்டார் எல்லோரும் முன்னமே போய்விட்டனர். நாம் பார்க்குமிடமெல்லாம் ஜனங்கள் கூட்டம் கூட்டமாக கிளம்பிக்கொண்டிருந்தனர். ஒவ்வொரு குடும்பமாக போய்க்கொண்டிருந்தனர். நான் என்னுடைய ஏனைய முக்கிய பொருட்கள் சிலவற்றை தெரிந்த சிலரிடம் பத்திரமாக கொடுத்து விட்டு சைக்கிளொன்றை எடுத்துக்கொண்டு புறப்பட்டேன். சைக்கிளிலும், பஸ்ஸிலும், படகிலும் பிரயாணம் செய்து புத்தளம் வந்து சேர்ந்தேன். அங்கிருந்து கொழும்பு வந்து சேர்ந்தேன். கொழும்பில் வந்து இறங்கிய போதும் சைக்கிளை எடுத்து ஓட்டமுடியவில்லை. கொழும்பு எனக்குப் புதிதாக இருந்தது. சைக்கிளை உருட்டிக் கொண்டே இந்த அகதிமுகாம் வந்து சேர்ந்தேன். இப்போது ஐந்து வருடங்களாகிவிட்டது. முன்னைய உஷார் இப்போது இல்லை. எல்லாவற்றையும் இழந்ததைப் போல் எங்களது தெம்பையும் உஷாரையும் இழந்துவிட்டோம்.

மிகவும் சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருந்த எங்கள் மீது 'அகதி' எனும் பெயர் சூட்டப்பட்டதன் பின் எல்லாவற்றையும் இழந்துவிட்ட சூனியமான உணர்வே எஞ்சியிருக்கிறது. எங்களது ஊரில் எங்களது மனைவி பிள்ளைகளை விட்டுவிட்டு எங்கும் சுதந்திரமாக போய்வருவோம். இப்போது எங்களால் அப்படிச்செய்ய முடியவில்லை. தெரியாத ஒரு ஊரில் ஒரு அடிமை வாழ்க்கையை வாழ்ந்துவருகிறோம்.

வற்புறுத்தினேன். அவர்கள் விடவில்லை. அங்கும் குவைத் - ஈராக் யுத்தம் நடந்து கொண்டிருந்தது. பின்னர் எனது வற்புறுத்தலின் பேரில் என்னை இங்கு அனுப்பி வைத்தனர்.

நான் இலங்கை வந்த போது ''மட்டக்களப்பில் உங்களது குடும்பத்தவர்கள் எவருமே இல்லை எல்லோரும் வெளியேறிவிட்டார்கள்'' என்றார்கள். அங்கிருந்த சிலர் எல்லோரும் மருமகனின் வீட்டில் இருக்கிறார்கள் எனக்கேள்விப்பட்டு அங்கு போனேன். அங்கு சில நாட்கள் இருந்துவிட்டு ஹுனுபிட்டியவில் ஒரு வீட்டை கூலிக்கெடுத்து இருந்தோம். எவ்வளவு காலத்துக்கு பணமின்றி சமாளிப்பது? வேறுவழியின்றி இறுதியாக இந்த அகதிமுகாம் வந்து சேர்ந்தோம். எங்களது வீட்டிலிருந்து எந்தப் பொருளையும் எடுத்துவரவில்லை. உடுத்த உடுப்புடன் தான் வந்தோம். எங்களது வீட்டிலிருந்து வெளியேறி ஓரிருநாட்களிலேயே எங்களது வீட்டு பொருட்கள் எல்லாம் கொள்ளையடிக்கப்பட்டு வீடு தரைமட்டமாக்கப்பட்டிருக்கிறது. எங்களது பகுதியில் மட்டும் ஐநூறுக்கும் மேற்பட்ட வீடுகள் அழிக்கப்பட்டன.

எங்களுக்கு திரும்பிப் போகக்கூடிய எண்ணமே இல்லை. எங்களது பழைய வாழ்க்கை திரும்பக்கிடைக்கப் போவதில்லை. எனவே திரும்பப் போகும் எண்ணமே எங்களுக்கில்லை. எவ்வளவு சுதந்திரமாக எங்களது வாழ்க்கையை நடத்திவந்தோம். எங்கள் வீடு, எங்கள் காணி, எங்களது அயல் வீட்டவர்கள், எங்களுக்கென்று தொழில், நிம்மதியான வாழ்க்கை. இன்று எதுவுமில்லாத சிறு கொட்டிலுக்குள் குறுகி விட்டது எங்களது வாழ்க்கை.

## விலங்குகள் பூச்சிகள் சட்டம் 1994

இறுதியாக முழுமையான தேசப் பாதுகாப்பை
உறுதி செய்வதற்காய்
அவர்கள்
நெருக்கடி கால
விலங்குகள் - பூச்சிகள் கட்டுப்பாடு - ஒழுங்குச் சட்டம்
நிறைவேற்றினர்.
இச் சட்டத்தின் கீழ்
எருமைகள் பசுக்கள்
ஆடுகள் எதுவும்
மந்தைகளாகவோ அன்றி
மூன்றுக்கும் கூடுதலாகவோ
மேய்வதற்றுத் தடை
பறவைகள் சேர்ந்து பறப்பதும்
சட்டவிரோதம்

முன்கூட்டியே ஒப்புதல் பெறாது
கட்டிய மண்கூடுகளை
விட்டு வெளியேறுமாறு
குளவிகளுக்கும் குருவிகளுக்கும் தெரிவித்ததாகி விட்டது.

அதிகாரபூர்வமான
ஒலிபரப்பு உரிமம்
அமைச்சரகத்திலிருந்து
வழங்கப்படும் வரை
தங்கள் இரைச்சல் மிக்க
காலை வழிபாடுகளை
நிறுத்தி வைக்கும்படி
குரங்குகளும் மைனாக்களும்
எச்சரிக்கப்பட்டன

கண்காணிக்கப்படாத
ஒலிபரப்புகளும் வெளியீடுகளும்
நெருக்கடிக் காலத்தில்
கடுமையான அச்சுறுத்தல்கள்
அதேபோல்மரங்கொத்திகள்
தென்னை உச்சியிலிருந்து
செண்பக மரத்துக்குத்
தந்தி மொழியில்
செய்திகள் விடுப்பதற்கும்
தடை
செய்திகள் யாவும்
அதிகாரிகளின்
முழுமையான முன் ஆய்வுக்குட்படவேண்டும்

வதந்தி பரப்புவதாய்
ஜாவாக் குருவிகள்
கூட்டம் கூட்டமாய்க்
கைது செய்யப்பட்டன
சதி செய்வதாய் சந்தேகிக்கப்படுவதால்
பூனைகள் யாவும்

ஒன்பது மணிக்கெல்லாம்
வீட்டிற்குளகளேயே இருந்தாக வேண்டும்
சில் வண்டுகளும் சுவர்க் கோழிகளும்
தாம் ஒலிபெருக்குவதைத்
தணித்துக் கொள்ள வேண்டும்
என எச்சரிக்கப்பட்ட.

முன்னதாகவே குறிப்பிட்டுள்ள நேரங்களில்
வாத்துக்கள் கத்தவோ
வான்கோழிகள் கூவவோ கூடாது
நாய்களின் வாய்கள்
அல்சேசன்கள் டாசன்டுகள்
டெரியர்கள் பாயின்டர்கள்
ஏன் சின்னச் சின்ன சிகுவாகுவா நாய்களின்
வாய்கள் கூட
அடைக்கப்பட்டன என்பதை நான்
சொல்லவும் வேண்டுமோ

பாதுகாப்பு நலன்கள் கருதி
பென்குவின்களும் வரிக்குதிரைகளும்
விதிமுறை சாராத
தம் சீருடைகளைக்
களையுமாறு
கட்டளையிடப்பட்டன.

அபாயகரமான கொம்புகளை
ஒப்படைத்து விடும்படி
மான்களுக்கு ஆணை
உள்ளிருக்கத் தக்க
கூர் நகங்கள் கொண்ட
புலிகளும் ஊனுண்ணிகள் அனைத்தும்
கொலைக் கருவிகளை
மறைத்து வைத்திருந்ததற்காக
சிறைக்குள் விசாரணையின்றித்
தள்ளப்பட்டன.

சட்டவிதி பத்தி 2(பி)
துணை - துணைப்பிரிவு 16இன் கீழ்
மாலை 6முதல் காலை 6வரை
எக்காரணம் கொண்டும்
காற்றுப் பிரிக்க
யானைகளுக்கு அனுமதி கிடையாது.
ஏனெனில் காற்றுப் பிரித்தல்
துப்பாக்கி வேட்டெனக் கருதப்பட்டு
கலவரமேதும் வெடித்துப் பரவலாம்
இச் சட்டம் நிறைவேறி
ஒருமாதமான பின்
பறவைகளும் பூச்சிகளும்
பறந்தன தென் திசையை நோக்கி
விலங்குகள் விரைந்தன
வடபுலம் நோக்கி
காடுகளுக்குக்

கைவிலங்கிடப்பட்டது
மயான அமைதி
அங்கே இப்போது
பாதுகாப்பு முழுமையானது

**சிசில் ராஜேந்திரா**

இப்பத்தியில் வரவிருந்த செய்திகள் கத்தரிக்கோலுக்கு இரையாகிவிட்டன. எனவே, பதிலீடாக இக்கவிதை பிர

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சரிநிகர் SARINIHAR

# சரிநிகர்

# உண்மை சொல்ல விடு !

கடைசியாகக பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் செய்தித் தணிக்கையும் அமுலுக்கு வந்து விட்டது - எதிர்பார்த்தபடியே ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து இறுதியில் ஆளையே கடிப்பது போல என்பார்கள்.

பொதுசன முன்னணி அரசாங்கத்தின் தொடர்பூடகவியலாளர்கள் மீதான இறுதிப் பாய்ச்சல் இது.

முதலில் இந்த அரசாங்கம் பத்திரிகையாளர்களை பொறுப்பற்றவர்கள் என்று சாடியது; பின்னர் அவர்கள் காட்டுக் கழுதைச் சுதந்திரத்தை விரும்புகிறார்கள் என்று கூறி ஒழுக்கக் கோவை ஒன்றைக் கொண்டு வரப் போவதாக மிரட்டியது; தனக்குப் பிடிக்காத செய்தியாளர்களை பதவியில் இருந்து விரட்டியது; (சில சந்தர்ப்பங்களில் பத்திரிகையாளர்கள் மீதான அநாமதேயத் தாக்குதல்கள் இடம்பெற்றதற்கும் அரசுக்குச் சம்பந்தமிருப்பதாகக் கூட தகவல்கள் வந்தன.) இப்போது தணிக்கை என்ற ஆயுதத்தை அது தன் கைகளில் தூக்கியுள்ளது.

ஏற்கனவே இருந்த அரசாங்கங்கள் எல்லாம் செய்த விடயம்தான் இது என்றாலும், இந்த அரசாங்கமுமா என்ற அதிர்ச்சியும் ஏமாற்றமும் பல புத்திஜீவிகளுக்கு ஏற்பட்டிருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது. தமது பலவீனத்தை மறைக்கவும் எழுந்து வரக்கூடிய எதிர்ப்புகளைத் தாமதப்படுத்தவும் எல்லா அரசாங்கங்களும் இதனைக் கையாள்கின்றன. தம்மை தாம் சொன்னவற்றிற்கேற்ப நடக்கும் அரசாங்கங்களாக மாற்ற விரும்பாத எந்த அரசாங்கங்களுக்கும் இது ஒரு தவிர்க்க முடியாத விதிதான்.

சரிநிகருக்கு இந்த முடிவு ஒருபோதும் ஆச்சரியத்தைத் தரவில்லை!

ஆரம்பத்திலிருந்தே இந்த அரசாங்கம் தான் ஏற்றுக் கொண்டதாகக் குறிப்பிட்ட ஜனநாயக விழுமியங்களிலிருந்து மிகவும் தெளிவாக விலகிச் சென்று கொண்டேயிருக்கிறது என்பதை சரிநிகர் தொடர்ந்து சுட்டிக் காட்டிக் கொண்டே வந்துள்ளது.

வெறும் நம்பிக்கைகளையும் தமது சொந்த மன விருப்பங்களையும் அடிப்படையாகக் கொண்டு இந்த அரசாங்கத்தை கண்மூடித் தனமாக ஆதரித்த அப்பாவிப் புத்திஜீவிகளில் பலர் இப்போது இந்த அரசாங்கம் எடுத்து வரும் ஒவ்வொரு நடவடிக்கையைக் கண்டும் அதிர்ச்சியடைகிறார்கள்.

ஆனால், பரிதாபம் என்னவென்றால், செய்திகளையும், தகவல்களையும் அபிப்பிராயங்களையும் தணிக்கைகள் மூலம் கட்டுப்படுத்தி விட்டால் உண்மைகள் வெளியே போய்விட மாட்டாது என்று இந்த அரசாங்கம் நம்புவதுதான்! தனது அரசாங்க உறுப்பினர்களிடமிருந்து தான் இரகசியத் தகவல்கள் வெளியே போகின்றன என்ற உண்மையை அறிந்தபோதும், தனது அரசாங்க உறுப்பினர்களை கட்டுப்படுத்தத் திராணியற்று தகவற் தொடர்புச் சாதனங்களைத் தண்டிக்கிறது இந்த அரசாங்கம். தமது சொந்தப் பலவீனத்தை மூடி மறைக்கச் செய்யப்படும் இந்த வேலையால் வரப் போகும் பாரிய விளைவு என்னவென்றால், ஊர்ஜிதப்படுத்தப்படாத செய்திகள் வதந்திகளாகப் பரவி மிகவும் மோசமான நிலைமையை நாட்டில் உருவாக்கி விடப் போகின்றன என்பதுதான்.

ஆனால், அரசாங்கம் இது பற்றி அக்கறைப்படுவதாகத் தெரியவில்லை. அரசாங்கத்தின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படாதிருக்க வேண்டுமென்றால் தொடர்பு சாதனங்களுக்கு சுதந்திரம் வளங்கப்பட வேண்டும் என்று அரசாங்கத்துள் உள்ள ஒருசிலர் வாதாடிய போதும் யுத்தம் காரணமாக வரும் இராணுவ இழப்புகள் பற்றிய தகவல்களை தொடர்பு சாதனங்கள் வெளியிடுவதன் மூலம் நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்துகின்றன என்ற மறுதரப்பின் குற்றச்சாட்டின் முன் அது அமுங்கிப் போய் விடுகிறது.

## தணிக்கை

இந்த நிலையில் செய்தித் தணிக்கை, ஒன்றும் ஆச்சரியமான விடயமில்லை என்பதில் என்ன தவறு?

செய்தித் தணிக்கைக்கு எதிர்ச்சொல் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் அதாவது இலக்கியம் என்பார்கள். அது ஒரு அடிப்படை மனிதஉரிமை மீறல் விவகாரம் என்றும் குறிப்பிடுவார்கள். அது எதிர்க்கப்பட வேண்டிய ஒன்று என்றும் செய்தித் தணிக்கைகளின் மத்தியில், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் மறுக்கப்பட்ட நிலையில் எந்த ஒரு நாடும் தனது மக்களுக்கு விடுதலையையோ சுபீட்சத்தையோ பெற்று விட முடியாது என்றும் கூறுவர்.

இன்றைய அரசாங்கத்தின் தணிக்கைச் சட்டத்திற்கும் இது பொருந்தும்.

ஆனால், இன்று இந்தத் தணிக்கையை எதிர்ப்பவர்கள் குறிப்பாக கொழும்பு சிங்கள ஆங்கிலப் பத்திரிகைகள் இந்த விடயங்களுக்காக இதை எதிர்க்கவில்லை

வடக்கில் புலிகள் செய்யும் அட்டூழியங்களை வெளியிட முடியாமல் போய்விட்டது என்று அழுகின்றன அவை. இங்குள்ள பத்திரிகைகளின் கையையும் வாயையும் கட்டி விட்டு சர்வதேசப் பத்திரிகையாளர்களுக்கு செய்தி அறிவிக்கும் வாய்ப்பை வழங்குகின்ற இந்தச் சட்டத்தால் யுத்த முனையில் படையினர் படும் அவஸ்தைகளும் புலிகளின் அட்டூழியங்களும் வெளிவருவதற்குப் பதிலாக புலிகளில் தரப்பு செய்திகள் உலகெங்கும் பரவுகின்றன. இது நாட்டுக்கு அபகீர்த்தியையும் தோல்வியையும் தருவதாகும் என்று பிலாக்கணம் வைக்கின்றன அவை.

உண்மையில் இந்தப் பத்திரிகைகள் தணிக்கைக்கு எதிரானவையல்ல. அவை தமது சொந்தத் தணிக்கை மூலமாக பொய்யான கயிறு திரிப்புகளையே இவ்வளவு காலமும் செய்து வந்தன. உண்மைகளை மூடி மறைத்து பொய்யான தகவல்களை வழங்கி சிங்கள மக்கள் மத்தியில் ஒருவகை மாயையை உருவாக்குவதிலேயே அவை பெருமளவு அக்கறை காட்டி வந்தன.

தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதத்தைத் தூண்டுவதும் சிங்கள பௌத்த இனவெறி அடிப்படையில் நின்று யுத்தத்தை வலியுறுத்துவதும் சமாதான முயற்சிகளை எதிர்ப்பதும் இவர்களது கடமைகளாக இருந்தன.

இப்போது அரசு போட்டிருக்கும் இந்தத் தணிக்கையால் இவர்களுக்கு தமது பிழைப்பைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

தணிக்கை ஒழிக என்று கத்துகிறார்கள்.

நேர்மையான நோக்கம் இல்லாவிடினும் இவற்றின் இந்தக் கத்தல்களில் நியாயம் இருக்கிறது!

ஆம், இது ஒடுக்கப்படும் ஒரு மனித உரிமைக்கான குரல்!

சரிநிகர் இந்தக் குரல்களுடன் தனது குரலையும் சேர்த்து ஒலிக்கிறது:

தணிக்கை முறையை உடன் நிறுத்து!

உண்மையை மக்களிடம் சொல்ல விடு

# யாழ்ப்பாண அடையாள அட்டை

## ஆகவே சந்தேகம்

இவர் யாழ் மத்திய கல்லூரியில் கணித ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர். கொழும்பில் தனது மனைவியுடனும் பல்கலைக்கழக மாணவியான மகளுடனும் 1990 இலிருந்து வசித்து வருபவர், 58 வயதுடைய இவர் 13.09.95 புதல்கிழமை காலை மாளிகாவத்தையிலுள்ள பிறப்பு, இறப்பு, பதிவுச் சான்றிதழ் பெறும் அலுவலகத்துக்கு தனது சகோதரியின் மகனது பிறப்புச் சான்றிதழ்ப் பிரதியைப் பெறச் சென்றிருந்தார். யாழ்ப்பாணத்திலிருக்கும் இவரது மருமகனுக்குப் பல்கலைக்கழக அனுமதி கிடைத்திருந்தது. ஆனால் குறிப்பிட்ட திகதிக்கு முன்பாக அனுமதியைப் பதிவு செய்ய வேண்டியிருந்ததால் மாமனார் மூலம் படிவங்களைச் சமர்ப்பிக்கும்படி அவர் எழுதியிருந்தார். பிறப்புச் சான்றிதழ்ப் பிரதியைப் பல்கலைக்கழக விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும் என்பதால்.

இந்த அப்பாவி ஆசிரியர் தனது விண்ணப்பத்தை நிரப்பி அலுவலகத்திலுள்ள வடக்கு - கிழக்குப் பிரிவுக்கான தனியான உத்தியோகத்தரிடம் ஒப்படைத்து அதற்கான பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொண்டு வெளியே வருகையில் சிவில் உடையில் வந்த பொலிஸார் இருவரினால் மாளிகாவத்தைப் பொலிசுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அன்று மாலை உறவினர்கள் பொலிஸ் நிலையம் சென்ற போது ''மோசடி வேலையில் ஈடுபடும் சிலரைப் பிடிக்கப்போனோம். ஆனால் அடையாளம் மாறிக் கைது செய்துவிட்டோம். நாளை விட்டு விடுகிறோம் என்று கூறப்பட்டது.

ஆயினும் மறுநாள் வியாழன் பிற்பகல் 2 மணி அளவில் ஹல்ஸ்டொர்ப் நீதிவான் முன்றில் கொண்டுவரப்பட்டு ஆஜர் செய்யப்பட்டார். ***யாழ்ப்பாண அடையாள அட்டை சிங்களம் பேசத் தெரியவில்லை*** ஆகையால் சந்தேகம் உள்ளது எனக்கூறப்பட்டதன் மேல் 18.09.95 திங்கள் வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

விடயம் இந்த ஆசிரியரது உறவினர் ஒருவருக்குத் தெரியப்படுத்தப்பட்டு, அவர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு தொடர்பு கொண்ட போது சில வசதிகள் மட்டுமே கைதிக்குச் செய்து கொடுக்கப்பட்டன. சட்டத்தரணி ஒருவர் மூலம் பொலிஸார் அணுகப்பட்டனர். '' ஒரு கைவிரல்கள் அளவு ரொக்கம்'' கைமாறியதன் பேரில் பொலிஸார் திங்கள் அன்று தமது வழக்கை வாபஸ் பெற்றதன் மேல் அந்த ஆசிரியர் விடுதலையானார்.

தன்னுடைய வயதுக்கும் ஆன்மீகப் போக்குக்குமே இந்தத் தண்டனை என்றால், சாதாரண தமிழ் இளைஞர்களது உயிருக்கு என்ன உத்தரவாதம் இந்த நாட்டில் என்பது இவரது கேள்வி!

தமிழர்களை 'விடுவிக்க' நினைக்கும் அரசு பதில் சொல்லுமா?

# திருமலை:

## இலட்சுமிப் பிள்ளைக்கு மிரட்டல்

இலட்சுமிப்பிள்ளை (வயது 39) அவரது வீட்டில் வைத்து பட்டப்பகலில் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டதை அடுத்து வெள்ளைவான் விவகாரம் திருகோணமலையில் சூடு பிடித்துள்ளது. உவர்மலையில் வீட்டைச் சோதனையிட வேண்டும் என்று கூறிப் புகுந்த பைசல், கான் என்ற இருவர் அந்தப் பெண்ணைக் கதறக் கதறப் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கியுள்ளனர். அவர்களது சாச்சிக்குச் (சித்தி) சமனான வயதொத்த இந்தப் பெண்ணிடம் இவர்கள் மிருகத்தனமாக நடந்து கொண்டிருக்கிறார்கள். இச்சம்பவம் ஒகஸ்ட் மாத இறுதியில் இடம்பெற்றது.

விடயம் வெளியே தெரிய வந்ததும் பைசலும், கானும் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். ஆட்கடத்தலிலும் அடாவடித்தனங்களிலும் ஈடுபட்ட வெள்ளைவான் கோஷ்டியின் இத் துணிகர நடவடிக்கை குடும்பப் பெண்களைக் கிலி கொள்ள வைத்துள்ளது. இவர்கள் இருவரும் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து வெளியேறி இப்போது காட்டிக் கொடுத்து வாழ்பவர்களெனக் கூறப்படுகிறது. இவர்கள் நீதிமன்றத்திற்கு கொண்டுவரப்பட்டதை அடுத்துப் பொலிஸார் ஆட்சேபனை தெரிவிக்காததால் தலா 5,000/= பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கின்றனர்.

வெளிநடவடிக்கைகள் இவ்வாறிருக்க பைசல், கான் ஆகியோரின் தோழர்கள் எனக் கருதப்படுவோரால் இலட்சுமிப் பிள்ளை தொடர்ந்தும் மிரட்டலுக்கு ஆளாக்கப்பட்டுள்ளார். இலட்சுமிப்பிள்ளைக்குச் சார்பாக யாரும் சாட்சியங்கள் கூறாதிருக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் அப்பெண் துர்நடத்தை உள்ளவர் என்று நிரூபிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிகிறது. இதில் வேடிக்கை என்னவென்றால் பைசல், கான் இருவருக்கும் சார்பாக முன்னின்று உழைப்பதில் பொலிஸ் அதிகாரியும் ஈடுபட்டிருக்கிறார் என்றும், இவர் தனது கடமையைச் செய்தாலே பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு பெரிய பலமாக இருந்திருக்கும் என்றும் நம்பப்படுகிறது.


# தேசிய இனப்பிரச்சினையும் அரசியல் தீர்வும்

25 ஒக்டோபர் 7 சனி பிற்பகல் 2.30 மணிக்கு

மாவட்ட கூட்டுறவு சங்க மண்டபம்

கிறீன் வீதி, திருமலை

**தலைமை:** எம். ஐ. ஏ. ஜபார்

தலைவர், சமூக அபிவிருத்தி நிலையம்

**உரைகள்:**

◎ **சிறுபான்மை இனங்களும் சுயநிர்ணய உரிமையும்**
வீ. ரி. தமிழ்மாறன்
சிரேஷ்ட விரிவுரையாளர் கொழும்பு பல்கலைக்கழகம்

◎ **இலங்கை அரசியலமைப்பின் முரண்பாடுகளும் சீர்த்திருத்த பிரேரணைகளும்**
எஸ். பாலகிருஷ்ணன்
இணைப்பாளர் அசர யாப்பு சீர்த்திருத்த இயக்கம்

◎ **சிறுபான்மை இனங்களும் அதிகாரப்பரவலாக்கலும்**
எஸ். மனோரஞ்சன்

◎ **மலையக மக்களும் அரசியல் தீர்வும்**
லோரன்ஸ்
மலையக மக்கள் முன்னணி

◎ **அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான அரசின் யோசனைகளும் அதன் போதாமைகளும்**
க. சுரேஷ்
செயலாளர் நாயகம், ஈ. பி. ஆர். எல்.எப்.

◎ நன்றியுரை: க. அருள்நாதன்
செயலாளர், சமூக அபிவிருத்தி மன்றம்

**அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.**


பிரதம ஆசிரியர்: சேரன். எல்லாத் தொடர்புகட்கும்: இல.4, ஜெயரட்ன மாவத்தை, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05. 593615

வெளியீட்டாசிரியர்: ச.பாலகிருஷ்ணன், மேர்ஜ் 18/2 அலோசாலை, கொழும்பு 03. அச்சுப்பதிவு: நவமக அச்சகம்.334 காலி வீதி இரத்மலானை

95.10.03

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்